கல்கி

KALKI 23.6.91 ரூ. 2.50

வெற்றிலைச் செல்வம்





தெளிவற்ற பிரிண்ட் + சிறிய திரை + தொடர்ந்து படங்கள் = களைப்புற்ற கண்கள். அவற்றை தேய்த்து விட்டுக் கொள்வதினால் பயன் ஒன்றும் இல்லை. களைப்புற்ற கண்களுக்குத் தேவை பாதுகாப்பான, மென்மையான, அக்கறை மிக்க ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத். இதை ஐ-கப்பில் ஊற்றி கண்களை சுழற்றிக் கழுவுங்கள். ஆப்ட்ரெக்ஸ் கண்களின் களைப்புணர்ச்சியை அகற்றி இதமளிக்கிறது. மேலும், அவற்றை மென்மைப்படுத்துகிறது. இமைப் பொழுதில் கண்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும் ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத் உலகெங்கும் பயன்படுத்தப்படுகிறது.



இமைப் பொழுதில் புத்துணர்ச்சி பெற்ற கண்கள்

ஆ ப் ட் ர க் ஸ் ஐ லோ ஷ ன்

Trikaya Grey BC 3 91 TAM



✤ கார்த்திகேயன் தலைமையில் புலனாய்வுத் துறை அமைதியாகப் பணியாற்றி, ராஜீவ் கொலை கேஸில் கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கிறது.

கார்த்தி

மே மாதம் 22 ஆம் தேதி டி.வி.யில் ராஜீவ் காந்தி பற்றிய செய்திப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார் டி. ஆர். கார்த்திகேயன். போன் மணி அடித்தது. பேசியவர் மத்திய உள்துறைச் செயலர்: ''ஹலோ கார்த்திகேயன்; ராஜீவ் காந்தி கொலை பற்றிய விசேஷ புலனாய்வுக் குழுவுக்கு உங்களைத் தலைவராகப் போட்டிருக்கிறோம்.''

கார்த்திகேயனுக்குப் புல்லரித்தது. இந்தப் பணி தமக்கு விடப்பட்ட சவால் என்று மனத்துக்குள் எண்ணியபடி மறுநாள் பொறுப்பேற்றுக் கொண்டார், இன்ஸ்பெக்டர் ஜெனரல் கார்த்திகேயன்.

'கார்த்தி' என்று நண்பர்களால் செல்லமாக அழைக்கப்படும் கார்த்திகேயனுக்குப் போலீஸ் துறையில் 27 வருட அனுபவம். இன்று 51 வயதான கார்த்தியை அவர் அப்பா பரம்பரைத் தொழிலான விவசாயத்தில்தான் ஈடுபடுத்தப் பார்த்தார். பையன் நவீன விவசாய முறைகளைக் கற்று வரட்டுமே என்று விவசாயப் பட்டதாரி ஆக்கினார். அவரது கிராமத்தில் கார்த்திதான் முதல் பட்டதாரி.

ஒரு வருடம் பூர்வீக நிலத்தில், பலவித சோதனைகள் செய்து புதிய சாகுபடி முறைகளை அறிமுகப்படுத்தினார் கார்த்தி.

ஆனாலும் கார்த்திக்குத் திருப்தியில்லை. 'வாழ்க்கையில் தாம் சாதிக்க வேண்டியது இன்னமும் ஏதோ இருக்கிறது' என்ற நினைப்பு உந்த, சென்னை வந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பின்னர் கோயமுத்தூருக்கு வந்து வக்கீல் தொழிலில் ஈடுபட்டார்.

வக்கீல் தொழிலும் மனநிறைவு தராது போகவே மத்திய சர்வீஸ் பரீட்சை எழுதி, கர்நாடக காவல் துறையில் சேர்ந்தார். ஒரு மாறுதலான, கம்பீரமான வாழ்க்கை கார்த்திக்கு ஆரம்பித்தது. இது அவருக்குப் பிடித்தும் இருந்தது.

மொழிப் போராட்டங்களில் பாதிப்புக்கு உள்ளான தார்வார், பெல்காம் மாவட்டங்களில் காவல் துறை கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். இதன் பிறகு சட்டம் ஒழுங்கு துறை துணைக் கமிஷனராகக் கார்த்தி பணியாற்றியதைக் கர்நாடகாவில் யாரும் மறக்க மாட்டார்கள். விபச்சாரம், போதைப் பொருள் என்று கிரிமினல்களின் சொர்க்கமாக இருந்த பெங்களூரை அடியோடு மாற்றிக் காட்டினார். ஆறு மாத காலம் நடந்த பொதுத் துறை ஊழியர்களின் போராட்டங்களைச் சமாளித்து, நிறுவனங்களின் சொத்துக்களைக் காத்த பெருமையும் கார்த்திக்கு உண்டு.

கர்நாடக முதல்வராக இருந்த குண்டுராவுடன் கார்த்திக்கு இருந்த நட்பு அலாதியானது. காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க குண்டுராவுக்குக் கார்த்தி உதவினார் என்று அப்போது பரவலாகக் குற்றச்சாட்டு கூறப்பட்டது.

1983 இல் ஹெக்டே பதவிக்கு வந்ததும், ஒரு மணி நேரத்துக்குள்ளாக கார்த்திகேயன் விடுமுறையில் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன் பின்னர் ஆஸ்திரேலியாவில் டீ போர்டு (Tea Board) அலுவலகத்தில் உத்யோகம். இந்தியா வுக்குத் திரும்பி வந்ததும் மத்திய பாதுகாப்புப் படையில் ஐ. ஜி. பதவி காத்திருந்தது.

''கார்த்திகேயன் புலனாய்வுப் பணி அனுபவம் இல்லாதவர். அவரைத் தலைவராக நியமித்தது சரியல்ல'' என்று போலீஸ் வட்டாரத்தில் ஒரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், ''சிறப்புப் புலனாய்வுக் குழு தலைமைப் பதவி என்பது, பலவித புலனாய்வு ஏஜென்ஸிகளிடம் இருந்து வரும் தகவல்களைத் தொகுத்து, விசாரணை சரியான பாதையில் செல்ல ஆலோசனை தருவதுதான். அதற்குக் கார்த்திகேயன், மிகவும் பொருத்தமானவர்'' என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். கூடிய விரைவில் இவர்களின் கூற்றை, கார்த்தி மெய்ப்பிப்பார் என்று நம்பலாம்.

– தில்லப்பா

✤ ஸ்ரீபெரும்புதூரில் கூடியிருந்த கூட்டத்தில் சுபா, நளினி என்ற இந்த இரண்டு பெண்மணிகளும் இடம்பெற்றிருந்தார்கள்: பின்னர் இவர்களைக் காணவில்லை என்று புலனாய்வுத் துறை கண்டறிந்து இவர்களைப் பற்றியோ, முருகன் அல்லது தாஸ் என்பவர் குறித்தோ தகவல்கள் தெரிவிப்போருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு அறிவித்திருக்கிறது.




கல்கி

1991 ஜூன் 23
மலர் : 49 இதழ் 47
பிரஜோத்பத்தி ஆனி 9

தேர்தல் முடிவுகள்

எல்லோருமே எதிர்பார்த்த விதமாகத்தான் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. மத்தியிலே இ. காங்கிரஸ் ஆட்சியும், தமிழ்நாட்டில் அ. இ. மு. க. ஆட்சியும் மலர்கின்றன. வென்றவரை வாழ்த்தி, ஆட்சி பீடத்துக்கு வரவேற்கிறோம். தோல்வி கண்டவரை, 'மனமுடைந்து போக வேண்டாம்; உங்கள் முயற்சி வீணாகாது; உங்களுக்கும் ஒரு காலம் வரும்' என்று தட்டிக் கொடுக்கிறோம். வென்றவர்கள், 'எதனால் வென்றோம்?' என்றும், தோற்றவர்கள், 'ஏன் தோல்வி அடைந்தோம்?' என்றும் எண்ணிப் பார்க்க வேண்டிய சமயம் இது.

நாற்பத்திநாலு ஆண்டு சுதந்திரத்தில், மிகப் பெரும்பாலான காலகட்டத்தில் மத்தியில் காங்கிரஸ்தான் ஆட்சியில் இருந்திருக்கிறது. நாட்டின் முன்னேற்றமோ நத்தை வேகத்தில்தான் நகர்ந்திருக்கிறது. இது வாக்காளர்களுக்குத் தெரியும். எனவே காங்கிரஸ் ஏதோ பெரிதாகச் சாதித்துவிடப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் மக்கள் அதற்கு வாக்களித்து விடவில்லை. முன்பு எமர்ஜென்சிக்காக இந்திரா காந்தியைத் தண்டித்த மக்கள், ஜனதாவிடம் ஏமாற்றமடைந்து மீண்டும் இந்திராவுக்கே வாய்ப்புத் தந்தார்கள். அதேபோல்தான் இப்போதும், போஃபோர்ஸுக்காக ராஜீவைத் தண்டித்த மக்கள், தேசிய முன்னணியிடம் ஏமாற்றமடைந்து, மீண்டும் ராஜீவுக்கு வாய்ப்புத் தர எண்ணினார்கள். அவரது படுகொலை, அனுதாப அலையாக மாறி, காங்கிரஸுக்கு உதவியது - முன்பு இந்திராவின் படுகொலை அனுதாப அலையை உருவாக்கி, ராஜீவ் மகத்தான வெற்றி பெற உதவியது போல. அவ்வப்போது நிகழும் சில மரணங்கள்தான் காங்கிரஸுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்பது பரிதாப நிலை. இதைப் புரிந்து கொண்டு காங்கிரஸ் தலைமை, கட்சியைப் பலப்படுத்த வேண்டும். உட்கட்சிப் பூசல்களைத் தவிர்த்து, கட்சிக்குள் ஜனநாயகத்தை வளர்த்து, சமபலத் தலைவர்களைத் தோற்றுவிக்க வேண்டும். பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர் பிறரையும் அணைத்துச் சென்று ஒற்றுமை காக்கட்டும். நாட்டின் பிரச்னைகள் கவனிப்பாரின்றிக் கதறிக் கொண்டிருக்கின்றன. தேசத்தின் தங்கக் கையிருப்பு அடமானப் பொருளாகும் அளவில் பொருளாதார நிலை பயங்கரமாகி விட்டது. ஒரு சிக்கலான கால கட்டத்தில் பதவி ஏற்கும் புதிய பிரதமர், அடக்கமும் விவேகமும் காட்டி நல்லாட்சி வழங்கட்டும்.





தமிழ்நாட்டில் அ. தி. மு. க. அடைந்த வெற்றி, அதன் கொள்கைகளுக்கோ, திட்டங்களுக்கோ, கிடைத்த வெற்றியல்ல. எம். ஜி. ஆர். என்ற தனி நபரின் செல்வாக்குக்குக் கிடைத்த வெற்றி. அவருடன் சேர்ந்து நடித்ததில் மக்கள் மனத்தில் நிலைபெற்றுவிட்ட ஜெயலலிதா என்ற தனி நபரின் வெற்றி. ஜெயலலிதாவுக்கு ஆட்சி அனுபவம் கிடையாது என்பது மட்டுமல்ல; எதிர்க்கட்சித் தலைவியாகச் சட்டமன்றத்தில் கூடப் போதிய அனுபவம் பெற முடியாது போயிற்று. அதற்காக அனுபவம் உள்ளவர்கள்தான் ஆட்சிக்கு வர வேண்டும் என்று கூறவும் முடியாது. நல்லாட்சி வழங்க முக்கியத் தேவை நல்லது கெட்டதைப் பகுத்தறியும் திறன். யதேச்சாதிகாரப் போக்குக் காட்டாமல், அதிகாரிகளும், சக அமைச்சர்களும் கூறுவதைக் கேட்டுக் கொண்டு, பிரச்னைகளை அலசி, சரியான முடிவுக்கு வந்தால் சிறப்பான ஆட்சி வழங்க இயலும். வாக்குறுதிகளை அள்ளி வீசுவது சுலபம்; நிறைவேற்றுவது ரொம்பக் கஷ்டம் என்பதை ஜெயலலிதா சீக்கிரமே புரிந்து கொள்வார். மத்தியில் தோழமைக் கட்சியான காங்கிரஸ் ஆட்சி அமைவது அவருக்குப் பக்க பலம். ஆனால் தமிழக சட்டமன்றத்தில் அநேகமாக எதிர்க்கட்சியினரே இல்லாத நிலையில், காங்கிரஸ், எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதை மறவாமல் இருக்கட்டும்.

பி. ஜே. பி. அடைந்த பின்னடைவில் ஆச்சர்யம் ஏதுமில்லை. அதற்கு முக்கிய காரணம் பப்ரி மஸ்ஜித் விஷயத்தில் அவர்கள் மேற்கொண்ட தவறான போக்கு. பெரும்பாலான மக்கள் சண்டை பூசலின்றி அமைதியாக வாழவே விரும்புகிறார்கள் என்பதை மறந்து, அத்வானி ரத யாத்திரையின் போது திரண்ட கூட்டத்தைப் பார்த்து ஏமாந்தார்.

ஜனதா தளம் பிளவுபட்டுத் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டது என்றால், தி. மு. க. வும் தனது தவறான கொள்கைகள் - குறிப்பாக மதுவிலக்கு ரத்து; விடுதலைப் புலிகளிடம் பரிவு - தனக்குப் பாதகமாக முடிந்திருப்பதை இப்போதாவது உணர்ந்திருக்கும். ஏற்கெனவே மைனாரிட்டி வோட்டில்தான் அது பதவிக்கு வந்திருந்தது என்றாலும் இன்றையப் படுதோல்விக்கு அதன் ஆட்சியில் மக்கள் கண்ட குறைபாடுகளே காரணம்.

தமிழ்த்திரு நாடுதன்னை பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

◆ டாக்டர் கண்ணன்

◆ கோடிக்கால்



லலிதா சஹஸ்ரநாமத்தில் 'தாம்பூல பூரிதமுகி' என்று ஒரு வரி வருகிறது. தேவி பார்வதியானவள், எப்போதும் தாம்பூலம் தரித்து, இன்முகத்துடன் காட்சியளிக்கிறாள். 'தாம்பூலம் சமர்ப்பயாமி' என்று வெற்றிலையை வைத்துத்தான் பூஜை செய்கிறோம்.


சரியாக வெற்றிலை மடித்துத் தராத மனைவியின் மீது கோபம் கொண்டு, பிறந்தகத்துக்கு, அவளை அனுப்பிய கணவன்மார்கள் உண்டு என்று சங்க இலக்கியங்களிலிருந்து நமக்குத் தெரிகிறது!

ராணி மங்கம்மாள் ஒருமுறை இடது கையால் வெற்றிலை போட்ட தோஷத்தைப் போக்க ஆயிரம் பேருக்குச் சமபந்தி போஜனம் நடத்தினாராம்!

வெற்று இலைதான் வெற்றிலையாக மருவி வந்திருக்கிறது. ஆனால் இந்த வெற்று இலை சதா ஈரப்பசையுடன் இருப்பதால் சிறு பூச்சிகள் இருக்க வாய்ப்புண்டு. துடைத்து விட்டுத்தான் போட வேண்டும்.

தமிழர்கள்தான் வெற்றிலைப் பிரியர்கள் என்று இல்லை. வங்காளிகளும், உத்தரப்பிரதேசத்துக்காரர்களும் இந்த விஷயத்தில் நம்மோடு போட்டி போடுகிறார்கள். இந்தியாவில் சுமார் நாற்பது கோடி நபர்களுக்கு வெற்றிலைப் பழக்கம் உண்டு என்கிறது சமீபத்திய புள்ளி விவரம்.

தென்னிந்தியாவில் பயிராகும் வெற்றிலைகள் உருவத்தில் சிறியவை. வடக்கே இருபது செ.மீ., நீளம் உள்ள வெற்றிலைகள் பயிராகின்றன. கிட்டத்தட்ட



வெற்றிலைச் செல்வம்

முப்பது வகையான வெற்றிலைகள் இந்தியாவில் கிடைக்கின்றன.

வெற்றிலைக்குத் தாவர இயல் (Botanical) பெயர் பைப்பர் பீடல்' (Piper betel). பெயர் வைத்தவர் தாவர இயலின் தந்தை என்று சொல்லப்படும் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த லினேயஸ் என்ற விஞ்ஞானி. மலேசியாவில் 1753-ல் வெற்றிலைக்குப் பெயர் வைத்தார் லினேயஸ்.

"வெற்றிலைச் சாறில், சுண்ணாம்பு, இரும்புச் சத்து, வைட்டமின் ஏ மற்றும் சி ஆகியவை அடங்கியிருக்கின்றன. தவிர, உடலில் உள்ள சுரப்பிகளையெல்லாம் தூண்டி விடக் கூடிய என்ஸைம்களும் இருக்கின்றன. வெற்றிலைச் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இருமல் நிற்கும். காது வலிக்கு வெற்றிலைச் சாறு கேட்கும். வெற்றிலையில் விளக்கெண்ணெயைத் தடவி மென்று தின்றால் மலச்சிக்கல் சரியாகும். பிரசவம் முடிந்து, வெற்றிலை சாப்பிடும் பெண்களுக்குப் பால் நன்றாகச் சுரக்கும்; ஜீரண சக்தி அதிகரிக்கும். குரல் வளத்துக்கு வெற்றிலை போடலாம்" என்கிறார் தாவர இயல் ஆய்வாளர் ரகுபதி. ஆனால், வெற்றிலையால் பற்கள் கறையாவது ஒரு குறைபாடுதான்.

வெற்றிலை பயிரிடுவது என்பது சரியான 'நச்சு' வேலை. நிறையத் தண்ணீர் வசதி, குறைவான உஷ்ணம், நல்ல உரம் - இவை தேவை என்பதோடு, தண்டழுகல், வேரழுகல், வாடல் நோய் என்று வெற்றிலையைப் பல நோய்கள் தாக்கும். இவை வராமல் தடுக்க, தினசரி கண்காணிப்பு தேவை.









இப்படிப் பல சிரமங்கள் இருப்பதால், வெற்றிலை பயிரிடுவோர் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது. சென்னை நகருக்கு அருகே உள்ள மாங்காட்டில், வெற்றிலைக் கொடிக்கால்கள் எல்லாம், வீட்டு மனைகளாகக் கூறுபோடப்பட்டு விட்டன. இந்த நிலையில் வெற்றிலைச் சாகுபடியை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, வெற்றிக் கொடி நாட்டி வருகிறார் கும்பகோணம் அருகிலுள்ள தேவனார்விளாகம் கிராமத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். கண்ணன்.

ரசாயனத்தில் ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்ற கண்ணன், கல்லூரி ஆசிரியர் பதவியை உதறி எறிந்து விட்டு, விவசாயத்தில் குதித்திருப்பவர். தமது அண்ணன், தம்பிகளின் நிலத்தையும் சேர்த்துக் கொண்டு பத்து ஏக்கர்களில் கொடிக்கால் போட்டிருக்கிறார்.

''எங்கள் குல வழக்கப்படி வெற்றிலைச் சாகுபடி செய்யக் கூடாது என்று சொன்னார்கள். முன்பு கடல் தாண்டிச் செல்லக் கூடாது என்று சொல்லவில்லையா; அது போலத்தான் இதுவும். ஆனால், துணிந்து எதுவும் செய்யும் வழக்கமுள்ள நான், மரபை மீறினேன். கார் எடுத்துக் கொண்டு தமிழகத்தில் வெற்றிலைச் சாகுபடி செய்யும் இடத்துக்கெல்லாம் சென்று பார்த்து வந்தேன். 'கிணற்றிலே விழுந்தப்புறம் நீச்சல் கத்துண்டான்' என்று சொல்வார்களே, அது போல அனுபவத்தில் பல விஷயங்கள் கற்றேன்.

''என்னிடம் மாடுகள் இருந்ததால், ஊடுபயிராக அகத்தியைப் போடுவது என்று தீர்மானித்தேன். அகத்தி நாற்பத்தைந்து நாட்களில் இடுப்பளவு வளர்ந்து விடும். அதில் வெற்றிலைக் கொடி பற்றிக் கொண்டு ஏற வசதியாக இருக்கும். முருங்கை, மற்றும் வாழையையும் ஊடு பயிராகப் போடலாம்.

கொடிக்கால் போட்டு விட்டால் தினசரி ஐந்நூறு ரூபாய் செலவாகும். கிடங்கு வெட்டி கொடிக்கால் மேடையைத் தயார் செய்யணும். மேடையை நன்கு களி மண்ணால் மொழுகி, ஓரங்களில் வரிசைக்கு இரண்டு அகத்தி செடி போடணும். அந்தச்செடிகளுக்கு இடையில்தான் வெற்றிலை போடணும். அப்போதுதான் பற்றி ஏற வசதியாக இருக்கும். வெற்றிலைக் கொடிக்கு விதை கிடையாது. பதியன் முறையில் தான் நட வேண்டும். பூ, காய், பழம் என்று எதுவுமில்லாத ஒரு தாவரம் இது. நட்ட நாற்பத்தைந்தாவது நாளில் பதியன் துளிர்க்கும். அகத்தி மரம் வளர, வளர, மூங்கில், சவுக்கு இவைகளைப் பயன்படுத்தி மேடைக்கு மேடை இருக்கும் அகத்தி மரங்களை வளைவாக இணைத்து, கொடிக்கால் போடணும். கோரை கட்டுதல், (வெற்றிலை கொடி களுக்களை அகத்தி மரத்தோடு கட்டுவது) விட்டம் போடுதல், (கொடி படர வகை செய்து தருவது) பவுச் கட்டுதல், (முக்கியமான தண்டுப் பகுதின்ய நாலைந்து சுற்று கீழேயே சுற்றி வைத்துக் கொடி உயர வளர்வதற்கு வழி செய்தல்), என்று வேலைகள் இருந்து கொண்டே இருக்கும்.

கொடிக்கால் மேடையைச் சுற்றி உள்ள கிடங்குகளில் (பள்ளங்களில்) சதா தண்ணீர் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அந்தப் பள்ளங்களில் இருந்து மேடையில் உள்ள வெற்றிலைக் கொடிகளுக்குத் தண்ணீர் இறைத்து விட வேண்டும். 'கொடி சாயாது கட்டி, காயாது இறைக்கணும்' என்று பழமொழியே இருக்கிறது. அகத்தி மரம் இருப்பதால், மிதமான உஷ்ணம் வெற்றி லைக் கொடிக்குக் கிடைக்கும்.

''நான் ரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்துகளை உ ப யோ க ப் ப டு த் து வ தில்லை'' என்று கூறி, நம்மை ஆச்சர்யப்பட வைக்கிறார் கண்ணன். மாட்டுச் சாணம், வேப்பம் புண்ணாக்கு என்று இயற்கை உரம்தானாம்.

''காற்று, மழை என்றால் வயிற்றைக் கலக்கும். காற்றடித்தால் எல்லா கொடிக் கால்களும் சரிய வாய்ப்பு உண்டு. நிறைய மழை பெய்தால் கிடங்குகளில் நிறையத் தண்ணீர் தேங்கி, மேடையில் பயிரிடப்பட்டிருக்கும் வெற்றிலை அழுக வாய்ப்புண்டு. வெற்றிலைச் சாகுபடியில் இது ஒரு பெரிய ரிஸ்க்.

''ஒரு ஏக்கரில் கொடிக்கால் போட்டால் சுமார் எண்பதாயிரம் ரூபாய் செலவாகும். எட்டு மாதம் கழித்துத்தான் பணம் திரும்பி வர ஆரம்பிக்கும். காரணம், அப்போதுதான் வெற்றிலை கிள்ளத்தக்க அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கும்! எட்டாவது மாதத்திலிருந்து ஒன்னரை வருடம் வரை வருமானம் நன்றாகவே வரும். பின்னர் இலைகளின் தரமும், வளர்ச்சியும் குன்ற ஆரம்பிக்கும். வருமானமும் குறையும்.



உங்கள் நம்பகமான ஃபாரெக்ஸ் இப்போது, சுவையிலே சிகரம்!

உங்கள் குழந்தைக்கு நான்கு மாதம் ஆகும்போது அவனுக்கு புதிய சுவைமிக்க ஃபாரெக்ஸ் துவக்குங்கள். 3 முதல் 4 தேக்கரண்டி வெது வெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி ஃபாரெக்ஸ் கலந்து கொடுங்கள். ஃபாரெக்ஸ் சுவை மிக்கது. முன்னைவிட அதிக ஊட்டச்சத்து மிக்கது.



- சுவை மிக்கது
- ஊட்டச்சத்து மிக்கது

ஃபாரெக்ஸ்® - சுவையுடன் வளரும் வழி.

GX/66/21.3 TML



● டாக்டர் வேலுச்சாமி

வெற்றிலைக்குப் பல சிறப்பியல்புகள் இருப்பதால் அதைச் செல்வம் என்று அழைப்பது நியாயமே. ஆனால் அதனுடன் உட்கொள்ளப்படும் பாக்கும் புகையிலையும் நிச்சயமாக உடல்நலத்துக்கு ஊறுவிளைவிப்பவை.

புகையிலையால் கான்சர் உண்டாகும் வாய்ப்புக்கள் அதிகம் என்பது நிரூபணமான உண்மை.

''பாக்கு அதிகம் உண்பதால் நிச்சயம் சோகை உண்டாகும். அதனால் பாக்கைத் தவிர்த்து, காசிக் கட்டி, சுக்கு, கிராம்பு சேர்த்துப் போட்டுக் கொள்ளலாம். இந்தக் கலவை பல்லுக்கும் நல்லது. சுக்கும் கிராம்பும் ஜீரணத்துக்கும் உதவும்... அல்லது வெற்றிலையுடன் கிராம்பு, சிறிது ஜாதிக்காய், துளி பச்சைக் கற்பூரம், ஏலம் போன்றவற்றைச் சேர்த்துப் போட்டுக் கொள்ளலாம். கலவையுடன் மணமாகவும் இருக்கும்'' என்கிறார் சித்த மருத்துவர் டாக்டர் ஜி. வேலுச்சாமி.

– வைதேகி தேசிகன்

இரண்டரை வருடம் முடிவதற்குள் பயிரின் ஆயுள் முடிந்து விடும். அதற்குள் பூச்சி அடிப்பது, கொடிக்கால் சாய்வது என்று எந்த ஆபத்தும் இல்லாமல் இருந்தால் போட்ட பணத்துக்கு இரட்டிப்பாய் வருமானம் வரும்.''

கரும்பச்சை நிறமுள்ள கும்பகோணம் வெற்றிலை ஒரு ஏக்கரில், வெள்ளை வெற்றிலையை விட அதிகம் விளைந்தாலும் அதற்கு மார்க்கெட்டில் கிடைக்கும் விலை குறைவுதான். கண்ணன் பயிரிடுவது வெள்ளை வெற்றிலை. தினமும் மாலை பண்ணைக்கே வியாபாரிகள் வந்து வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். ''பயிரிலிருந்து இலை கிள்ள ஆரம்பிச்ச உடனேயே தினமும் பணம் பார்க்கலாம். நான் தினமும் குறைந்தது 600 கவுளி (60,000 வெற்றிலை) விற்கிறேன். இலை கிள்ளும், மற்றும் தண்ணீர் இறைக்கும் வேலையாட்கள் கூலி, உரம் என்று கைச் செலவுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது இந்தப் பணம்'' என்கிறார் கண்ணன்.

இவரைத் தேடிப் பல வங்கி அதிகாரிகள் டெபாஸிட் நோக்கத்தோடு வந்தாலும் ''வெற்றிலைச் சாகுபடிக்கு நீங்கள் ஏன் நிதியுதவி செய்யக் கூடாது'' என்று இவர் கேட்ட மாத்திரத்தில் சாக்கு போக்குச் சொல்லி நழுவி விடுகிறார்களாம்!

''பொதுவாக வியாபாரக் கேந்திரங்களில் வெற்றிலை ஏலம் எடுக்கும் தொகையை வைத்துக் கவுளிக்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது. பங்குனி முதல் ஆனி வரையும் மீண்டும் தை மாதத்திலும் கவுளி மூன்று ரூபாய்க்கு மேல்தான் போகும். மற்ற மாதங்களில் ஒரு ரூபாய்க்குச் சரிந்து விடும். அப்போது வியாபாரி சொல்வது தான் விலை!'' என்கிறார் கண்ணனின் வெற்றிலைத் தோட்டத்தைக் கவனித்துக் கொள்ளும் உதவியாளர் சீனு.

''உழவன் கணக்கு பார்த்தா' பழமொழி வெற்றிலைச் சாகுபடிக்கும் பொருந்தும். எங்ககிட்டேயிருந்து வாங்குகிற வியாபாரி ஒரு கவுளிக்கு ஒரு ரூபாய் லாபம் வைத்து விற்பான். எங்களுக்கு அந்த அளவு லாபம் கிடைக்காது'' என்கிறார் சீனு.

மொத்த வியாபாரிக்குக் கொள்ளை லாபம் என்பதை மறுக்கிறார் சென்னையில் மொத்த வியாபாரம் செய்யும் யுகலிங்கம். ''எங்களுக்கு ஒரு கவுளியில் எட்டணா நின்றால் அதிகம். ஆனால் சில்லறைக் கடைகளில் லாபம் ஒரு கவுளிக்கு இரண்டு ரூபாய் கூட இருக்கும்'' என்று சொல்கிறார் அவர்.

''ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட ஐம்பது வெற்றிலைகளுக்கு மேல் நான் போடுகிறேன். வாயில் வெற்றிலைச் செல்வம் இல்லாவிடில் எனக்கு மூளை வேலை செய்யாது. ராஜீவ் காந்தி இறந்த போது இரண்டு நாட்கள் வெற்றிலை கிடைக்காமல் திண்டாடிப் போனேன்'' என்கிறார் அச்சகம் வைத்திருக்கும் உப்பிலியப்பன். இவரைப் போன்று லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள்.

– ப்ரியன்.

அட்டை வண்ணப்படம் : உத்ரா

அட்டையில் : விஜயலக்ஷ்மி விஜயகுமார், மொத்த வியாபாரி அமீர்.

படங்கள் : ராஜன்



பார்த்தால் சாதாரணக் குடி தண்ணீர் போல்தான் இருக்கிறது. ஆனால் ஒரு பாட்டிலின் விலை எட்டு ரூபாய்! 'மினரல் வாட்டர்' என்ற பெயருடன் உடையாத பிளாஸ்டிக் பாட்டில்களில் விற்கப்படும் இந்தத் திரவத்தின் சிறப்பு என்ன...?

பிஸ்லேரி மினரல் வாட்டரைச் சென்னை நகரத்தில் விநியோகம் செய்யும் ஹெக்டர் டேவிட் அண்ட் கோ நிறுவனத் தின் மேனேஜிங் பார்ட்னர் ஜே. ஏ. பாலச் சந்திரனிடம் கேட்டோம்:

''தூய தண்ணீருக்குச் சில பிரத்யேகக் குணங்கள் அமைந்திருக்க வேண்டும். அதிலுள்ள கனிமங்களின் சேர்க்கை ஒரு குறிப்பிட்ட அளவில் அமையப் பெற்றி ருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலும் அப்படி இருப்பதில்லை. ஊற்றுத் தண்ணீரை (Spring water) எடுத்து ஆராய்ந்து, அதில் சரியான விகிதத்தில் அமையப் பெறாத கனிமச் சேர்க்கையைக்



கூட்டியோ குறைத்தோ சீர்செய்கிறார்கள். இதைத்தான் மினரல் வாட்டர் என்று அழைக்கிறார்கள். இதை மிகத் தூய்மை யான முறையில் தயாரித்து, சுத்த மான பாட்டில்களில் நிரப்பி சீல் செய்து தான் எட்டு ரூபாய்க்கு விற்கிறார்கள்.

''பாட்டிலில் அடைக்கப்படும் முன் னர் தண்ணீர் இத்தாலிய முறைப்படி பெரிய பெரிய குழாய்களில் சுத்திகரிக்கப்படுகிறது. (Italian process of silver sterilization).

''சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரின் சாம் பிள்கள் பரிசோதிக்கப்பட்டு, தரம் உத்தர வாதமான பிறகே விற்பனைக்கு அனுப்பப் படுகிறது.


''இந்தத் தண்ணீரை அருந்துவதால் தண்ணீர் மூலம் பரவக்கூடிய நோய்களைத் தவிர்க்கலாம். குறிப்பாக, தூய தண்ணீ ருக்குப் பழகிய அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு இது மிக உபயோகமாய் இருக்கும்.

''குளிர்ப்பதனப் பெட்டியில் ஆறு மாதங்கள் வரையும், வெளியே நான்கு மாதங்கள் வரையும் சீல் பிரிக்காத மினரல் வாட்டரை வைத்திருக்கலாம்.

''பிஸ்லேரி மினரல் வாட்டர் தயாரிக்கும் பார்லே பெவரெஜஸின் தலைமை அலு வலகம் பம்பாயில் உள்ளது. சென்னைக்குப் பெங்களூரிலிருந்து சப்ளை வருகிறது. கூடிய விரைவில் இங்கேயே உற்பத்தி தொடங்க இருக்கிறோம். அப்போது போக்குவரத்து செலவு குறைந்து மினரல் வாட்டரின் விலை குறையும் வாய்ப்பு இருக்கிறது.''

– பகவதி

வாசகர் யோசனை :
கீதா,
திருச்சி - 18.







மாணவர் கட்டுரைப் போட்டி

என்னைக் கவர்ந்த ராஜீவ்

ரூ. 50 முதல் பரிசு பெறும் கட்டுரை

என்னைக் கவர்ந்தவர் ராஜீவ் என்பதை விட உலகில் எல்லோரையும் கவர்ந்தவர் என்பதே சாலப் பொருந்தும். கவர்ச்சியான முகமும், கருணை பொழியும் கண்களும், கள்ளமில்லாத குழந்தைச் சிரிப்பும் எல்லோரையும் காந்தம் போல் கவர்ந்ததில் என்ன வியப்பு!

உருவத்தில் மட்டும் அழகானவர் அல்ல, உள்ளத்திலும் அழகானவர்தான். விமானியாக எல்லையற்ற வானிலே சுதந்திரமாய்ப் பாடிப் பறந்தவர், தம்பி இறந்த துயரத்தினால் தவித்த தாய்க்கு ஆறுதலாய் அரசியலுக்கு வந்தார். அன்றே அவருடைய சுதந்திரம் பறிபோயிற்று. ஆனாலும் தாயன்பினால் ஒப்புக் கொண்டார். அந்த அன்புத் தாய் கயவனால் சுட்டு வீழ்த்தப்பட்ட போது, தாயைப் பிரிந்த துக்கத்தை ஆற்றக் கூட நேரமில்லாமல் கடமை அவரைக் கட்டிப் போட்டது. கட்சித் தலைமைப் பொறுப்பையும், பிரதமர் பதவியையும் ஏற்றார். அவர் உயிருக்கும் ஆபத்து நேரலாம் என்று அன்றே சோனியா அஞ்சினார். ஆனால் ராஜீவ் 'நாட்டுக்குக் கொடுக்க நமக்கு இருப்பது ஓர் உயிர்தானே' என்று மேனாட்டுக் கவிஞனை மேற்கோள் காட்டி, நாட்டுப் பற்றுடன் பதவியை ஏற்றார்.

அன்னை இந்திராவாவது தந்தையுடனே இருந்து அரசியலைக் கற்றவர். ராஜீவோ அரசியல் வாடையே இல்லாமல் வளர்ந்து, திடீரென்று அரசியலில் புகுந்தவர். ஆனாலும் விரைவிலேயே அரசியலில் தேர்ந்தவராகி விட்டார். அவருடைய அரசியல் நிர்வாகத் திறமை கண்டு உலக நாடுகளே வியந்தன. உண்மையிலேயே அவருக்கு நம் நாட்டு மக்களிடம் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவரிடமும் இருந்த அன்பு - மனித நேயம்தான் - அணிசேரா நாடுகளின் பிரதிநிதியாக இருந்து உலக சமாதானம், ஒற்றுமைக்குப் பாடுபட வைத்தது. அந்த மனித நேயம்தான் அண்டை நாடான பங்களா தேஷ் புயலில் அவதியுற்ற போது நேரில் சென்று ஆறுதல் கூறி, உதவிக் கரம் நீட்டியது. இலங்கைத் தமிழர்களுக்கு அமைதிப் படையை அனுப்பியது. பூகம்பத்தால் அவதியுற்ற ஆர்மீனிய மக்களுக்குப் பொருளுதவி செய்தது. அவருடைய இந்த இரக்க குணம் என்னை மிகவும்





கவர்ந்தது.

தமது ஆட்சி தோல்வியுற்ற போதும் அவர் துவளவில்லை. மேலும் கட்சி முன்னேறப் பாடுபட்டார். அடுத்த முறை கட்டாயம் வெற்றி கிடைக்கும் என்ற தன்னம்பிக்கையுடன் இருந்தார். '21-ம் நூற்றாண்டில் இந்தியாவை உலக அரங்கில் முன்னணிக்குக் கொண்டு வருவேன்' என்று கூறினார். அவருடைய தன்னம்பிக்கை என்னை வியக்க வைத்தது.

எத்தனை உயர்ந்த பதவியில் இருந்தாலும் எளியவரிடமும் அன்பு கொண்டவர். பழைய நண்பர்களையும் மறக்காதவர். தமிழ் நாட்டுக்கு வந்த போது ஏழைகளின் குடிசைகளுக்கெல்லாம் சென்று நலன் விசாரித்தாரே! அதில் நடிப்போ, செயற்கைத் தன்மையோ இல்லை. உள்ளார்ந்த அன்புடன் மக்களோடு மக்களாகக் கலந்து கொள்ளும் துடிப்புதான் தெரிந்தது.

இளைஞர்களாகிய நாம், நம் நாட்டுக்காக நம்மால் முயன்ற தொண்டினைச் செய்வதே, நாட்டுக்காக அல்லும் பகலும் உழைத்து உதிரம் சிந்திய நமது தலைவர் ராஜீவ் அவர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

– வ. செந்தில்குமார்,
இரண்டாம் ஆண்டு,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை.

டாக்டரின் புன்னகை

டாக்டரின் புன்னகைதான் நோயாளிக்கு நம்பிக்கை தரும் மருந்து. அதுபோல, நலிந்த நம் இந்தியர்களின் நாளைய வாழ்வு நலமுடன் விளங்கும் என்ற நம்பிக்கையை ஊட்டும் ராஜீவின் காந்தப் புன்னகை என்னைக் கவர்ந்தது. சிறு வயதில் இறுக்கமுள்ள சிறுவனாக வளர்ந்த போதும் - அன்னை இந்திரா கூட ''சுத்த உம்மணாமூஞ்சியாய் இருக்கிறாயே?'' என்று கேட்குமளவுக்கு இருந்தவர் - பிற்பாடு அவ்விறுக்கம் தளர்ந்து, நிரந்தரமாக அணிந்து கொண்ட அம் மந்திரப் புன்னகை இறுதியாக அவர் ஸ்ரீபெரும்புதூரில் தன்னை அர்ப்பணிக்கும் வரை நிலைத்து இருந்தது.

கல்லூரி நாட்களில் தான் ஒரு பிரதமரின் பேரன் - மகன் என்பதையெல்லாம் காட்டிக் கொள்ளவே விரும்பாது - தன் காதலி சோனியாவுக்கே கூட தவிர்க்க முடியாத ஒரு கட்டத்தில் மட்டுமே வெளிப்படுத்திய அந்தத் தன்னடக்கம் - பெரிய குடும்பத்துப் பிள்ளைகளிடம் அரிதே காணப்படும் குணம் - என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. அது மட்டுமா? படிக்குங் காலத்தில் தன் சொந்தச் செலவுகளுக்காக ஐஸ்கிரீம் பார்லரிலும், ரொட்டிக் கடையிலும் பகுதி நேர வேலை செய்து சம்பாதித்த உயர்ந்த குணத்தில் என் நெஞ்சத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறார் அமரர் ராஜீவ்.

- சென. மோகன வெங்கடாசலபதி,
எம். பி. பி. எஸ். இரண்டாம் ஆண்டு,
சேலம் அரசு மோகன் குமாரமங்கலம்
மருத்துவக் கல்லூரி,
சேலம் - 636 001.

எல்லோரும் நண்பர்களே!

வெளிநாடுகளுடனான இவரது நல்லிணக்கமே இவரைத் தலைசிறந்த மனிதராக்கியது. சமயோஜிதமாக எல்லோரையும் தம் நண்பர்களாக்கும் முயற்சியில் சைனா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கான இவரது பயணம் குறிப்பிடத்தக்கது. 'சார்க்' என்ற அமைப்பைக் கூட்டி சிறு நாடுகளின் பாதுகாப்பையும், கலாசார பரிவர்த்தனைகளையும் செய்ததோடு அல்லாமல், மாலத் தீவுகள் புரட்சிக்காரர்களால் கைப்பற்றப்பட்ட போது அந்தத் தீவை அவர்களிடம் இருந்து மீட்டுத் தந்தார். இதே அடிப்படையில் பாலஸ்தீன புரட்சியாளர்களுக்கும், தென் ஆப்பிரிக்க மக்களுக்கும் உரிமைக் குரல் எழுப்பி, அவர்களின் அல்லலுறும் நிலையை உல

கிற்குத் தெளிவாக விளக்கினார். ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளுடன் நட்புறவை வலுப்படுத்தி, பொருளாதார உதவி பெறும் முயற்சிகள் எடுத்தார். ராஜீவ் என்ற இளைய பாரதத்திடம் நான் கண்டதெல்லாம் இனிப்பான ஸ்நேகத்தன்மைதான்.

- எஸ். கிருஷ்ணன்,
அறை எண்: 27, நியூ ஹாஸ்டல்,
முதுகலை முதலாமாண்டு ஆங்கில இலக்கியம்,
சரஸ்வதி நாராயணன் கல்லூரி,
மதுரை - 22.

நாடு உயர விஞ்ஞானம்

ராஜீவ் ஒரு சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாக இருந்தாலும் தனித்தன்மை வாய்ந்த தலைவர் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இன்றைய நிலையிலிருந்து பாரதத்தை உலகத்தின் முன்னணி நாடுகளில் ஒன்றாக உயர்த்த வேண்டுமென்றால் அதற்கான மார்க்கம் விஞ்ஞானம்தான் என்ற தீர்க்கதரிசனம் அவருக்குப் பரிபூரணமாக இருந்தது. அதனால்தான் அவரது மறைவை இந்திய விஞ்ஞானத்துக்கு ஏற்பட்ட இழப்பாகக் கூறி ஒரு பிரபல விஞ்ஞானி வருந்தினார்.


அவரது விஞ்ஞான ஆர்வத்துக்கு உதாரணமாகப் பல நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

முஸ்லிம் மகா கவிஞரான இக்பால் சிறு வயதில் வகுப்பறைக்குத் தாமதமாகச் சென்றார்.

''ஏன் இவ்வளவு தாமதம்?'' என்று கேட்டார் வகுப்பாசிரியர்.

''இக்பால் காலதாமதமாகத்தான் வரும்'' என்று பளிச்சென்று பதில் பிறந்தது. 'இக்பால்' என்ற வார்த்தைக்குப் 'புகழ்' என்று பொருள் உண்டு.

- இராம. பார்த்திபன்.



உதாரணமாக எலக்ட்ரானிக் தேர்தல் இயந்திரத்தைப் பார்வையிட்ட போது அதன் செயல் முறை குறித்து அவர் எழுப்பிய தொழில்நுட்ப ரீதியான கேள்விகள் அசாதாரணமாக இருந்தன என்று முன்பொரு முறை வியந்து போய் எழுதியுள்ளார் சுஜாதா. அவருக்கு FORTRAN என்னும் கம்ப்யூட்டர் மொழியில் கூடப் பரிச்சயம் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் கம்ப்யூட்டர் software industry இன்று உலகத் தரத்திற்கு உயர்ந்துள்ளதற்கு அவர் ஆட்சியில் அமல்படுத்தப்பட்ட கொள்கைகள்தான் காரணம்.

HAM எனப்படும் அமெச்சூர் ரேடியோ நிலையங்களிலும் அவருக்கு அளவு கடந்த ஆர்வம் இருந்தது. குவைத் தேசத்தை ஈராக் ஆக்கிரமித்திருந்த போது குவைத் விடுதலை வீரர்கள் வெளியுலகுடன் இந்த நிலையங்கள் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ள முடிந்தது. இதன் மூலம் தகவல் தொடர்பில் இதன் முக்கியத்துவத்தை உணரலாம். ராஜீவ் ஓர் உற்சாகமான HAM உறுப்பினர்.

தகவல் தொடர்பு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் நிலத்தடி நீர் உள்ளிட்ட ஐந்து Technology Missions ஐ அவர் தொடங்கினார். இவை மிகவும் தொலை நோக்குள்ள திட்டங்கள். பரபரப்பாக ஏதாவது செய்து மக்களது உடனடிக் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற ரீதியில் செயல்படும் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் அவர் குன்றிலிட்ட விளக்காய் மிளிர்ந்ததற்கு இது தான் காரணம். 'அக்னி' ஏவுகணைப் பரிசோதனைக்கு அனுமதியளித்து இந்திய விஞ்ஞானிகளின் திறனை உலகறியச் செய்தது அவரது மற்றொரு சாதனை.

விஞ்ஞானக் கொள்கைகளினால் நமது தேசத்தை இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி வெற்றிப் பயணம் அழைத்துச் செல்லப் போகிறார் ராஜீவ் என்று நாம் எதிர்நோக்கியிருந்த வேளையில் அவரது வாழ்க்கைப் பயணமே கொடூரமாக முடிக்கப்பட்டது. தரக்குறைவான ஏசல்கள் சகஜமாகி விட்ட இன்றைய அரசியல் சூழ்நிலையில் மிகவும் பொறுப்பான முறையில் பேசிய அரசியல்வாதி ராஜீவ். அவருக்கா இந்த கதி?

- மு. செந்தில்,
இறுதியாண்டு, கம்ப்யூட்டர் சைன்ஸ்,
மெப்கோ பொறியியற் கல்லூரி,
அர்னாத்தூர் போஸ்ட்,
சிவகாசி - 626 005.

நேரத்தில் கொடுத்த நெத்தியடி!

O தலையங்கமும் கார்ட்டூனும் பிரமாதம்! சரியான நேரத்தில் கொடுத்த நெத்தியடி. நானும் ஏதாவது பத்திரிகை கண்டித்து எழுதுமா என்று பார்த்தேன். நீங்களாவது எழுதினீர்களே.
திருச்சி - 18, இ.மா. குருசாமி.

என்ன அர்த்தம்...?

O தி. மு. க. வின் இரண்டு ஆண்டு கால ஆட்சியின் போது பரவி விட்ட வெடிகுண்டு கலாசாரத்தை நான்கு மாதத்தில் கவர்னர் ஆட்சியினால் தீர்க்க முடியவில்லை என்றால் என்ன அர்த்தம்? தி. மு. க. ஆட்சியில் அந்தத் தீமை அந்த அளவுக்கு ஆழமாகவும், பரவலாகவும் இங்கே ஊடுருவி இருக்கிறது என்றுதானே அர்த்தம்.
கோவை - 23, ஷரீபா ஜெஸியா ராணி.

கறை படிந்து விட்டது!

O 'வதந்தி பரப்பும் வாழப்பாடியார்' தலையங்கத்தை அப்படியே நான் ஏற்றுக் கொள்கிறேன்; அதே சமயம் தி. மு. க. ஆட்சியில்தான் விடுதலைப் புலிகளுக்கு இவ்வளவு தைரியம் வந்தது. ராஜீவ் கொலையில் தி. மு. க.வுக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும், அவர்களுக்கு ஆதரவு கொடுத்த ஒரே காரணத்தால் இன்று அந்தக் கட்சி பொது மக்களின் பார்வையில் 'கறை' படிந்து காணப்படுகிறது.
பொள்ளாச்சி, ஏ. சி. பிரபு.

வீண் முயற்சி!

O தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பலவும் தங்கள் விருப்பம் போல எண்ணற்ற வதந்திகளைத் தினந்தோறும் புதிய புதிய தலைப்புக்களில் வெளியிட்டு வருவதைக் கண்டிக்கத் துணிவில்லாத 'கல்கி' வாழப்பாடியாரை மட்டும் கண்டிப்பது என்பது வீண்!
கோவில்பத்து, பூவை இருட்டிணன்.

உணர்ச்சி பூர்வமான படைப்பு!

O அழகிய முகம் எங்கே? அறிவொளிக் கண்கள் எங்கே? என்ற தில்லி ரிப்போர்ட்டும், படங்களும், ராஜீவின் மரணம் குறித்துச் சோகத்தில் மூழ்கியிருக்கும் நாட்டு மக்களை, மேன் மேலும் துயரமடையச் செய்யும் வகையில் உணர்ச்சி பூர்வமாகப் படைக்கப்பட்டிருந்தன.
தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

உள்ளத்தைத் தொட்டது!

O அடக்குமுறைகளுக்கு எதிரான அமைப்பு என்ற சிறுகட்டுரை உள்ளத்தைத் தொட்டது! மனித உரிமை மீறப்படும் நிகழ்ச்சி இந்தியா உட்பட பல நாடுகளில் தினசரி நடக்கிறது. அம்னஸ்டி இண்டர் நேஷனல் போன்ற அமைப்புகள் மிக மிகத் தேவையாக இருக்கின்றன.
ஈரோடு, ஈ.டி. விஜயகுமார்.

நீங்களும் முன் கூட்டியே அறிவித்திருக்கலாம்!

O 'முன் கூட்டி அறிவிப்பதில் முந்நூறு நன்மைகள்' கட்டுரையைப் பற்றி முன் கூட்டியே அறிவித்திருக்கலாமே! அறிவித்திருந்தால், 'அதுதான் முன்னாலேயே சொல்லி விட்டார்களே. சிரித்துச் சிரித்து வயிற்று வலி வந்தால் நாங்கள் பொறுப்பல்ல என்று....' என நாங்கள் சமாதானமாகியிருப்போமே!
அரூர், மு. மதிவாணன்.

நல்ல மனிதர்களைக் கண்டேன்!

O மணவாழ்வில் எதிர்பாராத நஷ்டங்களைச் சந்தித்துத் தடுமாறி நிற்கும் ஜீவன்களுக்கு மறுமண வாழ்வுச் சிறப்பு தர மனமுள்ள நல்ல மனிதர்களை 'அம்மா சம்மதிப்பாளா' என்ற கதையில் கண்டேன்.
தஞ்சாவூர், ஏ.ஆர். லலிதா.

பழமொழியும் கவிஞர் மொழியும்.

O எலும்பில்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் வளையும் என்ற பழமொழியையும், வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகம் என்ற கவிஞர் மொழியையும் ஒரு சேர நிரூபித்து, மனிதர்களின் யதார்த்த மனநிலையைப் பிரதிபலித்த கதை வேலாயுதனின் 'ஊர் வாய்'.
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

ஆதங்கத்தை அறிவுறுத்தினீர்!

O 'உலக சாம்பியன்ஷிப், ஆசிய தடகளப் போட்டிகள், சார்க் விளையாட்டுப் போட்டிகள் இவையனைத்திலுமே நான் பங்கேற்க விரும்புகிறேன். ஆனால், இவற்றில் எத்தனைக்கு நம் அரசாங்கம் என்னை அனுப்புமோ?' என்ற அசுவினியின் ஆதங்கத்தை அப்படியே வெளியிட்டு அரசுக்கு அறிவுறுத்திய எங்கள் 'கல்கி'க்கு மனமார்ந்த பாராட்டுக்கள் பல!
கும்பகோணம், சிவ. சீனிவாசன்.

நாராயண குரு - ஒரு விளக்கம்

O கல்கி 2.6.91 இதழில் (அலுவலகத்தில் தம்பதியாக) ஸ்ரீ நாராயண குருவைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் பெரியாரைப் போன்று பகுத்தறிவுவாதி என்று கூறப்பட்டிருக்கிறது. பெரியார் கடவுள் இல்லை என்றார். நாராயணகுரு 'ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு தெய்வம்' என்ற கொள்கையைக் கடைபிடித்துப் பரப்பியவர்.
சென்னை - 28, பவானி மணி.

லட்சம் அல்ல; ஆயிரம்!

O கல்கி 9.6.91 இதழில் (நோய்களைக் குணப்படுத்தும் ராகங்கள்) சிந்தசைசர் ஒன்றின் விலை 67 லட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறது. இறக்குமதி வரியையும் சேர்த்து, இந்தியாவில் இதன் மதிப்பு 60 முதல் 70 ஆயிரம் வரை இருக்கலாம். அவ்வளவே.
சென்னை - 17, எம். நாகராஜன்.

மறைக்கவில்லை...

"இதான் சார்! வாங்க... தைரியமா வாங்க; பயமில்லை..." என்று கூட்டி வந்தான் அந்த ஆள். அவன்கிட்ட நெருங்கிய போதே ஒருவித பழவாசனையும், பீடி வாசனையும் சேர்ந்து குடலைப் புரட்டியது.

கதவைத் தட்டினான் - "சரசு... சரசு..."

கதவைத் திறந்து "என்ன...?" என்று கேட்ட பெண்ணுக்கு முப்பது வயதிருக்கலாம்."

"பார்ட்டி வந்திருக்குது. கூட்டியாந்தேன். ஃப்ரீயா... நீ? உள்ள உட்காரச் சொல்லட்டுமா...?" என இளித்தான்.

அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள். "உள்ள வாங்க..." என்றாள்.

"ரேட் பேசியாச்சு... கரெக்டா வாங்கிக்க... நீ எனக்குக் கொடு சார்!" என்று என்னிடம் பிடுங்காத குறையாய்ப் பணம் கேட்டான். கொடுத்ததும் போனான்.

அவளிடம் பேசிய பணம் கொடுத்தேன். வாங்கிக் கொண்டாள். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். சின்னக் குடிசை.

அந்தப் பக்கமாய்த் தூளியில் குழந்தை. மூலையில் சமையல் நடந்ததற்கான அறிகுறி. ஒரே ஒரு காடா விளக்கு வெளிச்சத்திற்கு.

"எதுனாச்சும் சாப்பிடறீங்களா...?"

"வேண்டாம்...!"

"தண்ணி?"

"இல்லை... தாங்க்ஸ்..."

"சித்த நாழி இருங்க முகம் கழுவிட்டு வந்திடறேன்" என்று போனாள்.

எனக்குப் பாவமாய் இருந்தது. ஏனெனில் இன்னும் சிறிது நேரத்தில் இவள் போலீஸில் பிடிபடப் போகிறாள். நான் ஒரு டிகாய் (Decoy). போலீஸாரால், மீன் மாட்ட இரை போல் உபயோகிக்கப்படுபவன். இதில் எனக்கு ஒருவித சேவை சந்தோஷமும் ஒரு சிறு தொகையும் கிடைக்கும். ரொம்ப நாளாகவே போலீஸாருக்கு இந்த இடத்தின் மீது சந்தேகம். அதை உறுதிப்படுத்துவதற்காக இன்று நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

வந்து விட்டாள்..

கொஞ்ச நேரத்திற்கு முன் பார்த்த பெண் இவள்தானா...? என்று சந்தேகம் வந்தது. பவுடர் பூசி, பொட்டு வைத்து, சேலையை ஒருவிதமாக மாற்றிக் கட்டியிருந்தாள்.

"வாங்க..." என் கையைப் பிடித்தாள்.

நான் கையை உதறி விட்டு நின்றேன்.

"புதுசா?" சிரிப்பு...

இவர்கள் ஏன் பிழைக்கிறார்கள்?

சட்டென்று ஒரு கிழிந்த பாயைத் தரையில் விரித்து ஒரு தலைகாணியை எடுத்துப் போட்டாள்.

இந்தச் செய்கைகள் எனக்கு அருவருப்பாக இருந்தன. நான் மணி பார்த்தேன். இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. வந்து விடுவார்கள். வரட்டும்.

"கொஞ்சம் பேசலாம்!"

அவள் என்னை ஒரு முறை பார்த்து விட்டு, "பயப்படாதீங்க... சரி..." எனச் சிரித்தாள்.

அந்தப் பாயில் உட்கார்ந்தோம்.

"உன் பெயர் என்ன?"

மீண்டும் சி ரி த் த ா ள். "சரஸ்வதி... சரசு..." என்றாள்.

"ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தே...?"

சட்டென்று அவள் முகம் வாடியது.

"விதி..." என்று அவள் முணுமுணுத்த போதே தூளியில் இருந்த குழந்தை சிணுங்கியது.

எழுந்திருந்து போனாள்.

இவளுக்குக் குழந்தை இருக்கிறது. கணவன்...? சிரிப்பு வந்தது. ஒரு நாளைக்கு ஒரு கணவன்!

திரும்பி வந்தாள்.

"சாரி!" என்றாள்.

ஆச்சரியமாக இருந்தது. சாரி... சொல்கிறாள்!

"படிச்சிருக்கியா...?"

"ம்... பத்தாம் கிளாஸ்..."

"பத்தாம் கிளாஸ்...! அப்புறம் ஏன் இந்தத் தொழில்?"

"அதான் விதி!"

"விதின்னா... சும்மா இருந்துடுறதா? இந்தத் தொழில் உனக்குப் புடிச்சிருக்கா?"

"யாருக்குப் பிடிக்கும்...?"

"பின்ன, வேற ஏதாவது செய்யறது...?"

எஸ்.ஜி.ஆர்.



''ஆசைதான் பட்டேன். யாரு விட்டா...?''

நான் மணி பார்த்தேன். இன்னும் இருபது நிமிடங்கள் இருந்தன.

''எப்படி இங்கே வந்தே...?'' என்றேன்.

''பெரிய கதை...! சொன்னா காசு வேஸ்டா போயிடும்!'' எனச் சிரித்தாள்.

''பரவாயில்லை சொல்லு...'' என்றேன்.

''வேண்டாங்க... என் கதை கேட்டு என்னவாகப் போகுது!''

நெருங்க முயன்றவளை விலக்கினேன். இன்னும் பதினைந்து நிமிடங்கள் பாக்கியிருந்தன.

''சொல்!'' என்றேன். ''எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தே?''

''எங்கே வந்தேன். பிறந்ததிலிருந்தே இங்கதான்!''

''பிறந்ததிலிருந்தா...?''

''ம்...! எங்கம்மாவுக்கும் இந்தத் தொழிலுதான்!''

''ம்...?''

''என்னையாச்சும் நல்லா வளக்கணும்னு பிரியப்பட்டு படிக்க வச்சாங்க. 'என்னோட இந்தத் தொழில் முடிஞ்சு ரட்டும்'னு அழுவாங்க''

''அப்புறமும் ஏன்..?''

''ஏன்னா...? தலையெழுத்து...! ஒரு கட்டத்துல... நான் வயசுக்கு வந்த பொழுது... அம்மாவுக்கு வயசு போயிடுச்சு. சாப்பாட்டுக்கு... ரொம்பக் கஷ்டம்...''

''சாப்பாட்டுக்கு இல்லைன்னா.. இப்படிச் செய்யறதா...?''

''நீங்க பசியோட இருந்திருக்கீங்களா...?''

''ம்...'' என்றேன்.

''பசின்னா... அடுத்த வேளைச் சாப்பாடு நிச்சயம் என்கிற நிலையில் இருந்திருப்பீங்க... ஆனா கையில காசில்லாம.. அடுத்த வேளை சாப்பாடு எப்ப கிடைக்கும்ங்கறது தெரியாம இருந்திருக்க மாட்டீங்க...''

நான் மௌனம் சாதித்தேன்.

''இருந்திருக்கோம். நாலு நாள் சாப்பாடே இல்லாமக் கழிச்சிருக்கோம். அப்பவும் தொழிலுக்கு வரலையே... இதைச் செய்யவே கூடாதுன்னு வெறி...!''

''அப்புறமும் ஏன்...?''

''அதாங்க... விதி! எனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு அம்மாவுக்கு ஆசை.. பண்ணி வச்சாங்க...''

''கல்யாணம் ஆயிருச்சா...?''

''ஆச்சு! அது கூட ஒரு மாதிரி காதல் கல்யாணம். நான் ரொம்பப் பிடிவாதமாய் இருந்தேன்.''

''கல்யாணத்துக்கு அப்புறம்...?''

''எங்க வாழ்க்கையே மாறிடும். எங்க பழைய வாழக்கையே மறந்துடும்னு நினைச்சோம். ஆனா... எங்க பழைய வாழ்க்கையை நாங்கதான் மறந்திருந்தோம் மத்தவங்க... நினைச்சுக்கிட்டே இருந்திருக்காங்க...''

''அடடா...!''

''சந்தேகம்! நான் தெருவில வந்து நின்னா, சிரிச்சா, எல்லாத்துக்கும் சந்தேகம். தோ இந்தக் கொழந்தை பொறந்துச்சு.. அது பொறந்ததும் சந்தேகம் அதிகமாயிடுச்சு... தினம் கணவனிடம் அடி உதை. யாருக்குப்

பொறந்ததுன்னு கேள்வி... ''.

''........''

''அப்புறம் எல்லோரும் என்னைக் குழந்தையோட வெளியே அடிக்கத் தொறத் திட்டாங்க. நிறையப் பேர் வேடிக்கை பாத் தாங்க... ஒருத்தர் கூட ஏன்னு கேட்க லியே...''

''அவ்வளவு கொடுமைக்காரனா.... உன் புருஷன் !''

''புருஷன் மட்டுமில்லீங்க... எல்லோ ரும்தான். இங்கேயிருந்து வந்தவள்னு எல்லாருக்கும் எளக்காரம். எத்தனையோ பேர் இவ படிஞ்சுருவாள்னு முயற்சி செய் தாங்க.. முடியலைன்னதும் அவரு மனசைக் கலைச்சுட்டாங்க...''

இன்னும் எட்டு நிமிடங்களிருந்தன...

அவள் தொடர்ந்து பேசிக் கொண்டி ருந்தாள்.

''அப்புறம் பசி தாங்க முடியலைங்க... நானும் அம்மாவும்னா பரவாயில்லை. குழந்தையோட பசியைப் பார்க்க முடி யலை. அதான் வந்துட்டோம். ஒரு வகை புதை குழி மாதிரி வெளியே போகவும் முடியாம முழுகவும் முடியாம... ''

''அம்மா...?''

''இத்தனைக்கு அப்புறம் ரொம்ப நாள் உயிரோட இருக்க முடியுமா...? செத்துப் போயிட்டாங்க...''

குழந்தை மீண்டும் சிணுங்க... அவள் எழுந்து போய்த் தட்டினாள்.

எனது நிலை தர்மசங்கடமாகியது. இவளை மாட்டி வைப்பது பாவம் என்று நினைத்தேன். மணி பார்த்தேன். இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன.

''சரசு...'' என்றேன்.

தூளி ஆட்டிக் கொண்டிருந்தவள் திரும்பி னாள்.

''வரவா...?'' என்றாள்.

''வராதே! போயிடு...!''

''போகவா..? என்ன சொல்றீங்க...?''

''ஆமா... போயிடு... பின்வாசலால் ஓடிடு...''

''ஏன்?''

''ரெய்டு வருது.. போலீஸ் புடிக்கப் போறாங்க. நான் போலீஸ் ஆள்...'' என் றேன்.

ஒருவித வெடவெடப்புடன் நின்றாள். அவள் வாழ்க்கையில் இன்னொரு சோதனை ஆரம்பமாகப் போகிறது...

என்னை ஒரு மாதிரி பார்த்தாள்.

நான் பரபரப்பானேன்.

''ஓடிடு...! நான் சமாளிச்சுக்கறேன்...'' என்றேன்.

அவள் பேசவில்லை.

நான் குழந்தையை எடுத்து அவளிடம் கொடுத்து அவளைத் தள்ளிக் கொண்டு வர...

கதவைத் திறந்து கொண்டு போலீஸ் வந்தனர்.

இன்ஸ்பெக்டர் வந்து கையைப் பிடித் துக் கொண்டு...

''தாங்க்ஸ்'' என்றார்.

''சார் இவங்க வந்து...!''

''தெரியும். எல்லாம் தெரியும். நீங்க ஒரு கன்பர்மேஷனுக்குத்தான். பணம் வாங் கிட்டாங்க இல்ல... போதும் கேஸ் முடிஞ் சுது'' என்றார்.

அவளிடமிருந்த குழந்தையை யாரோ பிடுங்கித் தரையில் உட்கார வைத்தனர்.

திடீரென்று நேர்ந்த அதிர்ச்சியில் அது அழ ஆரம்பித்தது.

அவளை ஜீப்பில் ஏற்றப் போன சமயம்.

''அய்யா, கொழந்தை...! கொழந்தை யைக் கொடுங்க'' எனக் கத்தினாள்.

''உன் கொழந்தையா...? ஆணா? பொண்ணா...?''

''பொண்ணுங்க... தனியா தவிக்குங்க... நான் இல்லைன்னா தாங்காதுங்க...''

''உன் கொழந்தைதானே? பொ ண் கொழந்தைதானே? பிழைச்சுக்கும்!'' எனக் கிண்டல் தொனியில் சிரிப்புடன் சொன் னார் அந்தப் போலீஸ்காரர்.

அந்த ஜீப் தெரு முனை திரும்பும் வரை அவள் அழும் ஒலி கேட்டது...


தரையில் அனாதையாய் அழுது கொண் டிருந்த அந்தக் குழந்தையின் மேல் என் பரிவுப் பார்வை விழ, இனி இகாயாக வேலை செய்வதில்லை எனத் தீர்மானித் தேன்.

''மோசமான இந்தப் படத்தைப் பார்த்துட்டு எல்லாரும் எரிச்சலோட போறாங்க. ஒருத்தர் மட்டும் சந்தோ ஷமாப் போறாரே! யாருங்க அவர்?''

''டி.வி. நிலையத்தில் வேலை செய்யறவர். வர்ற வாரம் என்ன படம் போடறதுன்னு தடுமாறிட்டு இருந்தா ராம்.''

இரா. வசந்தராசன்.





மாயா

பஸ் நின்றதும் கடைசியாக அவனும் மாயாவும் இறங்கினார்கள்.

''உன் பாட்டிக்கு என்ன வாங்கிண்டு போகலாம்?''

மாயாவிடம் கேட்டான். மாயா அவன் கைவிரலைப் பிடித்துக் கொண்டே நடந்தாள்.

''அதோ பலாப்பழம். வாங்கிண்டு போலாம்பா பாட்டிக்கு!''

''பலாப்பழம் பாட்டிக்குப் புடிக்குமா இல்லே ஒனக்கு இப்ப வேண்டியிருக்கா?''

கேட்டுக் கொண்டே அவள் கன்னத்தை இலேசாகக் கிள்ளினான் அவன்.

''எனக்கு வேணும், பாட்டிக்கும் பிடிக்கும்!''

ஒரு கிழவிதான் தரையில் உட்கார்ந்து கொண்டு பலாப்பழம் விற்றுக் கொண்டிருந்தாள்.

''வா சாமி, இது ரூபாய்க்கு அஞ்சு, இது ரூபாய்க்கு நாலு.''

பேரம் பேசி, இரண்டு ரூபாய்க்குத் தரும்படி கேட்டான். கிழவி பலாச்சுளைகளைக் காகிதத்தில் பொட்டலமாகக் கட்டிக் கொடுத்தாள். அவன் பாக்கெட்டிலிருந்து இரண்டு ரூபாயை எடுத்துக் கிழவியிடம் கொடுத்தான்.

கிழவி நல்ல சுளையாகத் தேடி எடுத்து, கொட்டையை நீக்கி மாயாவின் சின்னக் கையில் வைத்தாள்.

மாயா தன் அப்பாவின் முகத்தைப் பார்த்தாள். அதில் ஒரு தயக்கம்.

''வாங்கிக்கோ. பரவாயில்லை. இவங்களும் பாட்டி மாதிரிதான்!''

ஜெயபாரதி

மாயா கிழவி கொடுத்த பலாச் சுளை யைத் தின்று கொண்டே அப்பாவின் கை யைப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

''அதோ அத்தை வீடு!''

சற்றுத் தொலைவில் அவன் அக்காவின் வீடு தெரிந்தது.

அவன் தன் கையிலிருந்த பலாச்சுளைப் பொட்டலத்தை அவள் கையில் கொடுத் தான்.

''பலாப் பழத்தைப் பாட்டிகிட்டே நீயே குடு.''

இரண்டு பேரும் வீட்டிற்குள் போனார் கள். எதிரே அவன் அக்கா மீனா வந்தாள்.

''வாடா, வாடீ மாயா!''

''பாட்டி எங்கே அத்தே?''

''என்னடி, வந்ததும் பாட்டியைத் தேடறே? அதோ அந்த ரூம்ல படுத்துண்டு இருக்கா உம் பாட்டி!''

அவனும் மாயாவும் அந்த அறைக்குள் போனார்கள். வெறும் தரையில் ஒரு தலை காணியைப் போட்டுக் கொண்டு படுத்தி ருந்தாள் பாட்டி. மேலே மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. அவர்கள் வந்த சப்தம் கேட்டுக் கண்களை இலேசாகத் திறந்து அவர்களைப் பார்த்தாள்.

''இந்தா, பாட்டி பலாப்பழம்!''

மாயா தன் கையிலிருந்த பொட்டலத்தை நீட்டினாள்.

''அதை அங்கே வை!''

சட்டென்று அதட்டலான குரலில் கூறினாள் பாட்டி.

''சரி பாட்டி!''

பக்கத்தில் இருந்த டீபாயின் மீது பொட் டலத்தை வைத்து விட்டு மாயா உடனே அந்த இடத்தை விட்டு வெளியே ஓடினாள்.

''என்னம்மா, ஓடம்பு சரியில்லையா?''

கேட்டுக் கொண்டே அவன் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண் டான்.

''குழந்தை ஆசையாக் கொண்டு வந்து குடுத்தா இப்படியாம்மா அதட்டறது?''

''என்ன பெரிய குழந்தை, ஊர்ல ஒலகத்திலே இல்லாத குழந்தையை நீங்க பெத்துட்டீங்க?''

தரையில் படுத்தபடியே மீண்டும் கோப மாகப் பாட்டி பேசினாள். குரல் சற்று தாக்க லாக இருக்கவே அவன் தன் மகள் மாயா அங்கு வந்து விடப் போகிறாளே என்ற தயக்கத்துடன் அறைக்கு வெளியே பார்த் தான்.

அவன் அக்கா காப்பியை ஆற்றிக் கொண்டே அங்கு வந்தாள்.

''மாயா எங்கே மீனா?''

தன் அக்காவிடம் கேட்டான் அவன்.

''கொல்லைப் பக்கத்துல நாய் குட்டிப் போட்டிருக்கு. அதை வேடிக்கைப் பாத் துண்டு இருக்கா!''

அவன் மனம் சற்று அமைதி அடைந்தது. மாயாவுக்குத் தன் அம்மாவின் கோபம் தெரியாமல் இருப்பதே நல்லது. இத்தனைச் சின்ன வயதில் இவற்றையெல்லாம் புரிந்து கொண்டால் அவை ஆழமாக அவளின் மனத்தில் பதிந்து விடும். தன் மகளின் மீது கொண்டிருந்த அக்கறையால் இதை அவன் விரும்பவில்லை.

மீனா கொடுத்த காப்பியைக் குடிக்க ஆரம்பித்தான்.

''ஒடம்பு இப்ப எப்படி இருக்கும்மா, டாக்டர் என்ன சொன்னார்?''

''ஏண்டா வந்ததிலிருந்து என் ஒடம் பைப் பத்தியே கேக்கறே? இன்னும் எத் தனை நாளைக்கு நான் இருப்பேன்னு பாத் துண்டு வரச் சொல்லி ஒம் பெண்டாட்டி அனுப்பி வச்சாளா?''

சட்டென்று மாயா அந்த அறைக்குள் ஓடி வந்தாள். அவன் இதை எதிர்பார்க்க வில்லை.

''அப்பா, நாலு நாய்க் குட்டிப்பா...''

''முதல்லே ஒன் பொண்ணை அழைச் சுண்டு இந்த இடத்தை விட்டு வெளியில போ!''

பாட்டி உரக்க கூறினாள்.

அவன் மாயாவின் முகத்தைப் பார்த் தான். அவளும் அவன் முகத்தைப் பார்த் தாள்.

''நாலு நாய்க் குட்டிப்பா... ரெண்டு கருப்பு, ஒண்ணு வெள்ளை. இன் னொண்ணு மஞ்சள்...''

''அது மஞ்சள் இல்லேம்மா, ப்ரவுன், நீ மறுபடியும் போய்ச் சரியாப் பாரு!''

மாயாவை அங்கிருந்து போகச் சொன்னான். அவளும் உடனே 'சரிப்பா' என்று கூறிவிட்டு வெளியே ஓடினாள்.

அவன் மௌனமாக உட்கார்ந்திருந் தான். சற்று நேரத்துக்கு முன் தன் அம்மா கூறியதைத் தன் மகள் புரிந்து கொண்டி ருந்தால் தன்னைப் பற்றி அவள் என்ன நினைத்துக் கொள்வாள் என்று மனத் துக்குள் வருத்தம் அடைந்தான்.

> ''என்ன போஸ்ட்மேன், என்னுடைய ஜோக்கெல்லாம் போன வேகத்திலே திரும்பி வர்றது என்னவோ வாஸ்த வம்தான். அதுக்காக 'சார்... நோஸ் கட்'டுன்னு சொல்லிக் கொடுக்கணுமா என்ன!?''
>
> – கவிட் ரவி.

''அப்பா வீட்டுலதானே இருக்கார்?''

மறுபடியும் அவனே அம்மாவிடம் கேட்டான். அவள் எந்த பதிலும் சொல்லாமல் மேலே சுழலும் மின்விசிறியைப் பார்த்த படி படுத்திருந்தாள்.

அவன் மிகுந்த தயக்கத்தோடு மறுபடியும் பேசினான்.

''நான் இங்கேயிருந்து போறச்சே வீட்டுக்குப் போய் அப்பாவைப் பாக்கறேன்!''

''பாத்து என்ன பண்ணப் போறே?''

சட்டென்று கேட்டாள் அவள்.

''நீயும் அம்மாவும் எங்க கூட வந்து இருந்துடுங்கோன்னு கேக்கறேன்.''

அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். முதுமை உடம்பு பூராவும் பளிச்சென்று தெரிந்தது.

''மச்சினனுக்குச் சோறு போட மாட்டேன்னு சொன்னவ ஒம் பொண்டாட்டி! நாளைக்கு எங்களுக்கும் ஏன் போடணும்னு கேக்க மாட்டாங்கறது என்ன நிச்சயம்?''

- உரக்கக் கூறினாள் அவள். இலேசாக மூச்சிரைத்தது.

''ஒடம்பு சரியில்லாத போது ஏன் இப்படி கத்திப் பேசறே?''


''யார்டா இப்ப கத்தறது? எதுக்குடா ஈ மொச்ச பலாப் பழத்தை வாங்கிண்டு வந்து குடுத்திட்டு ஒங்க கூட இருக்கக் கூப்பிடறே?''

''அம்மா, சும்மா ஒனக்குத்தான் பேசத் தெரியும்னு பேசாதே! நானும் வந்ததுலேருந்து பாக்கறேன். நீ பண்றது, பேசறது எதுவும் சரியாயில்லே!''

முதன் முறையாக அவன் தன் குரலைச் சற்று உயர்த்திப் பேசினான்.

''யாரை அதட்டற! போய் ஒம் பொண்டாட்டியை அதட்டு. முடியலேன்னா அம்மா அப்பான்னு ஒரவு கொண்டாடிண்டு வராதே!''

அவள் முடித்தவுடன் அதைத் தொடர்ந்து மிகச் சன்னமான குரல் கேட்க ஆரம்பித்தது.



அவன் திரும்பிப் பார்த்தான்.

''அப்பா அந்த நாய்க்குட்டி மஞ்சள்தாம்பா!''

''சரி வா, அத்தைகிட்டே சொல்லிண்டு நாம கிளம்பலாம்.''

மாயாவுடன் ஹாலுக்கு வந்தான். மீனா அவனுக்காகவே காத்திருப்பதைப் போல நின்றிருந்தாள்.

''மாயா, நாய்க் குட்டிக்கெல்லாம் கண் திறந்துட்டுதான்னு பாத்துட்டு வா...''

மாயா அப்பா சொன்னதைப் பார்க்கக் கொல்லைப்புறம் ஓடினாள்.

''பாத்தியாக்கா அம்மா பேசறதை!''

''விடுடா, வயசாறது. ஒடம்புக்கு வேற முடியலே!''

''வயசானா ஒடம்புக்கு முடியாமப் போயிடறதே ஆனா, வார்த்தைகளுக்கு மட்டும் ஏன் இன்னும் பலம் கூடிண்டே போறது?''

சட்டென்று தன் அருகில் நிற்கும் மாயாவைப் பார்த்தான்.

''கண்ணு தொறந்திருக்கா...? போய் நாய்க் குட்டிக்கு எத்தனை கால்னு பாத்துட்டு வா.. ஓடு!''

''சரிப்பா!''

மாயா மீண்டும் ஓடினாள்.

''பாவம் அதை ஏன் இப்படி விரட்டறே காலை வலிக்கப் போறது குழந்தைக்கு!''

''தெரியாத்தனமா அவளையும் கூட்டிண்டு வந்தது தப்பாப் போச்சு. எதுக்கு இந்தச் சின்ன வயசுல இந்தச் சண்டை சச்சரவையெல்லாம் புரிஞ்சுக்கணும்?''

அவன் வருத்தத்துடன் பேசினான்.

''அக்கா, அம்மா இப்படி மாசத்துல ஒரு வாரம் பத்து நாள்னு இங்கே வந்து தங்கறதுல அவருக்கு ஒண்ணும்...''

''சே, சே அப்படியெல்லாம் நினைக்கறவர் இல்லேடா அவர்!''

''எனக்கு ரொம்ப சங்கடமா இருக்கு. பெரிய புள்ளை நான் இங்கேயே இருக்கறச்சே இப்படி பொண்ணு வீட்டுல வந்து தங்கறது...''

தன் அம்மா மாப்பிள்ளை வீட்டில் வந்து தங்குவது தனக்கு உடன்பாடான விஷயமில்லை என்பதை அக்காவிடம் தெரிவித்துவிட்டதில் அவன் மனம் சற்று இலேசானது.

''அங்க வீட்டுல அப்பாவுக்குச் சாப்பாடு...?''

''அதான் நம்ம தம்பி ஒருத்தன் இருக்கானே. ஓட்டல்லே தான் சாப்பிட்டுட்டு அப்பாவுக்குக் காரியர்லே கொண்டு வரான்... அம்மாவால முன்ன மாதிரி அடுப்புகிட்டே நின்னு சமைக்க முடியலே... அதான் அடிக்கடி இங்க வந்து தங்கிடுறா!''



✤✤ உலகில் மிகக் குறைந்த வயதில் வோட்டுரிமை 'வழங்கும் நாடு பிலிப்பைன்ஸ். இங்கு வோட்டுரிமை பதினைந்து வயதிலேயே உண்டு. அதே போல் அங்கோலா நாட்டில்தான் வோட்டுரிமை மிகத் தாமதமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த நாட்டில் வோட்டுப் போடக் கூடக் குறைந்தபட்ச வயது 25.

ஆதாரம்: 'பொது அறிவுக் குறிப்புகள்.

- வி. பன்னீர் செல்வன்.

''இவதான் அவனைக் கெடுத்தா. இன்னும் அவன் ஒரு பைசா சம்பாதிக்கலே. வயசு முப்பத்தி நாலு ஆறது. இதக் கேட்டா தப்பு!''

இதை அவன் கேட்கவில்லை. அவன் மனைவி பூர்ணிமாதான் தன் மாமியாரிடம் கேட்டாள். முதலில் தன் மைத்துனன் எதிர்காலம் குறித்துக் கவலைப்படுவது போல் பேச்சை ஆரம்பித்து பின் அவன் தன் கணவனின் சம்பாத்தியத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் என்று முடித்த போது வீடு இரண்டாகப் பிளந்தது.

அவனும் பூர்ணிமாவும் தங்கள் குழந்தை மாயாவை அழைத்துக் கொண்டு திருவல்லிக்கேணியில் குடியேறினார்கள்.

''ஏம்பா நாம இந்த வீட்டுக்கு வந்திருக்கோம்?''

- மாயா புரியாமல் கேட்டாள்.

''ஒன்னை அடிக்கடி பீச்சுக்குக் கூட்டிண்டு போகத்தான்!''

ஆனால் திருவல்லிக்கேணிக்குத் தனிக் குடித்தனம் வந்த பிறகு மாயாவை ஒரு தடவை கூட பீச்சுக்கு அழைத்துப் போக முடியவில்லை.

அதனால்தான் இன்று அவளைச் சமாதானப்படுத்த வேறு வழியில்லாமல் இங்கு அழைத்து வந்தான்.

அக்காவிடம் சொல்லிக் கொண்டு மாயாவுடன் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தான்.

கூடவே நடந்து வரும் மாயாவைப் பார்த்தான். அவளும் சட்டென்று என்னவோ சொல்வதற்காகத் தலையை மேலே உயர்த்தினாள்.

''பாட்டிக்குப் பலாப்பழம் புடிக்காதாப்பா?''

''புடிக்காதுன்னுதான் தோணறது!''

''அப்போ எதுக்கு நான் பலாப்பழம் வாங்கலாம்னு சொன்னப்போ நீ சரின்னு சொன்னே... வேற ஏதாவது வாங்கியிருக்கலாம் இல்லியா?''

''பாட்டிக்குப் பலாப்பழம் புடிக்காதுங்கற விஷயம் எனக்கு இன்னிக்குத் தாம்மா தெரிஞ்சுது!''

மாயாவின் முகத்தைப் பார்க்காமல் பேசிக் கொண்டே நடந்தான். அம்மாவுக்கும் தனக்கும் நடந்த சண்டை பற்றி ஏதாவது கேட்டு விடப் போகிறாளே என்று இலேசாகப் பயந்தான்.

''அப்பா!''

''ம்''

''வீட்டுக்குப் போனதும் நான் நந்தினி வீட்டுக்குப் போய் விளையாடிட்டு வரட்டுமா?''

சற்று தயக்கத்துடன் கேட்டாள் மாயா.

''இப்பவே மணி நாலாறது. பஸ் புடிச்சு வீட்டுக்குப் போறச்சே அஞ்சு அஞ்சரை ஆயிடும். அதுக்கப்புறம் என்ன விளையாட்டு, நாளைக்குப் பாத்துக்கலாம்.''

அவள் மௌனமாக அவன் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

குழந்தை சற்று கோபமாக இருப்பதைப் புரிந்து கொண்டான.

பஸ் வந்தது. இருவரும் ஏறி அமர்ந்து கொண்டார்கள். இரண்டு டிக்கெட் வாங்கினான். அதை அவளிடம் கொடுத்த போது அவள் அதை வாங்க மறுத்தாள். யார் பஸ்ஸில் போய் விட்டு வந்தாலும் பஸ் டிக்கெட்டுகளை அவளிடம் தர வேண்டும். ஆனால் இன்று அது அவளுக்குப் பிடிக்காமல் போனது.

பஸ் ஓடிக் கொண்டிருந்தது.

''அப்பா''

''என்ன?''

''வீட்டுக்குப் போனதும் நான் நந்தினி வீட்டுக்குப் போய் விளையாடிட்டு வரேன்!''

''நாளைக்குத்தான் விளையாடிடெல்லாம். வீட்டுக்குப் போய், கொஞ்சம் ஹோம் ஒர்க் பண்ணிட்டுச் சாப்பிட்டுத் தூங்கணும்!''


''போப்பா. நான் நந்தினி வீட்டுக்குப் போய் விளையாடினா என்ன, ஏன் அனுப்ப மாட்டேங்கறே! அதனாலதான் ஒன்னைக் கண்டா யாருக்கும் புடிக்க மாட்டேங்கறது!''

சட்டென்று அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் கோபமாக இருப்பதை அவள் முகம் காட்டியது.

''யாருக்கு என்னைப் புடிக்கலே. உன் ஃபிரண்டு நந்தினிக்கா?''

''இல்லே, பாட்டிக்குத்தான்!''

பட்டோபட்டு பொன்பட்டு மேனிக்கு



ரெக்ஸோனா

தூய தேங்காயெண்ணெய் செறிந்தது.



மென்பட்டு மேனி காக்க எளிய குறிப்புகள்

டாக்டர். பாரதி தரு

கே: என் சருமம், குறிப்பாக முகம் மிகவும் வறண்டிருக்கிறது. எவ்வளவோ க்ரீம்கள், லோஷன்கள் போட்டும் பலனில்லை. இதற்கு ஓர் நிவாரணம் கூறவும்.

ப: உங்கள் உணவைக் கவனிக்கவும். வாழைப் பழங்கள், அத்திப் பழம், வாதுமை ஆகியவற்றை நிறைய உண்ண வேண்டும். தேனும், சத்துக்கூழும் மிக நல்லது. அடிக்கடி முகத்தில் சோப் பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

பாதி வாழைப் பழத்தை நசுக்கி, அத்துடன் 3 அல்லது 4 சொட்டு கிளிஸரினைக் கலந்து முகத்திலும், கழுத்திலும் தடவவும். 15 நிமிடங்களுக்குப் பின் கழுவி விடவும்.

கே: என் முகத்திலும், நெற்றியிலும் சிறிய பருக்கள் உள்ளன. இதை அகற்றி இளமையான மேனி வண்ணம் பெற என்ன செய்யலாம்?

ப: இனிப்பு மற்றும் எண்ணெய்ப் பசையுள்ள பொருட்களை உண்ணாதீர்கள். முகத்தில் தலைமுடி பட விடாதீர்கள். குறிப்பாக, தலைப் பொடுகு இருக்கையில், முடி முகத்தில் படவேக் கூடாது. கீழ்க்கண்ட முறையில், குழைவைத் தயாரிக்கவும்:

ஒரு தேக்கரண்டி உவர் மண், ஒரு தேக்கரண்டி தூளாக்கப்பட்ட லவங்கம், ஒரு தேக்கரண்டி சந்தனக் குழைவு ஆகியவற்றைக் கலந்து, முகத்தில் சீராகத் தடவி, 15 நிமிடங்களுக்குப் பின் கழுவி விடவும். இது போல் தொடர்ந்து, தினசரி 8 தினங்களுக்குச் செய்யவும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

கே: நான் சிகப்பாக விரும்புகிறேன். என் முகத்தை சிகப்பாக்கும் ஒரு க்ரீம் அல்லது அதை தயாரிக்கும் முறை பற்றி கூறவும்.

ப: ஊறுகாய், எலுமிச்சை, கிச்சிலிப் பழ வகைகளை தவிர்க்கவும். பப்பாளியை நசுக்கி அத்துடன் ஒரு தேக்கரண்டி புல்லரிசிக் கூழை சேர்த்து முகத்திலும், கழுத்திலும் தடவி 15 நிமிடங்கள் அப்படியே இருந்த பின் கழுவி விடவும். உங்கள் சருமத்திற்கு, இது சிறந்த குழைவாகும். தகுந்த பலன் கிடைக்கும் வரை இதைத் தொடரவும்.

கே: கோடையில், எனக்கு வேர்க்குரு அதிகம் ஏற்படுகிறது. இதற்கு நிவாரணம் என்ன?

ப: ஆரஞ்சு பழத் தோலை உலர்த்தி, தூளாக்கவும். பிறகு குளித்த பின், பன்னீரில் நனைக்கப்பட்ட பருத்திக்-கம்பளித் துணியை பாதிக்கப்பட்ட இடங்களில் தடவவும். அது சிறிது நேரம் உலர்ந்த பின், ஆரஞ்சுப் பழத் தோல் தூளை தடவி பின்பு சுத்தப்படுத்தவும்.

கே: தீப்புண் வடுக்களை அகற்ற என்ன நிவாரணம்?

ப: இதை இரண்டு கட்டமாக செய்யலாம். முதல் வாரத்தில் "ஆலோ வெரா" இதழ்களை நசுக்கி வடுக்கள் மீது தடவவும். இரண்டாவது கட்டமாக, வாதுமை எண்ணெய்யையும், வைட்டமின் 'ஈ' எண்ணெய்யையும் சமமாக கலந்து தினசரி மஸாஜ் செய்து வரவும். ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து இப்படி செய்யவும். இதனால், தீப்புண் பட்ட இடம் முழுவதுமாக மாறாவிட்டாலும், வடுக்கள் ஆறுவதற்கு இது உதவும். தீப்புண்கள் மிகவும் பாதித்த பகுதிகளை, சர்ஜரி மூலமாக மட்டுமே குணப்படுத்த முடியும்.

கே: எண்ணெய்ப் பசை இருப்பதால், சருமத்தை அடிக்கடி கழுவ வேண்டி உள்ளது. ஆனால், சோப் என்றாலே எனக்கு அலர்ஜி. சோப் இல்லாமல், என் முகத்தை எப்படிக் கழுவுவது?

ப: உங்கள் முகத்தை நீங்கள் சரண்டி தேய்க்கலாம். புல்லரிசிக் கூழ், துளசி இலை, "விட்ச்ஹேஸெல்" எனப்படும் ஒரு வகை வட அமெரிக்கச் செடி அல்லது பன்னீர், உப்பு படிமம் இவற்றைக் கலந்து முகத்தில் சுழற்சி முறையில் இதமாகத் – தேய்க்கவும். ஐந்து நிமிடங்களுக்குப் பின், நிறைய நீர் கொண்டு கழுவவும்.

கே: என் கை சருமத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு நிவாரணம் என்ன?

ப: தேன், வாதுமை தலா ஒரு தேக்கரண்டி, புல்லரிசிக் கூழ், 4 வெண்டைக்காய் இவற்றைக் கலந்து ஒரு அம்மியில் அரைத்து தூளாக்கி, லேசாக சூடாக்கவும். இக்கலவையை கைகளில் தடவி 20-25 நிமிடங்களுக்குப் பின் கழுவவும்.

கே: என் கண் புருவத்தின் கீழ் உள்ள பகுதி தளர்ந்து, தொங்குவது போலிருப்பதால், மிகவும் வயதானவள் போல் நான் காட்சி அளிக்கிறேன். இதற்கு என்ன வழி?

ப: குளிர்ந்த பசும்பாலில், சிறுசிறு பஞ்சுருண்டைகளை நனைத்துப் பிழிந்தபின், புருவத்தின் கீழ் இதமாக தடவவும். சிறிது ஓய்வுக்குப் பின், அப்படியே உறங்க முயற்சிக்கவும். நாளொன்றுக்கு இரு முறை வீதம் ஏழு நாட்களுக்கு இதுபோல் செய்தால் கணிசமான பலன் தென்படும்.

வாசகர்கள் இம்முகவரிக்கு கேள்விகளை அனுப்பலாம்:

Rexona
P.O. Box 758, Bombay-1.

பின் குறிப்பு: உங்களது எல்லா பிரச்சினைகளுக்கும் தனிப்பட்ட முறையில் பதிலளிப்பது சாத்தியமில்லாமல் போகலாம். எனினும், வரும் இதழ்களில் உங்களது பிரச்சினைகள், கேள்விகளுக்கு நாங்கள் பதிலளிக்கிறோம்.

நேற்றுவரை நந்தவனம்

11

குமரன், அம்மாவைப் பார்த்த பார்வையில் கோபம் ஒரு க்ஷண நேரத்துக்குச் சுடர் விட்டது.

''அம்மா, உனக்கு எதுவும் புரியாது. இளவரசுவைத் தூக்கிட்டு உள்ளே போ. நான், இவங்க கூடப் பேசிட்டு வர்றேன்...''

அம்மாவின் முகம் சுண்டிப் போய் விட்டது. குழந்தையைத் தூக்கிக் கொண்டு, உள்ளே போகிற வேகத்திலேயே மீராவிடமும் சொல்லி விட்டுப் போகிறாள்.

''இதப் பாரும்மா.. அவன் என்ன சொன்னாலும் எதையும் மனசுல வச்சுக்காதே. ஏதுடா, புது ஊருலே பொம்பளைப் புள்ள, தன்னந்தனியா வந்து எங்கே தங்குவா - என்னத்தைச் சாப்பிடுவான்னு ஒண்ணும் தெரியாது இவனுக்கு. அதுவும் பொம்பளை மனசு - இவனுக்கும் புரியாது, இவங்க அப்பனுக்கும் புரியாது... வீட்டை விட்டுப் புறப்படறதுக்கு முன்னாடி என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லு...''

குமரன், தாயின் தலை மறையும் மட்டும் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, தழைந்த குரலில் சொல்கிறான்.

''இந்த ஆக்ஸிடெண்ட்டுல அம்மா ரொம்பவும் பாதிக்கப் பட்டிருக்காங்க... யார் வீட்டுக்கு வந்தாலும், அவங்களை இங்கேயே தங்கிடுங்கன்னு வற்புறுத்த ஆரம்பிச்சிட்டாங்க. பேச்சுத் துணைக்கு ஆள் வேண்டியிருக்கு.... நான் ஃபாக்டரிக்குப் போயிட்டேன்னா - அப்புறம் நான் முழுக்க இளவரசு கூடத்தான். அவனையும் ஒண்டியாச் சமாளிக்க முடியலை. வேலைக்காரங்க பொறுப்புல விடவும் மனசில்லே....''

அனுராதா ரமணன்

மீரா, கொஞ்சம் கூடச் சலனமேயில்லாமல், அவனையே பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறாள்.

அவன் என்ன நினைத்தானோ, சுற்றி வளைக்காமல் 'சட்'டென விஷயத்துக்கு வருகிறான்.

''இங்கே பாருங்க மீரா... உங்களுக்கு, யார் இந்தச் சதிக்குக் காரணம்னு தெரிஞ்சுக்கறதுல எத்தனை ஆர்வம் இருக்கோ - அதுல எள்ளளவு கூட குறையாத வேகம் எனக்கும் இருக்கு. போலீஸ் டிபார்ட்மென்ட்டையோ, சி.ஐ.டி. ஆளுங்களையோ மட்டும் நம்பிட்டு நான் சும்மா உட்கார்ந்திருக்கலை... ஒவ்வொரு நாளும் எனக்கும் அவங்களுக்கும் தகராறுதான். இன்னும் பார்க்கப் போனா - எதையாவது சாக்கு வச்சு, என்னை உள்ளே தள்ளி - நாலு சாத்து சாத்த - எதிர்க்கட்சிக்காரங்களை விட போலீஸ்தான் முனைப்பா இருக்கு.....''

''நேச்சுரலா உங்களுக்கு அந்த உணர்ச்சி இருக்கணும். இல்லாட்டி மீசை வச்ச ஆம்பிளைன்னு சொல்லிக்கறதுல அர்த்தமே இல்லை....''

குமரன், மீராவின் வார்த்தைகளால் சற்றுத் தடுமாறிப் போகிறான். ஆனாலும் வலிய சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சொல்கிறான்.

''உங்க வார்த்தையினாலே நான் கோபப் படல்லே. உங்க நிலையில் யார் இருந்தாலும் இப்படித்தான் பேசுவாங்க. ஆனாலும் மீரா... மெட்ராஸ்லேயிருந்து தன்னந்தனியா தஞ்சாவூர்லே வந்து உட்கார்ந்து என்ன சாதிக்கப் போறீங்க?''

''எந்தப் பொருளையும் தொலைச்ச இடத்துலதான் தேடணும்னு எங்கம்மா சொல்லுவா... நான், தஞ்சாவூர்லே தொலைச்சிட்டு, மெட்ராஸ்லே போய்த் தேடறதுல என்ன இருக்கு...''

''இங்கே தேடினா மட்டும் கிடைச்சிடப் போறதா?''

''பொருள் கிடைக்காது. குறைஞ்ச பட்சம் கொள்ளைக்காரனாவது சிக்க மாட்

டானா...''

''அவனைப் பிடிக்கத்தான் நான் இருக்கேனே...'' மீரா அலட்சியமாய்ச் சிரிக்கிறாள்.

''சாதாரணமா சினிமாவுலதான் பார்த்திருக்கேன். வில்லனே போலீஸ் ஆபீசராகவும் பெத்த அப்பனாகவும், அண்ணன் தம்பியாகவும் இருப்பாங்க... இப்பத்தான் நேரில பார்க்கறேன்...''

''என்ன சொல்றீங்க !''

குமரனின் கறுத்த முகம் மேலும் கறுக்கிறது...

''தமிழ்லேதானே சொன்னேன்....''

''சேச்சே - விபத்துல உங்களுக்கு மூளை கலங்கிடுச்சுன்னு நினைக்கிறேன். இங்கே பாருங்க, நீங்க இப்படிச் சந்தேகப்பட ஆரம்பிச்சா - பஸ்ஸுல இருந்த முக்கால்வாசிப் பேருங்க மேல நீங்க சந்தேகப்பட வேண்டியிருக்கும்...''

'''மோடிவ்' இருந்தா சந்தேகப் படறதுல என்ன தப்பு?''

மீராவின் விதண்டாவாதமான பேச்சு, அவனுள் பயங்கர எரிச்சலைக் கிளப்புகிறது... சிகரெட் பாக்கெட்டிலிருந்து அவசரமாய் ஒரு சிகரெட்டை உருவியவன், உருவிய வேகத்திலேயே மறுபடியும் பாக்கெட்டுக்குள் போடுகிறான். தீக்குச்சியை எடுத்துப் பரபரவெனக் காது குடைகிறான். கொஞ்ச நேரம் மௌனம் சாதித்து விட்டு, வலிய வரவழைத்துக் கொண்ட பொறுமையான குரலில் அவளிடம் சொல்கிறான்.


''ஓ.கே. மீரா... நீங்க எப்படி என்னைச் சந்தேகப்படறீங்களோ, அது மாதிரி - நானும் சில பேருக்கு மோடிவ் இருக்கலாம்னு ஒரு லிஸ்ட் போட்டு வச்சிருக்கேன்....''

''அதுல என் பெயர் இருக்க முடியாது.''

மீராவின் குழந்தைத்தனமான அவசரத்தை - ஒரு கணம் ரசிக்கக் கூடச் செய்கிறான் அவன்.

''நோ... நீங்க என் மேல குற்றம் சுமத்தறதுனாலே - பதிலுக்கு நானும் உங்க மேல பழி சுமத்துவேனா என்ன? நாம என்ன சின்னக் குழந்தைங்களா...!''

இதற்குள் உள்ளேயிருந்து குமரனின் தாய் எட்டிப் பார்க்கிறாள்.



''அந்தப் பொண்ணு எங்கே வேணுமானாலும் இருக்கட்டும்... வெறும் வயித்தோட அனுப்பிடாதே... பலகாரம் எடுத்து வச்சிருக்கேன். முதல்லே சாப்பிடட்டும்...''

குமரன் சலித்த குரலில் சொல்கிறான்.

''நீ வேற ஏம்மா.... அவங்களுக்கு இப்ப இருக்கற வெறுப்புல - பலகாரத்துல விஷம் கலந்து வச்சிட்டதாக் கூடச் சொல்லுவாங்க.''

அந்த அம்மாள் புன்சிரிப்புடன் தலையை மட்டும் வெளி நீட்டுகிறாள்.

''அம்மாடி... இந்த வீட்டுல தனிப்பட்ட முறையில பலகாரத்துல விஷம் கலக்கணும்னு அவசியமே இல்லே. அப்பா, பிள்ளை, செத்துப் போனாலே... அந்த மகராசி... இவங்க எல்லாருக்கும் நாக்குலேயே விஷமிருக்கு. அப்பனும், பிள்ளையும் எலக்ஷன் நேரத்துல மேடை மேடையாப் பிரசாரம் செய்வாங்க பாரு.... எதிர்க்கட்சிக்காரன் - மான ரோஷமுள்ளவனாயிருந்தா நாக்கைப் பிடுங்கிட்டுச் செத்திடுவான்....''

மீரா, குமரனைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் எழுந்து, அந்தம்மாளை நோக்கிச் செல்கிறாள்.

''கை கழுவுகிற இடம் எது...?''

அவளை முகமலர்ச்சியுடன் பார்க்கிறாள் குமரனின் தாய்....

''குமரு.... நீயும் வாயேன்...''

''எனக்குப் பசிக்கலை. அப்புறம் சாப்பிடறேன். அவங்களுக்குப் போடு...''

மீரா, 'வெடுக்'கெனத் திரும்பிப் பார்க்கிறாள்.

''பரவாயில்லை... குற்றம் நிரூபிக்கப்படற வரைக்கும் கோர்ட் கூட - குற்றவாளின்னு நேரிடச் சொல்றதில்லே. குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்னுதான் சொல்லுவாங்க... உங்களையும் நான் அப்படித்தான் நினைக்கிறேன். என் கூட சாப்பிட வரலாம்.''

குமரனுக்கு அவளது நடத்தையும், பேச்சும் விசித்திரமாக இருந்த அதே நேரத்தில் - அவளை எடுத்தெறிந்து பேசவும் முடியவில்லை.

இயல்பிலேயே, அவன் அவசியமாய்ப் பேச நேர்ந்தாலொழிய வாயைத் திறக்க மாட்டான்.

தர்மராஜன் அடிக்கடி சொல்லுவார்:

''ஏண்டா, எப்படிடா இப்படி வாயைத் திறக்காம வளைய வர்றே... மேடையில கனல் பறக்கப் பேசறே. பெண்டாட்டிய எதிர்த்து ஒரு சொல் சொல்ல மாட்டேங்கறே.... அவ இங்கிலீஷ்லே கத்தினா - பதிலுக்கு நீயும் எகிறேன்டா... உன்னையும்தானே இங்கிலீஷ் ஸ்கூல்லே போட்டேன்... என்னடா பிரயோசனம்...''

குமரன் வாயைத் திறக்க மாட்டான். இந்தப் பக்கமானால் பெற்ற தாய் இடிப்பாள்.

''இந்தா... ஒண்ணு உன் பெண்டாட்டிய அழைச்சிட்டுத் தனியாப் போ. இல்லே, உங்க அப்பா கிட்ட அவர் செய்யறது அத்தனையும் அக்கிரமம்னு எடுத்துச் சொல்லு...''

இத்தனைக்கும் சேர்த்து வைத்து, அவன் எப்போதாவது ஓரிரண்டு வார்த்தைகள் பேசுவான்.


''ஷ்... எதுக்காக இப்படி அடிச்சுக்கறீங்கப்பா... அவ இங்கிலீஷ்லே பேசறதை எல்லாம், தமிழ்லே மொழி பெயர்த்தா - உங்க பிளட் பிரஷர் ஏறிடும். சும்மா கிடங்க....''

''அம்மா, நீ செஞ்ச முதல் தப்பு - இந்த மனுஷனோட தரம் தெரியாம கழுத்தை நீட்டினது. ரெண்டாவது தப்பு - இவர் கிட்ட என்னைப் பெத்தது. மூணாவது தப்பு - பட்டணத்துல டாக்டருக்குப் படிச்ச பொண்ணைப் பார்த்து என் தலையில கட்டினது. அவதிப் படு!''

மீராவின் தட்டில் சுடச் சுட இட்லியை எடுத்து வைத்தபடியே ராஜேஸ்வரி கேட்கிறாள்,

குழந்தை மேதை குஞ்சப்பா

'கயா'



''இங்கே என்ன விஷயமா வந்திருக்கேம்மா?''

அவளை முந்திக் கொண்டு, குமரன் பதில் சொல்கிறான்.

''அதான் சொன்னாளே.. இந்த விபத்துக்கு மூல காரணம் யாருன்னு கண்டு பிடிக்க வந்திருக்காங்களாம். துப்பறியும் பெண் புலி...!

மீராவின் முகம் சிவக்கிறது.

''மிஸ்டர் குமரன், நீங்க எப்படி இந்த விஷயத்துல அக்கறை எடுத்துட்டிருக்கீங்களோ, அப்படித்தான் நானும். மரியாதையோட பேசுங்க...''

ராஜேஸ்வரி பதறி விட்டாள்.

''அய்யய்யே... என்னம்மா நீ.... ஏதோ பேச்சு வாக்குல சொன்னதைப் போய் பெரிசா எடுத்துக்கிட்டு... இவன் எத்தனையோ விதத்துல ஒசத்திம்மா.... எங் குடும்பத்திலேயே மட்டு மரியாதை கொடுத்துப் பழகக் கூடியவன் குமரன் ஒருத்தன்தான்... நீ உட்காருவியா... இட்லிக்குத் தொட்டுக்க கொத்துமல்லி சட்னி வச்சுக் கறியா...? உங்க வீடுங்க மாதிரி மிளகாத் தூள் செய்ய நமக்கு வராது....''

அந்த அம்மாள், ஏதோ ஒரு குழந்தைக்குப் பராக்கு காட்டிப் பரிமாறுவது போல பரிமாறுகிறாள்.

குமரன் மனத்துக்குள் ஏகமாய்க் குமைகிறான்.

இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் கூட, மீராவுக்கும் தனக்கும் கடுமையான வாக்குவாதம் வந்து விடும் என்றே முடிவுக்கு வருகிறான்.

'இவளை உள்ளே விட்டதே தப்பு...'

'எல்லாம் இந்த அம்மாவாலேதான்....'

மீரா, இது எதைப் பற்றியும் சிந்திக்காமல் சாப்பிட்டு முடிக்கிறாள்.

''தாங்க்ஸ். நிஜமாவே நல்ல பசி...''

''உம் முகத்தைப் பார்த்தாலே தெரிஞ்சுதே... பகல் சாப்பாட்டையும் இங்கேயே வச்சுக்க... கறி சாப்பிட மாட்டே இல்லே?''

''ஐயோ! முட்டை கூட சாப்பிட மாட்டேன்!''

''பயப்படாதே. நானும் உன்னை மாதிரி தான்.... அது என்னமோ பன்னெண்டு வயசுலேயே தோணிப் போச்சு.. உசுரைக் கொன்னு, உடம்பை வளர்க்கறது பாவமில்லையான்னு... அத்தோட விட்டுட்டேன். என் பேரன் கூடப் பாரு.... வெறும் பருப்பு சோறுதான். குமரனுக்கும், அவன் அப்பாவுக்கும்தான் சிக்கனோ, மட்டனோ இல்லாம சாப்பாடு இறங்காது... அடேங்கப்பா.. ஒரு நாளைக்குப் பருப்பு சாம்பார் வச்சிட்டா, கத்தி ஊரைக் கூட்டுவாரு பாரு....!''

ராஜேஸ்வரி, மறுபடியும் கடந்த கால



ராஜீவ் காந்தியின் மகன் ராகுல், ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் மிகவும் விருப்பத்தோடு படித்து வரும் துறை: 'சர்வதேச அளவில் வன்முறை'

- வி. ந. ஸ்ரீதரன்.

ஆதாரம்: 'சண்டே அப்சர்வர்'

நினைவுகளில் மூழ்க - குமரன், மீராவைப் பார்த்து, கடுகளவும் சினேகமின்றிக் கேட்கிறான்.

''சரி. எங்கே தங்கப் போறீங்க?''

''அதான் சொன்னேனே.. சமைச்சு சாப்பிட, ராத்திரி படுக்க, பத்தடிக்குப் பத்தடி ஒரு ரூம்.... போதும்...''

''எனக்குத் தெரிஞ்சு அப்படி எதுவுமில்லே. மேலும் எனக்கு புரோக்கர் வேலை இல்லே... எனக்கு என் கட்சி, மக்கள், அவங்க தேவை, சமுதாயச் சீர் திருத்தம்னு நிறைய வேலை இருக்கு.... ஃபாக்டரி வேற இருக்கு... அங்கே யூனியன்லே ஆயிரம் பிராப்ளம்...''

மீரா, கழுத்தைச் சாய்த்து அவனைப் பார்க்கிறாள்.

''பாதுகாப்பு கேட்டு வந்த ஒரு பொண்ணுக்கு இட வசதி செஞ்சு தர முடியலை.... உங்களுக்கெல்லாம் எதுக்குக் கட்சிப் பணியும், கத்தரிக்காயும்!''

குமரன், கையிலிருந்த சிகரெட் பெட்டியை விட்டெறிகிறான்.

''காலங்கார்த்தாலே பிடிக்கப் பார்க்கறேன்... தகராறு பண்ணறதுக் குன்னே வந்திருக்கியா நீ...! கட்சியப் பத்தி உனக்கு என்ன தெரியும்? என்னமோ, புருஷனைப் பறி கொடுத்த பொண்ணாச்சேன்னு இரக்கப் பட்டுப் பேசினா, மேல மேல போறியே.... எனக்கு இடம் எதுவும் தெரியாது. என்ன செய்யணுமோ செஞ்சுக்க!''

அவன், விடுவிடுவெனக் கூடத்தைக் கடந்து, தோட்டத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி அமர்ந்து, ஓங்கி உதைக்கிறான்.

அவனது கோபத்தைப் புரிந்து கொண்டாற் போல - மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறக்கிறது.

(தொடரும்)

50

பரிசு ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/–
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/–
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/–
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/–

முடிவு தேதி: ஆகஸ்டு 31, 1991

- இதற்கடுத்த பத்து மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து கல்கி பொன்விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.
- நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.
- கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.
- பிரதி வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 – 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.
- அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன்விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

— ஆசிரியர், கல்கி, சென்னை – 600 032.

வயிற்றிடம் கருணை காட்டுங்கள்!

'அரசனைப் போல் காலை உணவும் ஆண்டியைப் போல் இரவுச் சாப்பாடும் கொள்'

என்று ஆங்கிலப் பழமொழி உண்டு. ஆனால் இன்றைய அவசர யுகத்தில் பெரும்பாலோர் காலையில் என்ன சாப்பிடுகிறோம் என்றே தெரியாமல் அள்ளிப் போட்டுக் கொள்வதும்; இரவு வேலை முடிந்த நிம்மதியில் ஒரு வெட்டு வெட்டு




✦ கோமதி

வதும்தான் நடைமுறையாக இருக்கிறது.

சில பிரபலங்கள் சாப்பிடும் பிரேக்ஃபஸ்ட் என்ன? என்று துருவிக் கேட்ட போது....

வி. ஜி. பி. சந்தோஷம்: ''இவர் அநேகமாய் இட்லி, தோசை அல்லது புட்டுதான் சாப்பிடுவார். புட்டு ரொம்பப் பிடிக்கும். இட்லிக்குத் தொட்டுக் கொள்ள மட்டன் குழம்பு பிடிக்கும். உளுந்து, அரிசி, தேங்காய் சேர்த்த ஒரு வகைக் கஞ்சி குடிப்பதும்



✦ நாகலக்ஷ்மி



✦ ஃபிலோமினா



✦ கலா



✦ ராஜலக்ஷ்மி

உண்டு'' என்று விவரித்த திருமதி ஃபிலோமினா சந்தோஷம் ''கோல்டன் பீச்சுக்குப் போனால் கூட வீட்டுச் சாப்பாட்டை எடுத்துப் போய்தான் சாப்பிடுவார்... இவருக்கு வெளியே சாப்பிடப் பிடிக்காது!'' என்று ஒரு கூடுதல் தகவலும் தெரிவித்தார்.

கங்கை அமரன்: ''இவர் காலையில் சாப்பிடும் நாட்களில் இட்லி, தோசை அல்லது பூரி... வேலை அதிகமென்பதால் ஒன்றுமே சாப்பிடாமல் பறந்த நாட்களும் உண்டு. நேரத்துக்குச் சாப்பிடாமல் வயிற்றுக் கோளாறு வந்து மருந்து சாப்பிடவும் நேர்ந்துள்ளது...'' என்று கூறுகிறார் திருமதி கலா கங்கை அமரன்.

பாலகிருஷ்ண சாஸ்திரிகள்: ''தினமும் ஏதேனும் ஆகாரம் சாப்பிட்ட பின் மருந்து, மாத்திரை சாப்பிட வேண்டியுள்ளதால் காலை எட்டு மணிக்கெல்லாம் இரண்டு இட்லி அல்லது ஒரு கப் பொங்கல், அல்லது சுக்கா ரொட்டி சாப்பிடுவார். விரத நாட்களில் ராகி கூழ். இவருக்குச் சர்க்கரை வியாதி இருப்பதால் அரிசிக்குப் பதில் கோதுமை பயன்படுத்திச் செய்யும் ஐட்டங்கள் அதிகம். உப்புமா, இட்லி கூட சம்பா கோதுமையில் தயாரிப்பதுண்டு. கோதுமை மாவில் உப்பு, மோர், விட்டுக் கரைத்து, சிறிதளவு உளுந்தை அரைத்துச் சேர்த்து இரண்டு மணி நேரம் கழித்துத் தோசையாக வார்த்துத் தந்தால் விரும்பிச் சாப்பிடுவார்...'' என்கிறார் திருமதி. நாகலட்சுமி பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

கோபாலகிருஷ்ணன் (இந்தியன்

வங்கி): ''இவர் சாப்பிடுவது இட்லி, தோசை அல்லது ஆப்பம் போன்ற டிபன். டிபனுக்குப் பிறகு சீரகத் தண்ணீர் குடிப்பது பல வருடப் பழக்கம். இரவிலும் டிபன் தான் சாப்பிடுவார்...'' என்கிறார் திருமதி **ராஜலஷ்மி கோபாலகிருஷ்ணன்.**

எந்த வகை உணவைக் காலை ஆகார மாகக் கொள்வது நல்லது...? விளக்கு கிறார், சென்னை மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி நியூட்ரிஷன் துறை விரிவுரை யாளர் கோமதி சிவாஜி:

எந்த உணவைக் காலை ஆகாரமாகக் கொண்டாலும் அதில் மாவுச் சத்தும், புரத மும் அளிக்கக்கூடிய தானியக் கலவை உள்ளதா என்று கவனித்துக் கொள்ள வேண் டும். நமது தென்னிந்திய உணவு வகைக ளான இட்லி, தோசை, பொங்கல் போன்ற வற்றில் இக் கலவை சரியான விகிதத்தில் அமைந்திருக்கிறது. முட்டையுடன் ரொட்டி சாப்பிடுவதும் நல்லதே. மேல்நாட்டு வழக் கப்படி பழச்சாறு அருந்துவதோ நம் கிராமத்துப் பக்கங்களில் உள்ள வழக்கப் படி உளுந்து, ராகி கஞ்சி அருந்துவதோ வர வேற்கத்தக்கது.

சிலர் காலையில் சாதம், குழம்பு, பொறி யல் என முழுச் சாப்பாடே சாப்பிடுவர். இதுவும் நல்லதே. இவர்கள் மதியம் டிப னில் மாவு - புரதச் சத்து சேர்க்கை இடம் பெறும்படி பார்த்துக் கொள்ளலாம்.

காலையில் தவிர்க்க வேண்டிய உண வுகள்:


பூரி - கிழங்கில் மாவுச் சத்து அதிகம். எண்ணெயில் பொறித்ததால் வயிற்றை அடைக்கும். அதிகம் எண்ணெய் ஊற்றி வதக்கிய பொருள்கள் கூடாது.

சர்க்கரை வியாதி உள்ள சிலர் அரிசிக்குப் பதில் கோதுமையில் செய்த பண்டங்களை எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிட லாம் என்று நினைக்கிறார்கள். கோதுமை யையும் அளவோடுதான் சாப்பிடலாம். அதே போல் சூரியகாந்தி எண்ணெயில் கொலஸ்ட்ரால் சத்து கம்மி என்பதால் அதில் சமைத்துத் தாராளமாகச் சாப்பிட லாம் என்ற எண்ணமும் தவறு! எல்லா எண் ணெயிலும் உள்ள கலோரி அளவுதான் சூரியகாந்தி எண்ணெயிலும் உள்ளது. அதிக எண்ணெயால் உடல் எடை கூடத்தான் செய்யும்.

இரவு முழுதும் உணவு கொள்ளாமல் இருப்பதால் காலியாய் உள்ள வயிற்றிடம் கருணை காட்டி ஆரோக்கியமான உண வைக் காலையில் சரியான விகிதத்தில் உண்ண வேண்டும். ஒருபோதும் காலை உணவைத் துறந்து வயிற்றைக் காயப் போட வேண்டாம்.

தொகுப்பு : பானுமதி ராமச்சந்திரன்

வாசகர் யோசனை :
முசிறி சங்கரன்,
விராலிமலை.



அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பாட புத்தகத் தேர்வுக் குழுவில் டி. கே. சி. இருந்தார்.

இண்டர் மீடியட் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் இறையனார் அகப் பொருள் உரையில் எத்தனை பக்கம் இடம்பெற லாம் என்று விவாதிக்கப்பட்டது.

''ஐம்பது பக்கம் வைக்கலாம்'' என்று ஒரு உறுப்பினர் கூறினார்.

''ஒரு பக்கம் போதுமே! இந்த மாதிரி நடையில் எழுதக் கூடாது என்பதைக் காட்ட அது போதாதா?'' என்று கேட்டார் டி. கே. சி!



★ ★ ★ ★ ★

சங்கீத மேதை மொசார்ட்டிடம் ஒரு இளைஞன் வந்தான். ''சிறந்த பாடல்களை எப்படி இயற்றுவது?'' என்று கேட்டான்.

''நீ சிறியவன். முதலில் எளிய பாடல்களை இயற்ற முயற்சி செய்!''

''நீங்கள் மட்டும் பத்து வயதிலேயே சிறந்த பாடல்களை இயற்றவில்லையா?''

''ஆமாம். ஆனால் எப்படி இயற்று வது என்று நான் யாரிடமும் போய்க் கேட்டுக் கொண்டிருக்கவில்லையே!''

- வயலூரான்.

ஆதாரம்: அறிஞர்கள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்.

டெபாசிட் திரட்டுவதில் ரூ.100கோடி என்னும் வெற்றிச் சாதனை படைத்தது சக்தி பைனான்ஸ்.

போக்குவரத்திலே பழம்பெரும் நிறுவனம் ஏ.பி.டி.



ஆறே ஆண்டுகளில்
ரூ. 100 கோடி - ஆம்
டெபாசிட்டர் இவ்வரிய
சாதனையின் முன்னோடி
நிலையான நம்பிக்கையின்
பிரதிபலிப்பு - இங்கு நித்தம் நித்தம் பெரும்
கனிப்பு

சிறந்த சேவைக்கு சக்தி பரிபூரண
பாதுகாப்புக்கு சக்தி பாரெங்கும்
துவங்கிவிட்டோம் கிளைகள் பயன்பெற்று
மகிழ்ந்திடுவீர் அருகில்.

ஆறு மாநிலங்களில் 36 கிளைகள் - அதில்
ஆங்காங்கே பாதுகாப்புப் பெட்டகங்கள்
அத்தனைக்கும் மேலாக முகவர்கள்
அதிவிரைந்த சேவைக்கு நாங்கள்

ரூ. 400 கோடி மதிப்புள்ள சக்தி குழுவின்
ஓர் அங்கம் நாணயத்தின் மறுபெயர்தான்
இவ்வங்கம்.

போக்குவரத்துத் துறையின் முன்னோடி
புத்தம் புதிய சாதனைகளுக்கு வழிகாட்டி
நித்தம் ஒரு புது படைப்பு நீண்ட உழைப்பு
அதன் சிறப்பு.

குறித்தகாலம் மற்றும் பாதுகாப்பு பொதுச்
சேவைதான் ஏ.பி.டி. யின் பெருமூச்சு
விரைந்த சேவை அதன் பொறுப்பு வீட்டு
வாசலில் டெலிவரிக்கு, 300க்கும் மேலான
லாரிகள் 500க்கும் மேலான புக்கிங் மற்றும்
டெலிவரி அலுவலகங்கள்
30 இலட்சத்திற்கும் மேலான
வாடிக்கையாளர்கள்.

அதிவிரைந்து விற்பனையாகும் "மாருதிகள்"
அதற்கும் ஏ.பி.டி. தான் வலர்கள். அன்றாடப்
புதுமைகளின் படைப்புகளை அப்பொழுதே
அறிமுகப்படுத்தும் தனிச்சிறப்பு.

போக்குவரத்துத் துறையில் இதன் சாதனை
பொன்னான நேரச் சேமிப்புக்கும்
பெருந்துணை அவசரச் சேவைக்கு ஓர் துணை
அகிலமெங்கும் நிறைந்திருக்கும் ஏ.பி.டி.

**தோளோடு தோள் சேர்த்து நாம் காணும் வெற்றி
தொடர்ந்து நிலைத்திடவே வேண்டி நிற்போம் சக்தி.**

சக்தி பைனான்ஸ் லிமிடெட்

ரூ.400 கோடி மதிப்புள்ள ''சக்தி'' குழுவின் ஓர் அங்கம்

தலைவர் டாக்டர் நா. மகாலிங்கம்

பதிவு அலுவலகம்: 475, டாக்டர் நஞ்சப்பா ரோடு கோயம்புத்தூர் - 641 018.

சிவகாமியின் சபதம்

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

சந்திரன் சாட்சி

இரவு ஜாம நேரத்துக்கு மேல் மாமல்லர், சிவகாமி, ஆயனர் ஆகியோர் திரும்பிக் கிராமத்தை அடைந்த போது, நாவுக்கரசர் மடத்து வாசலில் பெருங்கூட்டம் நிற்பதைக் கண்டார்கள்.

நிலாவொளியில் அந்தக் கூட்டத்தின் மத்தியில் கத்தி கேடயங்களும், வாள்களும், வேல்களும் மின்னின.

மூன்று பேரும் துணுக்கமடைந்து வீதி முனையில் கோயில் மதில் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். மடத்து வாசலில் நின்ற வீரர்கள் யாராயிருக்கும் என்ற கேள்வி மூவருடைய மனத்திலும் எழுந்தது.

அன்று காலையில் குண்டோதரனுக்கும் மாமல்லருக்கும் ஒரு சிறு வாக்கு வாதம் நடந்தது. மேலே நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றித்தான். வராக நதியில் வெள்ளம் வடிந்து விட்டபடியால், பானைத் தெப்பம் ஒன்று கட்டி, அதில் தம்மை வராக நதிக்கு அக்கரையில் கொண்டு போய் விட்டு விட்டுக் குண்டோதரன் திரும்பி வந்துவிட வேண்டும் என்றும், தாம் அங்கிருந்து காஞ்சிக்குப் போய் விடுவதென்றும், குண்டோதரன் ஆயனருக்கும் சிவகாமிக்கும் துணையாக மண்டபப் பட்டுக் கிராமத்திலேயே சில காலம் இருக்க வேண்டும் என்றும் மாமல்லர் சொன்னார்.

குண்டோதரன் இதை மறுத்து, தான் முதலில் அக்கரை சென்று பல்லவ சைனியத்தைப் பற்றித் தகவல் விசாரித்து வருவதாகவும், அதற்குப் பிறகு என்ன செய்வதென்பதை முடிவு செய்து கொள்ளலாமெனவும் கூறினான். மாமல்லரும் இன்னும் ஒரு நாள் சிவகாமியுடன் இருக்கலாம் என்ற ஆசையினால் அதற்கு இணங்கினார்.

ஆனாலும் அன்றைக்கெல்லாம் அவருக்கு அடிக்கடி மனத்தில் பரபரப்பு உண்டாகிக் கொண்டிருந்தது. சாயங்காலம் ஆக ஆக, ''குண்டோதரன் ஏன் இன்னும் வரவில்லை?'' ''எத்தனை நாள் இங்கே சும்மா உட்கார்ந்திருப்பது?'' என்ற எண்ணங்கள் அவ்வப்போது அவர் உள்ளத்தில் தோன்றி அல்லல் செய்தன.

மோகன நிலவொளியில் சிவகாமியுடன் பேசிக் கொண்டிருந்த போது கூட நடு நடுவே மாமல்லரின் மனம், ''குண்டோதரன் இதற்குள் வந்திருப்பானோ? என்ன செய்தி கொண்டு வந்திருப்பான்?'' என்று எண்ணமிட்டுக் கொண்டுதான் இருந்தது.

இப்போது மடத்து வாசலில் கூட்டத்தைக் கண்டதும், அதிலும் வாள்கள் வேல்களின் ஒளியைக் கண்டதும், மாமல்லருடைய மனத்தில் ஏக காலத்தில் பல கேள்விகள் எழுந்தன. இவர்கள் யார்? பகைவர்களா? பல்லவ வீரர்களா? பல்லவ வீரர்களாயிருந்தால் இங்கு நாம் இருப்பது தெரிந்து வந்திருக்கிறார்களா? தெரிந்தவர்களாயிருந்தால், திடீரென்று நம்மைக் கண்டதும் கோஷம் இடுவார்களோ? கிராமவாசிகளுக்குத் தெரிந்து போய் விடுமோ?

மாமல்லருடைய மனத் தயக்கத்தையும் அதன் காரணத்தையும் ஒருவாறு அறிந்து கொண்ட ஆயனர், ''பிரபு! தாங்களும் சிவ

காமியும் சற்று இவ்விடமே நில்லுங்கள். நான் முன்னால் சென்று வந்திருப்பவர்கள் யார் என்று பார்க்கிறேன்'' என்று கூறிச் சென்றார்.

சிவகாமியும் மாமல்லரும் கோயில் மதில் ஓரத்தில் மதிலுக்குள்ளிருந்து கொப்புங் கிளையுமாய் வெளியே படர்ந்திருந்த மந்தார மரத்தின் அடியில் நின்றார்கள். அப்போது மாமல்லர் மடத்து வாசலில் நின்ற கூட்டத்திலிருந்து வந்த சப்தத்தைச் சாது கொடுத்துக் கவனமாய்க் கேட்டார். கலகலவென்று எழுந்த பல பேச்சுக் குரல்களுக்கிடையில் தளபதி பரஞ்சோதியின் குரல் கணீரெனக் கேட்டது. கிராமவாசிகள் பலர் ஏக காலத்தில் மறுமொழி கூறினார்கள். அந்தப் பல குரல்களுடன் சுகப்பிரம்ம முனிவரும் சேர்ந்து, ''மாமல்லா! மாமல்லா!'' என்று கீச்சுக் குரலில் கூவிய சப்தம் எழுந்தது.

மாமல்லரின் மனக் குழப்பமெல்லாம் ஒரு நொடியில் நீங்கி விட்டது. ''நமது தளபதி பரஞ்சோதிதான் வந்திருக்கிறார்! வா! சிவகாமி! நாமும் போகலாம்!'' என்று அவர் உற்சாகம் ததும்பும் குரலில் கூறி மேலே நடக்கத் தொடங்கிய போது, சிவகாமி அவருடைய கரத்தை மெதுவாகத் தொட்டு, ''பிரபு!'' என்றாள். மந்தார மரத்துக் கிளைகளின் வழியாக வந்த பால் நிலவின் ஒளியில் அவளுடைய கண்களில் துளித்திருந்த இரு கண்ணீர்த் துளிகளும் முத்துப் போல் பிரகாசித்ததை மாமல்லர் பார்த்தார்.

''என் கண்ணே! இது என்ன?'' என்று மாமல்லர் அருமையுடன் கூறி, தமது அங்க வஸ்திரத்தினால் கண்ணீரைத் துடைத்தார்.

''உங்கள் தளபதியின் குரல் கேட்டதும் இந்தப் பேதைப் பெண் அவசியமில்லாமல் போய் விட்டேனல்லவா?'' என்று சிவகாமி விம்மினாள்.

இவ்விதம் நேரும் என்று சற்றும் எதிர்பாராத மாமல்லர் அவளுக்கு எவ்விதம் தேறுதல் சொல்லுவதென்று தெரியாமல் சற்றுத் திகைத்து நின்றார். பின்னர், ''என் ஆருயிரே! ஏன் இவ்விதம் பேசுகிறாய்? சற்று முன்னால் நீதானே உன் வாயார வீர மொழிகள் புகன்று என்னைப் போர்க்களத்துக்குப் போகும்படி ஏவினாய்? போக வேண்டிய சமயம் வந்திருக்கும் போது இவ்விதம் நீ கண்ணீர் விட்டால், நான் என்ன தைரியத்துடன் போவேன்?'' என்று கூறி, சிவகாமியின் அழகிய முகவாயைப் பிடித்து நிமிர்த்தினார். அப்போது சிவகாமியின் முகத்தில் நிலாமதியின் கிரணங்கள் நேராக விழ, அவளுடைய இயற்கைப் பொன்னிற முகம் தந்த நிறம் பெற்றுத் திகழ்ந்தது.

சிவகாமி அவருடைய கரத்தைத் தன் முகவாயிலிருந்து எடுத்துத் தன் கண்களிலே சேர்த்துக் கண்ணீரால் நனைத்தவண்ணம் ''இந்தப் பேதை நெஞ்சம் ஏனோ காரணமில்லாத பீதி கொண்டிருக்கிறது. என் வாணாளின் இன்பம் இன்றோடு முடிந்து விட்டது போல் தோன்றுகிறது. பிரபு! என்னை மறக்க மாட்டீர்கள் அல்லவா? மத்த யானையின் மேலேறி யுத்த களத்தில் சத்ருக்களைத் துவம்ஸம் செய்யும் போதும் அகில சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகி மணிமுடி தரித்து ரத்தின சிங்காதனத்தில் அமர்ந்திருக்கும் போதும் இந்த ஏழைச் சிற்பியின் மகளை மறவாமலிருப்பீர்கள் அல்லவா?'' என்று கேட்டாள்.

மாமல்லர் வானக் கடலிலே மிதந்த பூரணச் சந்திரனைச் சுட்டிக்காட்டி, ''சிவகாமி! அதோ, அமுத நிலவைச் சொரிந்து கொண்டு வானவீதியில் பவனி வரும் சந்திரன் சாட்சியாகச் சொல்கிறேன், கேள்! இந்த ஜன்மத்தில் உன்னை நான் மறக்க மாட்டேன் என்று வாக்குறுதி கூறுவதில் பொருள் இல்லை. நான் முயன்றாலும் அது முடியாத காரியம். உன் மனத்தில் காரணம் இன்றித் தோன்றும் பீதிக்கு ஏதாவது உண்மையில் காரணம் இருக்குமானால் ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும். ஒரு வேளை போர்க்களத்தில் நான் வீரமரணம் அடைவேன்.....''

''ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள். ஒரு நாளும் அப்படி நேராது!'' என்று விம்மலுடன் உரத்துக் கூவினாள் சிவகாமி.

மாமல்லர் சொன்னார்: ''அப்படி நேரவில்லையென்றால், உன்னை நான் மறப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. யுத்தமெல்லாம் முடிந்து இந்தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தியாகி நான் ரத்தின சிங்காதனத்தில் வீற்றிருக்கும் காலம் வரும் போது, நீயும் என் அருகிலேதான் வீற்றிருப்பாய். ஆனால் போர்க்களத்துக்குப் போகும் போது, வெற்றி அல்லது வீர மரணத்தை எதிர்பார்த்துத்தான் போக வேண்டும். நான் போர்க்களத்தில் உயிர் துறக்க நேர்ந்தால்தான் என்ன, சிவகாமி! எதற்காகக் கவலைப்பட வேண்டும்? இந்த ஒரு பிறப்போடு, நமது காதல் முடிந்து விட்டதா? ஒரு நாளும் இல்லை. போர்க்களத்தில் உயிர் போகும் போது எனக்கு நினைவிருந்தால் பிறைசூடும் பெருமானைத் தியானித்து, 'இந்தப் புண்ணிய பாரத

அமரர் கல்கி

பூமியிலே பாலாறும் பெண்ணையும் காவேரியும் அமுதப் பிரவாகமாய்ப் பெருகும் தமிழகத்திலே, மீண்டும் வந்து பிறக்கும் வரம் தாருங்கள்' என்று கேட்பேன். அவ்விதமே இந்தத் தமிழகத்தில் பிறந்து, ஊர் ஊராய் அலைந்து திரிவேன். பூர்வ ஜன்மங்களிலே நான் காதலித்த சௌந்தரிய வடிவத்தை, மோகன உருவத்தை, ஜீவனுள்ள தங்க விக்கிரகத்தைத் தேடிக் கொண்டு அலைவேன். இம் மாதிரி கார்த்திகை மாதத்துத் தாவள்யமான நிலவொளியிலே உன்னை மீண்டும் காண்பேன். கண்டதும் தெரிந்து கொள்வேன் நீதான் என்று. 'இந்தப் பெண்ணின் முகத்திலே ததும்பும் சௌந்தரியம், இவளுக்குச் சொந்தமானதில்லை. பல ஜன்மங்களிலே தொடர்ந்து வந்த என் காதலின் சக்திதான் இந்த முகத்துக்கு இந்த மோகனத்தை அளித்திருக்கிறது' என்று தெரிந்து கொள்வேன். உன் கண்களில் ஜொலிக்கும் மின் ஒளியிலே என் உயிரின் சுடரைக் கண்டு தெரிந்து கொள்வேன். உன் இதழ்களின் புன்னகையில் என் இருதயத்தின் தாபம் தணிவதை உணர்ந்து அறிந்து கொள்வேன். இவள்தான் என் சிவகாமி! ஜன்ம ஜன்மங்களிலெல்லாம் என் உயிரிலே கலந்த இன்ப ஒளி இவள்தான்; சரத்கால சந்திரனின் மோகன நிலவில் நான் பார்த்துப் பார்த்து மகிழ்ந்த சௌந்தரிய வதனம் இதுதான்! இந்தக் கருங்குவளைக் கண்களிலேதான் என்னுடைய விழிகளாகிய வண்டுகள் ஓயாது மொய்த்து மதுவருந்தி மயங்கின!' என்று தெரிந்து தெளிவேன். சிவகாமி, வாக்குறுதி போதுமா? திருப்தியடைந்தாயா?''

மாமல்லரின் கவி இருதயத்திலிருந்து பிரவாகமாய்ப் பொழிந்த அமுதச் சொற்கள் சிவகாமியைத் திக்குமுக்காடச் செய்தன. அவளுடைய தேகம் சிலிர்த்தது! புளகாங்கிதம் உண்டாயிற்று. தரையிலே நிற்கிறோமா, வானவெளியில் மிதக்கிறோமா என்று தெரியாத நிலையை அவள் அடைந்தாள்.

திடீரென்று கலகலத்வனியையும், ''அதோ மாமல்லர்!'' ''அதோ பல்லவ குமாரர்!'' என்ற குரல்களையும், ''மாமல்ல பல்லவேந்திரர் வாழ்க!'' ''வாழ்க! வாழ்க!'' என்ற கோஷங்களையும் கேட்டுச் சிவகாமி சுயப் பிரக்ஞை அடைந்தாள்.

''எனக்குத் திருப்திதான்! ஜனங்கள் இங்கு வருவதற்குள் தாங்கள் முன்னால் செல்லுங்கள்!'' என்று கூறினாள்.


முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

''விடு படகை!''

கூட்டத்தில் எல்லாருக்கும் முன்னதாகத் தளபதி பரஞ்சோதி விரைந்து வந்து மாமல்லருக்கு வணக்கம் செலுத்தி, ''பிரபு! இதென்ன இப்படி செய்து விட்டீர்கள்? எங்களையெல்லாம் கதிகலங்க அடித்து விட்டீர்களே?'' என்றார். மாமல்லர் பரஞ்சோதியை ஆர்வத்துடன் ஆலிங்கனம் செய்து கொண்டு, ''உங்களுக்கெல்லாம் ரொம்பவும் கவலைதான் அளித்து விட்டேன். அப்புறம் நீங்கள் என்ன செய்தீர்கள்? வெள்ளத்தினால் நமது படையில் சேதம் அதிகம் உண்டா?'' என்று கேட்க, பரஞ்சோதி, ''சூலபாணியின் அருளால் நல்ல சமயத்தில் எச்சரிக்கப்பட்டோம். அதனால் உயிர்ச் சேதம் ஒன்றுமில்லை, எத்தனையோ விஷயங்கள் சொல்ல வேண்டும்; பேச வேண்டும். வாருங்கள், பிரபு! இந்தக் கோயிலுக்குள் சிறிது போய்ப் பேசலாம்!'' என்று கூறினார். இருவரும் கைகோத்துக் கொண்டு உற்சாகமாக நடந்து சென்று முன்கோபுர வாசல் வழியாகக் கோயிலுக்குள் பிரவேசிக்க பின்னோடு கூட்டமாக வந்த கிராமவாசிகளைக் கோயிலுக்குள் செல்லாதபடி வீரர்கள் தடுத்து நின்றார்கள்.

மாமல்லரும் பரஞ்சோதியும் அவ்விதம் குதூகலமாகப் பேசிக் கொண்டு போனதையும், சற்றுப் பின்னால் மரத்தடியில் நின்ற தன்னை யாரும் கவனியாததையும் கண்ட சிவகாமிக்குப் பெரும் மனோவேதனை உண்டாயிற்று. ஆயனரும் அவரோடு ரதியும் சுகரும் மட்டும் 'சிவகாமி நிற்குமிடம் வந்தார்கள். ''இனிமேல் நீங்கள்தான் என் உண்மையான சிநேகிதர்கள்!'' என்று கூறுவது போல், ரதியையும் சுகரையும் சிவகாமி தடவிக் கொடுத்தாள். முன்னால் சென்ற கூட்டத்தின் ஆரவாரம் சற்று அடங்கியதும் இவர்கள் மடத்தை நோக்கிச் சென்றார்கள்.

வழியில் கோயில் வாசலை நெருங்கிச் சென்ற போது, அங்கே கூடியிருந்த கிராமவாசிகள் சிலர் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகள் சிவகாமியின் காதில் விழுந்தன.



''பல்லவ குமாரர் இப்படி நம்மை ஏமாற்றி விட்டாரே?''

''நான்தான் சொன்னேனே, முகத்தில் இராஜ களை வடிகிறதென்று? கேவலம் சிற்பியின் முகமா அது?''

''தகப்பனாரைப் போலவே புதல்வரும் வேஷம் போடுவதில் வெகு சமர்த்தர் போலிருக்கிறது!''

''ஆயனர் குடும்பத்தைக் காப்பாற்று வதற்காகவே இந்த வெள்ளத்தில் அகப் பட்டுக் கொண்டாராமே?''

''என்னதான் அபிமானம் இருந்தாலும் அவ்வளவு தூரத்துக்குப் போயிருக்கக் கூடாது. ஏதாவது அபாயம் நேர்ந்திருந்தால் பல்லவ சாம்ராஜ்யத்தின் கதி என்ன ஆகி றது?''

''மாமல்லரை விடப் பரஞ்சோதி பெரிய வீரராமே?''

''அதெல்லாம் இல்லை; இரண்டு பேரும் சமம்தான்!''

''யார் சொன்னது? மாமல்லருக்குச் சம மான வீரர் உலகத்திலேயே கிடையாது. பரஞ்சோதியை போர்க்களத்திற்குச் சக்கர வர்த்தி அழைத்துப் போயிருந்தார். அத னால் அவருடைய வீரம் வெளியாயிற்று. மாமல்லர் முதன் முதலில் புள்ளலூர்ச் சண்டையில்தானே கலந்து கொண்டார்? அங்கே பரஞ்சோதி இருந்த இடம் தெரி யாமல் போய் விடவில்லையா?''

''அவர்களுக்குள்ளே வித்தியாசமே கிடையாதாம். அவ்வளவு அந்நியோன்னிய நண்பர்களாம். நாம் ஏன் வித்தியாசப் படுத்திப் பேச வேண்டும்?''

''எது எப்படியாவது இருக்கட்டும். இரண்டு பேரும் நம் ஊரில் விருந்துண் ணாமல் திரும்பிப் போகக் கூடாது!''

இந்த மாதிரி பலவிதமான பேச்சுக்களை யும் காதில் வாங்கிக் கொண்டு சிவகாமி மடத்துக்குப் போய்ச் சேர்ந்தாள். அவளு டைய உள்ளம் அளவில்லாத பெருமையை யும் சொல்ல முடியாத வேதனையையும் மாறி மாறி அடைந்து கொண்டிருந்தது.

கிராமவாசிகளின் விருப்பத்தின்படியே மாமல்லரும் பரஞ்சோதியும் மற்ற வீரர் களும் கிராமவாசிகள் அவசரமாகப் பக்கு வம் செய்து அன்புடன் அளித்த விருந்தை உண்டார்கள்.

விருந்து முடியும் போது அர்த்த ராத்தி ரிக்கு மேலே ஆகி விட்டது. பொழுது விடிந்த பிறகு போகலாம் என்று கிராமப் பெரியோர்கள் கேட்டுக் கொண்டது பயன் படவில்லை. இரவுக்கிரவே கிளம்ப வேண் டியது அவசியமாயிருந்தது.

புறப்படுகிற சமயம் வந்த போது, ஆயன ரிடமும் சிவகாமியிடமும் விடைபெற்றுக் கொள்ள மாமல்லர் மடத்துக்குள்ளே சென் றார்.

அருள்வாக்கு

ஒரு பந்தல் போட்டிருக்கிறது. ஸுர்ய வெளிச்சம் கீற்று ஓட்டை வழியாக உள்ளே வருகிறது. இதை ஒரு குழந்தை பார்த்தால் அந்த இடத்தில் பந்தலேதான் ஒளியை ஸ்ருஷ்டித்து அனுப்பியிருக்கிறது என்று நினைக்கும். ஸுர்யனைப் பந்தல் மறைப்பது. அதன் இடுக்கு வழியாய் ஸுர்ய வெளிச்சம் வருவது எல்லாம் குழந்தைக்குத் தெரியாது. நாமும் அப்படித்தான் இருக்கிறோம். ஆத்ம ஜ்யோதியை மறைக்கிற நம் சரீரத்தில், அதன் லவலேசத்தைப் பாய விடுவதாக இந்த்ரியாநு பவங்கள் இருக்கின்றன. நாமோ இந்த்ரியங்க ளுக்கு விஷயமாகும் வஸ்துகளிலிருந்தே அனுபவம் வருவதாக மயங்குகிறோம்! ஜ்யோதிஸை மறைக்கிற பந்தலிலிருந்தே வெளிச்சத்தை உண் டாக்கிக் கொள்ள முயற்சி செய்தால் எப்படி இருக்கும்? அப்படித்தான் நாம் தேஹத்தைக் கொண்டு நித்யா னந்தத்தைப் பெற நினைப்பது. பந்தலைப் பிரித்து விட்டால் எல்லாம் வெளிச்சமாய் விடு வது போல், தேஹ ப்ரக்ஞை போனால் ஆத்மா வுக்கே உரியதான பூர்ணானந்த ஸ்வரூபமாகி விடலாம்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சார்ய சுவாமிகள்.

"ஆயனரே! உங்களிடம் விடைபெறுவது எனக்குச் சங்கடமாய்த்தானிருக்கிறது. ஆயினும் என்ன செய்யலாம்! புலிகேசியின் படைகள் காஞ்சியை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றனவாம். உடனே வரும்படி சக்கரவர்த்தி சொல்லியனுப்பியிருக்கிறார்" என்றார் மாமல்லர்.

மாமல்லரிடம் அளவில்லாத அன்பும் மரியாதையும் கொண்டவரான ஆயனர், "பிரபு! இவ்வளவு நாள் தாங்கள் இங்கிருந்தது நாங்கள் செய்த பாக்கியம். இதற்கு மேல் நாங்கள் ஆசைப்படக் கூடாது. போய் வாருங்கள். உங்களை வழி அனுப்ப நாங்களும் நதிக்கரை வரையில் வரலாமல்லவா?" என்றார்.

"அவ்வளவு தூரம் வருவது அவசியமில்லை. இஷ்டப்பட்டால் வாருங்கள்!" என்றார் மாமல்லர்.

மாமல்லர் சிவகாமியை நோக்கிய போது அவள் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த அபூர்வமான காதலர்க்கு மத்தியில் திடீரென்று ஒரு திரை விழுந்து விட்டது போலிருந்தது.

இரவு மூன்றாம் ஜாமம் முடியும் சமயத்தில், சந்திரன் மேற்கு வானவட்டத்தின் அடியில் பிரகாசித்துக் கொண்டிருந்த போது, வராக நதியில் ஆயத்தமாக நின்ற படகுகளில் மாமல்லர், பரஞ்சோதி முதலியோர் ஏறிக் கொண்டார்கள்.

கரையிலே கிராமவாசிகளும் ஆயனரும் சிவகாமியும் நின்றார்கள். இத்தனை நேரமும் எங்கேயோ போய் விட்டு அப்போதுதான் ஓட்ட ஓட்டமாய்த் திரும்பி வந்திருந்த குண்டோதரனும் பின்னால் நின்றான். நதிக்கரையிலும் மாமல்லர் சிவகாமியுடன் பேசுவதற்கு வசதி கிடைக்கவில்லை! படகில் ஏறிக் கொண்டதும் அவர் கரையிலிருந்த சிவகாமியை உற்று நோக்கினார்.


சிவகாமியும் அவரை அப்போது ஆர்வத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

ஏதாவது சொல்ல வேண்டுமென்று மாமல்லருடைய உதடுகள் துடித்தன. ஆனால், வார்த்தை ஒன்றும் வரவில்லை.

தளபதி பரஞ்சோதி, "விடு படகை!" என்று கட்டளையிட்டார்.

படகு சென்றதும், சிவகாமிக்கு தன் வாழ்நாளின் இன்பத்தையெல்லாம் அந்தப் படகு கொண்டு போவது போல் தோன்றியது.

(தொடரும்)





டாக்டர்களுக்கும் உண்டு,

இந்தக் கட்டுரையை எழுதியவர் மருத்துவத் துறையில் நீண்ட கால் அனுபவம் உள்ள பிரபல டாக்டர். இத்துறையில் மனிதாபிமானம் குறைந்து வியாபாரப் போக்கு அதிகரித்து வருவதைத் தார்மீக உணர்வுடன் சாடும் போதே, விஞ்ஞான முன்னேற்றத்துக்கு ஏற்ப சமுதாய மாற்றங்கள் நிகழாததால் டாக்டர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகளையும் நியாய உணர்வோடு எடுத்துக் காட்டுகிறார்.

சில காலம் முன்பு வரை குடும்ப டாக்டர் குடும்ப நண்பராகவும் திகழ்ந்தார். குழந்தைகளின் நடத்தையில் ஏற்படும் மாறுதல்கள் அல்லது ஒரு கல்யாண ஏற்பாடு போன்றவற்றுக்குக் கூட டாக்டரைக் கலந்து ஆலோசித்த காலம் மலையேறி விட்டது. டாக்டர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையேயான உறவு முறை சமூக, பொருளாதார நிர்ப்பந்தங்களால் பெரிதும் மாறி விட்டது.


குடும்ப டாக்டர் குடும்ப நண்பராகவும் இல்லாமல் போனால் பரவாயில்லை; ஆனால் அவர் மனித நேயமுள்ளவராகவாவது இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. இந்த நியாயமான எதிர்பார்ப்பைப் பல டாக்டர்கள் பூர்த்தி செய்வதில்லை என்பதே கசப்பான உண்மை.

இந்த நிலைமை உருவாகியதற்கான காரணங்கள் என்ன?

வியாபார நோக்குக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது முதல் காரணம்.

வருகின்ற நோயாளிக்குப் பல விதமான பரிசோதனைகள் செய்ய வேண்டியிருந்தால், ஒவ்வொரு பரிசோதனைக்கும் ஒவ்வொரு முறை வரச் செய்து, ஒவ்வொரு முறையும் தனித் தனியாக ஃபீஸ் வாங்கும் டாக்டர்கள் உண்டு.

வேறு சில டாக்டர்கள் ஒரு குறிப்பிட்ட மருந்தையே எழுதித் தந்து அதன் அடிப்படையில் அந்த மருந்து தயாரிப்பாளரிடம் கமிஷன் பெறுவார்கள்; அல்லது தாங்கள் குறிப்பிடும் கடையில்தான் மருந்து வாங்க வேண்டும் என்றோ, பரிசோதனைகளைத் தாங்கள் கூறும் 'லாபி'ல்தான்



பிரச்னைகள்!

செய்ய வேண்டும் என்றோ வலியுறுத்தி அந்தக் கடையிலும் லாபிலும் கமிஷன் பெறுவார்கள்.


இந்த விஷயத்தில் டாக்டர்களுக்கு ஆசை காட்டும் மருந்து தயாரிப்பு நிறுவனங்களும் குற்றவாளிகள்தான். சில பிரபல நிறுவனங்கள், ஒரு ஃப்ரிஜ்ஜையோ, ஏர் கண்டிஷனரையோ டாக்டருக்குப் பரிசாகக் கொடுத்து விடும். அந்த டாக்டரும் 'கடமைப்பட்டவராகி' அந்நிறுவனத் தயாரிப்புகளை அவசியமற்ற சமயங்களில் கூட எழுதிக் கொடுத்து விடுவார்.

சில பெரிய மருத்துவமனைகளில் நவீன சி. டி. ஸ்கான், எம். ஆர். ஐ. ஸ்கான் போன்ற வசதிகள் உள்ளன. அந்த மருத்துவமனைகளில் பணிபுரியும் டாக்டர்களுக்கு அவ்வப்போது நிர்வாகத்திடமிருந்து குறிப்பு வரும்:

'நமது மருத்துவமனையில் உள்ள நவீன ஸ்கானிங் வசதிகளைப் போதுமான அளவில் நீங்கள் உபயோகிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது' எனக் குறிப்பிடும் அந்தச் சீட்டைப் பார்க்கும் போது, டாக்டர்கள் நிலை என்ன? அக்கருவிகளைப் பரிசோதனைகளுக்குப் பயன்படுத்த நாசூக்கான முறையில் அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பண நஷ்டம் நோயாளிக்குத்தான்!

'நவீன வசதியுள்ள பெரிய மருத்துவமனையைக் குறிப்பிட்டு, 'அங்கே போய் ஸ்கானிங் செய்து வா' என்று அம்மருத்துவமனையோடு சம்பந்தப்படாத வெளி டாக்டர், ஒரு நோயாளியை அனுப்பினால், அந்த டாக்டருக்கு அம்மருத்துவமனையிலிருந்து "Interpretation Charges' என்று குறிப்பிட்டு ஒரு 'செக்' வந்து சேரும்! இதற்கு என்ன அர்த்தம்? கமிஷன் என்று சொல்லக் கூச்சப்பட்டு வேறு வார்த்தைப் பிரயோகம் செய்தால் கௌரவமாகி விடுமா? இந்த செக்கைத் திருப்பியனுப்பினால் அதை அப்படியே 'சுவாஹா' செய்து கொள்வதற்கு அந்த ஆஸ்பத்திரியில் தக்க வழிமுறையறிந்தவர்கள் காத்திருப்பார்கள். எனவே, சில நல்ல மனம் படைத்த டாக்டர்கள் இந்தத் தொகைகளைத் தனிக் கணக்கில் வைத்திருந்து ஏழை நோயாளிகளுக்கு உதவுவதுண்டு!

நவீன மருத்துவக் கருவிகள் வரவால் மற்றொரு தீய விளைவும் ஏற்பட்டுள்ளது. நோயாளியைத் தொட்டும், அழுத்தியும், தட்டியும், கொட்டியும் பரிசோதித்து முடிவுக்கு வரும் திறமை டாக்டர்களிடையே குறைந்து வருகிறது. எதற்கெடுத்தாலும் சுலபமாக 'ஸ்கான்' செய்து விடுவதே நடை



முறையாகி வருகிறது. போதாக் குறைக்குச் சில நோயாளிகளே தாங்கள் 'ஸ்கானை' விரும்புவதாக டாக்டரிடம் சொல்கிறார்கள்! டாக்டரும் 'நமக்கேன் வம்பு' என்று எழுதிக் கொடுத்து விடுகிறார்.

விளைவு... மூன்று ரூபாய் மருந்தில் குணமாக வேண்டிய நோய்க்கு ஐந்நூறு ரூபாய் செலவு. அவ்வளவு செலவு செய்து நோயை அல்லது நோய் இல்லை என்பதைக் கண்டுபிடித்த பிறகு மூன்று ரூபாய் மருந்தையே எழுதிக் கொடுக்கும் அவலம்!

டாக்டர்களின் மனிதப் பண்பை மட்டுமின்றி, தொடு உணர்ச்சியால் ஆராய்ந்து அதன் அடிப்படையில் நோயை நிர்ணயிக்கும் திறமையையும் நவீனக் கருவிகள் குறைத்து விடுகின்றன.

'கலியுகக் கண்ணன்' திரைப்படத்தைப் பார்த்தவர்களுக்குத் தேங்காய் சீனிவாசன், 'எரித்ரோமைசின், டெர்ராமைசின் என்று பலவித மை'சின்'களைத் தரும் டாக்டர்கள் பற்றிக் குறிப்பிட்டது நினைவிருக்கலாம். இன்று இந்த மைசின்களின் எண்ணிக்கை பெருகி விட்டது. பல டாக்டர்கள், 'காய்ச்சல்' என்று வரும் நோயாளிக்கு, மைசின்களை எழுதிக் கொடுத்துப் பரிசோதனை செய்கிறார்கள். ஏதாவது ஒரு மைசினால் காய்ச்சல் குறையும், பிறகு என்ன வியாதி என்று கண்டுபிடிக்கலாம் என்ற துணிச்சல்!

வேறு சில டாக்டர்கள், இரண்டு நாட்க

ளுக்கு ஆம்பிசிலின்; ஜுரம் குறையவில்லையா? அடுத்த இரண்டு நாட்களுக்கு சிசோமைசின்; பிறகு இரண்டு நாட்களுக்கு சிப்ரோப்ளாக்சாசின் (இது ஒரு மாத்திரை கிட்டத்தட்ட இருபது ரூபாய்!) என்று நோயாளியின் உடலையும் பர்ஸையும் வதைத்து விட்டுக் கடைசியில் சில பரிசோதனைகளையும் எழுதித் தருவார்கள்.

இவையெல்லாம் டாக்டர்கள் செய்யும் தவறுகள். ஆனால் மேற்படி தவறுகளைச் செய்து தொழிலுக்கே கெட்ட பெயர் சம்பாதித்துத் தரும் சில டாக்டர்கள் காரணமாக, நியாயமான பரிசோதனைகளையும் மருந்துகளையும் வழங்கும் டாக்டர்களைக் கூடச் சந்தேகத்துடனும் வெறுப்புடனும் மக்கள் பார்க்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

உதாரணமாக - இதய நோய் அல்லது பாரிச நோய் வந்தவர்களுக்குச் சில நேரங்களில் இரத்தம் கட்டிப் போகாமல் இருக்க மருந்து கொடுக்க வேண்டி வரும். இந்தச் சமயத்தில் தினமும் இரத்தப் பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் அளவோடு மருந்து கொடுக்க வேண்டும். செலவு அதிகம் ஆகும். இதைச் செய்யா விட்டாலோ உயிருக்கு ஆபத்து. இதைப் புரிந்து கொள்ளாமல், 'ஏகத்துக்கு டெஸ்ட் எழுதித் தந்து, செலவு வைக்கிறார் இந்த டாக்டர்' என்று அலுத்துக் கொள்வார்கள். நோயாளியின் உயிருக்கு ஆபத்து வந்தாலும் டாக்டர் மேல்தான் பழி விழும்!

சிசேரியன் ஆபரேஷன் அதிகரித்து வருவதைக் குறித்தும் இப்போது பத்திரிகைகளில் அடிபடுகிறது. இதுவும் பணம் சம்பாதிப்பதற்காகச் செய்யப்படுகிறது என்ற கண்டனம் எழுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன், சிசேரியன் செய்ய நவீன வசதிகள் இல்லாத நிலையில், ஆபரேஷனுக்குப் பயந்து, கையைப் பிறப்புறுப்புக்குள்ளே செலுத்தி, குழந்தையை அசுரத்தனமாக வெளியே எடுத்து விடுவார்கள். ஆனால் அந்த முயற்சியில் குழந்தையின் மூளை ஒருவேளை பாதிக்கப்படலாம். ஆயுள் முழுவதும் அக்குழந்தை, உடல் அல்லது மூளைக் கோளாறினால் முடங்கிக் கிடக்க நேரலாம்.

இன்றையச் சூழ்நிலையில் 'மானிடர்' கருவி மூலம் கருவின் வளர்ச்சியைக் கவனிக்க முடிகிறது. இயற்கைப் பிரசவம் மூலம் தாய் அல்லது சேய்க்கு ஆபத்து என்று தெரிய வரும் போது, சிசேரியன் செய்து குழந்தைக்கும் தாய்க்கும் நல்வாழ்வு அளிக்க முடிகிறது.

இதை உணர்ந்து மகிழ்வதற்குப் பதிலாகப் பணத்தாசை பிடித்துத்தான் சிசேரியன் செய்கிறார்கள் என்று கூறுவது அபாண்டம்.

எல்லாத் தொழில்களிலும் பணத்தாசை பிடித்தவர்கள் உண்டு. மருத்துவத் தொழிலும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் அதற்காக ஒட்டுமொத்தமாக எல்லா டாக்டர்களையும் பணத்தாசை பிடித்தாட்டுகிறது என்று கூறிவிட முடியாது.

புற்றுநோய் சிகிச்சையிலும் டாக்டர்களுக்கு நிறையச் சிக்கல்கள். முற்றாத நிலையில்தான் இந்த நோயைக் குணப்படுத்த முடியும். எனவே சந்தேகம் ஏற்பட்டதுமே சோதனைகள் செய்ய வேண்டும். ஆனால் நோய் உள்ளதா இல்லையா என அறியவும், இருந்தால் அதன் தீவிரத்தைக் கணிக்கவும் செய்ய வேண்டிய பரிசோதனைகளுக்கு

புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரரான ஜோ லூயியிடம் ஒருவர் கேட்டார்: "நீங்கள் போட்ட சண்டைகளில் உங்களுக்கு அதிகமாகக் கஷ்டம் கொடுத்தது யார்?"

பதில்: "வருமான வரி அதிகாரி!"

- வயலூரான்.

ஆதாரம்: அறிஞர்கள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்.





"மேடையில பேர் வைக்க வேண்டிய பெண் குழந்தைகளுக் கெல்லாம் தலைவர் ஏன் லாவண்யான்னு வைக்கிறார்?"

"லஞ்சத்தோடு இணைந்து இருக்கிற பேர் ஆச்சே அது!"

- சீர்காழி வி. ரேவதி

ஐந்நூறு முதல் மூவாயிரம் ரூபாய் வரை செலவாகும்! இப்பரிசோதனைகளைச் செய்தால் 'டாக்டர் பணத்தாசை பிடித்தவர்' என்றும், செய்யாது விட்டால் 'டாக்டருக்குப் பொறுப்பே இல்லை' என்றும் சமயத்துக்குத் தகுந்தாற்போல் பேசுவார்கள். எப்படியும் பழி சுமந்தாக வேண்டிய டாக்டர்கள் பின்னதை விட முன்னதே தேவலாம் என்று நினைப்பதில் வியப்பில்லை!

பல வருடங்களுக்கு முன்பு பெர்னார்ட் ஷா, 'மூக்கு ஸ்பெஷலிஸ்ட் என்றால், வலது நாசித் துவாரத்துக்கா, இடது நாசித் துவாரத்துக்கா?' என்றொரு கேள்வி எழுப்பினார். இன்று அவர் கூற்று கேலியல்ல; கிட்டத்தட்ட யதார்த்தமாகவே ஆகிவிட்டது.

நரம்பு மண்டலம்; இருதயம்; சிறுநீரகம்; நாளமில்லாச் சுரப்பிகள் என்று உடலின் பல்வேறு உறுப்புக்கள் பற்றியும் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து பயிற்சி பெற்றுள்ள நிபுணர்கள் தோன்றியுள்ளார்கள்.

இதனால் பல அனுகூலங்கள் இருந்தாலும் நோயாளிக்கு டாக்டர் மாற்றி டாக்டர் செல்ல வேண்டிய கட்டாயம். இந்த நிலைக்குப் பழகிப் போய்விட்ட பலர் வயிற்று வலி அல்லது தலைவலியோடு குடும்ப டாக்டரிடம் வரும்போதே, 'இத்துறையில் யார் ஸ்பெஷலிஸ்ட்?' என்று கேட்டுக் கொண்டேதான் வருகிறார்கள்!

எந்தத் துறையுமே வளர்ச்சியடையும் போது புதிய பிரச்னைகள் தோன்றும். மருத்துவத் துறைக்கும் இது பொருந்தும்.

மலட்டுத் தன்மையை வெல்லும் பல புதிய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. செயற்கை முறையில் கருவூட்டிய முட்டையைக் கருப்பையினுள்ளேயே நேரடியாகச் செலுத்துவது (GIFT) ஒரு முறை. கருவூட்டிய முட்டையை மாற்றாந்தாயின் கருப்பையில் வளரச் செய்து 'பெற்றுத் தரச் செய்வது' (surrogate mother) இன்னொரு முறை. எலும்புப் புற்றுநோய் வந்தவர்களுக்கு இன்னொருவரிடமிருந்து எலும்பு மஜ்ஜை தானம் பெற்றுச் செலுத்திக் குணப்படுத்த முயற்சி செய்யலாம். சிறுநீரகம், கல்லீரல், என்று உறுப்பு தானம் பெற்றுத் தேவைப்படும் நோயாளிக்குப் பொருத்தலாம். இப்படி முன்னேற்றப் பட்டியல் நீள்கிறது.

ஆனால் இந்த விஞ்ஞான முன்னேற்றங்களுக்கு ஏற்ப சட்ட மாற்றங்களும், சமூக, சமுதாயச் சிந்தனை மாற்றங்களும் ஏற்படவில்லை. இந்த முரண்பாட்டின் காரணமாகவே பல பிரச்னைகள்...

மாற்றாந்தாயாக இருந்து கருவைச் சுமந்து பெற்றுத் தரும் தாய் அக்குழந்தை பேரில் உரிமை கொண்டாட முடியுமா? எந்த அளவுக்கு?

சொந்தச் சகோதரனுக்கு எலும்பு மஜ்ஜை தானம் தர மறுப்பவளைக் கட்டாயப்படுத்தலாமா? என்பன போன்ற தார்மிகக் கேள்விகளுக்கு நமக்குப் பதில் தெரியவில்லை. அரசின் சட்ட இலாகா இது விஷயங்களில் கவனம் செலுத்தவேயில்லை.

இந்தச் சூழ்நிலையில் உயிர் காக்கும் பணியில் ஈடுபடும் டாக்டர்களின் பாடு மிகவும் திண்டாட்டம்.



"உன்னை அடிக்க வந்த பத்துப் பேரையும் நீ ஒருவனாகவே சமாளிச்சியா! எப்படி?"

"ஒரே ஓட்டமா ஓடி வந்துட்டேன்!"

- கோவி. செந்தில்.

டாக்டர்கள் மட்டுமே பணத்தாசை பிடித்தவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்போருக்கு இதைச் சொல்கிறேன்:

மருத்துவச் செலவுகளுக்குத் தாங்கள் பணிபுரியும் தனியார் நிறுவனங்களிடம் ஈட்டுத் தொகை பெறும் நபர்கள் பலர், டாக்டர்களிடம் தேவையற்ற 'பிரிஸ்க்ரிப்ஷனும்' மருந்துக் கடைக்காரரிடம் போலி 'பில்'லும் பெற்றுத் தங்கள் கம்பெனியைக் கொள்ளை அடிக்கிறார்கள். துணை போகும் டாக்டருக்கும் மருந்துக் கடைக்காரருக்கும் கமிஷன்!

ஆக, ஒட்டுமொத்தமான சமூகச் சீரழிவின் சாயலைத்தான் மருத்துவத் துறையிலும் காண்கிறோம். வசதியுள்ளவர்கள் சமாளித்துக் கொள்கிறார்கள். ஏழைகள் பாடுதான் திண்டாட்டம். வளர்ந்துவிட்ட மருத்துவ வசதிகள் இவர்களுக்கு இன்னமும் எட்டாக் கனிதான்!

தேவகியைத் தேடி...

"அட! எப்பலேர்ந்து கண்ணாடி போடறே தேவகி?

மின்னலாய்க் கை முகத்துக்குப் பாய்ந்து கண்ணாடியை இறக்கியது.

"வா விமலா. உக்காரு. ஒண்ணுமில்லே. கொஞ்ச நாளாய்ப் படிக்கிற போது தலை நோகுது. கண் டாக்டர்கிட்ட போய் டெஸ்ட் பண்ணிக்கிட்டேன். லாங் ஸைட் டாம். அதான் கண்ணாடி," தேவகி வார இதழை மூடி மூக்குக் கண்ணாடியோடு சேர்த்து மேஜை மேல் வைத்தாள். லாங் ஸைட் என்றால் கொஞ்சம் கௌரவமாய் இருக்கிறது.

சாளேசரம் என்று எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்.

அழைப்பு மணியை அடிக்காமல், தன்னை மூக்குக் கண்ணாடியோடு பார்க்கும்விதமாய், சரேலென்று உள்ளே நுழைந்து விட்ட சிநேகிதியின் மேல் ஒரு கணம் எரிச்சல் வந்தது. நாகரிகமே தெரியாதா இவளுக்கு? இத்தனைக்கும் விமலா பரசுராமன் படித்தவள். சமூகப் பிரக்ஞை கூட உள்ளவள். அந்த வட்டாரத்துப் பொது மக்களின் குறைகள் அதிகாரவர்க்கத்தின் காதுகளை எட்டும் பொருட்டு 'மக்கள் நலமன்றம்' என்னும் அமைப்பை ஏற்படுத்தி அதன் செயலாளராக உழைப்பவள்.

"உக்காந்து மாகஸின் படிச்சிட்டிருக்கியாக்கும். பாவம், பொழுது போகணுமில்ல! சுதாகிட்டேர்ந்து லெட்டர் வந்துதா?" என்றாள் விமலா.

"ம்."

"பரவாயில்ல. ஹனிமூன் போது கூட அம்மா நினைவு இருக்குதே!"

"என்ன விஷயம் விமலா? இந்த மண்டையைப் பிளக்கற வெயிலுக்கு முதல்ல ஒரு கூல்ட்ரிங்க் தரட்டுமா?" என்று தேவகி பேச்சை மாற்றினாள்.

"அதெல்லாம் வேணாம் தேவகி. ஒரு ஃபோன் பண்ணிக்கலாமா? எங்க ஃபோன் நாலு நாளா ரிப்பேர். நம்ம குடிசைப் பகுதிப் பக்கம் போன மழையில பாழ்பட்ட தெரு இன்னும் சீராகலே. அடுத்த மழைக்குள்ள பழுது பார்க்கலேன்னா அங்கே வசிக்கிறவங்க பாடு ரொம்ப திண்டாட்டமாயிடும். அது விஷயமா கார்ப்பரேஷன்ல எங்க மன்றம் புகார் கொடுத்திருந்தது. ஒரு அதிகாரி உடனே கவனிக்கறோம்னார். ஆனா, இதுவரை எதுவும் நடக்கலே. அதான் மறுபடியும் ஃபோன் பண்ணி ஞாபகப்படுத்தணும்."

"தாராளமா செய்துக்கயேன்."

"தாங்க்ஸ். உன்னையும் மன்றத்தில் சேருன்னா நீதான்..."

"எனக்குச் சுவாரஸ்யப்படலையே! என்ன செய்யறது?"

விமலா திரும்பிச் சென்றபின் மறுபடி கண்ணாடி அணிந்து கொண்டபோதிலும் தேவகிக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. மூக்கின் மீதிருந்த கண்ணாடி மலைக் கனத்துடன் மனசில் அழுந்தியது.

மெள்ள எழுந்து போய் முழு நீள நிலைக் கண்ணாடி முன் நின்றாள்.

இடுப்பு அகன்றிருக்கிறது. முன்பு போல் வயிறு தெரிய சேலை உடுப்பதில்லை. பழைய ஆலிலை வயிறு இப்போது இல்லை. ஆல விழுதுகளாய்க் கோடுகள் தான் தெரிகின்றன. முன்பு சுலபமாய்க் கையில் ஏறிய சோலி இப்போது இறுகப் பிடித்து, தோளைத் தனி வீக்கம் போல் பிதுக்கிக் காட்டுகிறது. காதருகில் ஒன்றிரண்டு வெள்ளை இழைகளை நாசூக்காய்க் கூந்தல் கற்றைக்குள் தள்ளி மூட வேண்டியிருக்கிறது. எத்தனை க்ரீம், பவுடரினாலும் கண்ணுக்கடியில் லேசாய்ப் படியும் வளையத்தை மறைக்க முடியவில்லை. அதற்கு மேலே அந்த வெள்ளெழுத்து மூக்குக் கண்ணாடி!

இவை தவிர, நிலைக் கண்ணாடியில் தெரியாத மாதவிடாய்த் தொந்தரவுகள் 'மெனோபாஸ்' ஆரம்ப அறிகுறிகள்.

நாற்பத்தாறு வயது. 'மிடில் ஏஜ்'.

ஏனிந்தச் சோகம்? ஆண்டுக் கணக்காய் உடன்வாழ்ந்த இளமைக்குப் பிரியாவிடை கொடுக்கும் சோகமா?

ஏதோ ஓர் இழப்பு உணர்ச்சிதான். ஆனால் இளமையை இழப்பதற்காக என்றும் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை.



அவள் தன் பிரதிபிம்பத்தை விட்டு அகன்று சமையலறைக்குச் சென்று காப்பி கலந்து குடித்தாள். பிறகு வரவேற்பறையில் வந்து உட்கார்ந்து, அன்று காலை வந்த மகளின் கடிதத்தை வார்த்தை வார்த்தை யாய்ச் சுவைத்து இன்னொரு முறை படித் தாள்.

சுதா உற்சாகமாய் எழுதியிருந்தாள். உதகையின் எழிலை ஒரு வரி வர்ணித்தால் அடுத்த நான்கு வரிகள் ''உன் மாப்பிள்ளை இதைச் சொன்னார், அங்கே நின்றார், இப்படிச் சிரித்தார்'' என்ற ரீதியில் இருந்தன. எம். ஏ. படித்த பெண்! புதுமணக் கணவன் தேனிலவின் சுவையோடு நெஞ் சில் அப்படி இனித்துக் கொண்டிருந்தாள்.

கடிதத்திலிருந்து தலையை மெல்ல நிமிர்த்திய போது 'என் மகள் என்னை விட்டு விலகி விட்டாள்' என்ற நினைப் பைத் தவிர்க்க முடியவில்லை. பெரியவன் குமாரும்தான். அவனுக்கு இருபத்து நான்கு வயதாகிறது. ஐ. ஐ. டி. யில் எம்.டெக் முடித்த கையோடு அவனுடைய அபரிமித மான திறமைக்குப் பரிசு போல் பம்பாயில் ஒரு பெரிய தொழில் நிறுவனம் வலுவில் அவனுக்கு வேலை கொடுத்து அழைத்துக் கொண்டது. இப்போது வெகு நல்ல பெயர் அவனுக்கு. அடுத்த ஆண்டு எலெக்ட்ரா னிக்ஸ் சிறப்புப் பயிற்சிக்காக அவனை நிறுவனமே ஜெர்மனிக்கு அனுப்பப் போகிறதாம். பெருமையாய்த் தாய்க்கு எஸ். டி. டி. யில் சொன்னான். மக்கள் இருவருக்குமே என்றும் தொடர்பு தாயோடுதான். சரவணன் முதலிலிருந்தே வீடும் குழந்தைகளும் அவள் பொறுப்பு என்று ஒதுக்கி விட்டு, தம்மைத் தம் உத்தியோகத்தோடு ஐக்கியப்படுத்திக் கொண்டு விட்டார். ஆண் - பெண் கடமைகள் பற்றிய திட்டவட்டமான மரபுப் பாகுபாடு அவருக்கு உண்டு.

இரு குழந்தைகளுமே அம்மாச் செல் லங்கள். அவள் முன்றானைக்குள் பதுங்கி யிருந்தவர்கள்.

இன்று போல் நினைவு இருக்கிறது. அவள் புக்கக, பிறந்தக உறவினர்களின் விமர்சனங்கள்.

''அடியம்மா தேவகி, நீ கடைக்குப் புறப்பட்டு அப்படிப் போனியோ இல்லையோ, இங்கே இவன் முழிக்கக் கிட்டான். அப்பலேர்ந்து அம்மா அம்

ஆர். சூடாமணி

மான்னு ஒரே அழுகை!''

''ஏண்டி தேவகி, இதென்ன உன் பெண் நாங்க யார் சாதம் ஊட்டினாலும் சாப்பிட மாட்டேங்குது! அம்மா வந்துதான் ஊட்ட ணுமாம்!''

அதெல்லாம் உகப்பாக இருந்ததா? 'என் குழந்தைக்கு நான்தான் முதல்' என்ற பெருமை. மழலைப் பிஞ்சுகள் தாயிடம் ஒட்டிக் கொள்வது இயல்பு. அதுவே ஒரு போதைப் பழக்கமாக ஊறிப் போய், குழந்தைகள் என்றுமே தன்னைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற வெறியாகி விடுகிறதா ஒரு சராசரித் தாய்க்கு?

அவள் முன்றானையே சொர்க்கம் என்று இருந்த அம்மாச் செல்லங்களுக்கு இப்போது அம்மா அவர்கள் சொல்லும் செய்திகளைக் கேட்டுக் கொள்ளும் வெறும் காது மட்டுமே. முன்றானை காலி.

இந்த இழப்புக்காகத்தான் வருத்தமா?

சே, அசட்டுத்தனம்! வாழ்க்கை என்றாலே முன்நோக்கிச் செல்வதுதானே? பிள்ளைகள் தன்னை விட்டு விலகுகிறார்களே என்று நினைக்கும் ஒவ்வொரு தாயும் தகப்பனும், தன் பெற்றோரைத் தான் விலகி வந்ததை நினைத்துப் பார்க்க வேண்டும்...

இந்த எண்ணம் வந்ததுமே தேவகிக்குச் சற்று ஆசுவாசமாக இருந்தது. 'இப்படி ஒரு மனமுதிர்ச்சியோடு என்னைத் தெரியாமலா மிடில் ஏஜ் எட்டியிருக்கிறேன்?' என்று சிறிது மிதப்பாகவே நினைத்துக் கொண்டாள்.

நாற்பத்தாறு வயது. இன்னும் மூன்று மாதம் போனால் நாற்பத்தேழு. பிறகு காலப்போக்கில் ஐம்பது, அறுபது, எழுபது என்று மேலே மேலே போய்...

எதை இழந்திருக்கிறோம் என்று தெரிந்து கொள்ளாமலே ஒருநாள் தொண்டுகிழமாய் இறந்து போவதா?

அது நிச்சயம் மரணத்தின் வெற்றிதான்.

விடக் கூடாது.

இன்னதென்று புரியாத ஒரு உறுதியோடு நிமிர்ந்து உட்கார்ந்த போது டெலிபோன் ஒலித்தது.

சரவணன்.

''என் சாமானெல்லாம் 'பாக்' பண்ணணும்னு ஞாபகமிருக்கில்ல தேவகி? சூட்கேஸ் நேத்து ராத்திரி காட்டினேனே, அதான்.''

''தெரியும். நான்தானே எடுத்துக் கொடுத்தேன்.''

''பாண்டியன் எக்ஸ்பிரஸ்ல கிளம்பறேன். சாயங்காலம் கொஞ்சம் சீக்கிரமே வந்துடுவேன். பாக்கிங்கை முடிச்சு வை.''

''சரி.''

''என் பீரோ மேல் தட்டுல ஒரு ஃபைல் காட்டினேன் பாரு? அதை மறக்காம பெட்டியில் எடுத்து வை. மதுரை மீட்டிங்குக்கு வேண்டிய முக்கியமான பேப்பர்ஸெல்லாம் அந்த ஃபைல்லதான் இருக்கு.''

''இதுவும் நீங்க முந்தியே சொன்னதுதான். என்னங்க, சுதாகிட்டேருந்து இன்னிக்கு லெட்டர் வந்திருக்கு.''

''மறந்து தொலச்சிடப் போறியேன்னுதான் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கு. சுதா என்ன எழுதியிருக்கா? பாண்டியன். கவனம். ஃபைலை மறந்துடாம 'பாக்' பண்ணு.''

ஃபோனை வைத்து விட்டார்.

இதே கணவன் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தன்னைப் பெண் பார்க்க வந்திருந்த அன்று கேட்ட கேள்வி...

''மிஸ் தேவகி, உங்களுக்கு ஈடுபாடுள்ள விஷயங்கள் என்னென்ன?''

உன் ஈடுபாடுகள் என்ன? அதாவது, உன் விருப்பங்கள் - லட்சியங்கள் - என்ன? அதாவது, உன் மதிப்புகள் என்ன? அதாவது, நீ எத்தகையவள்? அதாவது, நீ யார்?

எவ்வளவு ஆழ்ந்து நீண்டு விரிவடையும் தாத்பரியங்கள் இருக்கக்கூடும் அக்கேள்விக்கு! அவன் அப்படிக் கருதித்தான் கேட்டானா? தெரியவில்லை. ஆனால் அதன்பின் தொடங்கிய மணவாழ்வில் அவள் யார் என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவனாக அவன் செயல்படவில்லை. அவளுடைய கணவனாகவும் தலைவனாகவும் மட்டுமே தெரிய வந்தான். அவளும் சந்தோஷமாய் அவன் மனைவியாக உருக்கொண்டாள். பிறகு தாயாக. குடும்பத் தலைவியாக. குறுகிய பாசப் பிணைப்புகளும் அற்ப இன்ப துன்பங்களும் சில்லறைக் கவலைகளும் அன்றாட வாழ்க்கையின் சலசலப்புகளும் தனதென்று வரித்துக் கொண்ட ஒரு முகமில்லாப் பிரக்ருதியாக....

எதை இழந்திருக்கிறோம் என்று புரிந்தது.

மிகவும் அருமையான ஒருவரின் மரணம் நிகழும் போது, உடனடியாய்க் கூடும் கூட்டத்தின் தோழமையினாலும் செய்ய வேண்டிய கடமைகளின் பரபரப்பினாலும் துயரத்தை உணரவும் அவகாசமின்றி, பிறகு எல்லாம் முடிந்து எல்லாரும் அகன்றபின் தான் மட்டுமாய் மிஞ்சி நிற்கும் தனிமையில், இழப்பின் கூர்மை திடீரென்று தாக்கத் துடிதுடித்து விழும் நிலையில் இப்போது தேவகி தன்னை உணர்ந்தாள்.

உத்தியோக வாழ்வில் ஒன்றிப் போன கணவன். சிறகு முளைத்துப் பறந்து விட்ட குழந்தைகள். அலமந்து நிற்கும் கட்டத்தில் நிகர லாபம் இந்த அகன்ற இடையும் வெள்ளெழுத்துக் கண்ணாடியும்தான். பரபரப்புகள் அடங்கி விட்டன. இழப்பின்

ஆயுர்வேத முறையில் புற்று நோய்க்கு சிகிச்சை



நான் இந்தப் பத்திரிகை மூலமாக ஒரு அறிக்கை கொடுக்க விரும்புகிறேன். எனக்கு 25 வருடங்களுக்கு முன்பு உணவை திடப் பொருளாகவும், திரவப் பொருளாகவும் தொண்டை மூலமாக சாப்பிட மிகவும் கஷ்டப்பட்டேன். பலவித சோதனைகளுக்குப் பிறகு எனக்கு தொண்டையில் புற்று நோய் இருப்பதாக கண்டு பிடித்தார்கள். ரேடியம் தெரப்பி (Radium Therapy) மூலம் சிகிச்சை செய்தும் எந்த வித பலனும் இல்லை.

எனது நண்பர்கள் மூலமாகவும் சொந்தக்காரர்கள் மூலமாகவும், மிகவும் வெற்றிகரமாக பல புற்று நோய் உள்ளவர்களை தனது சிகிச்சையின் மூலம் குணப்படுத்தி வரும் ஹைதராபாத்தில் கேன்ஸர் இன்பர்மரி டாக்டர் பாபு ராவ் அவர்களைப் பற்றி தெரிய வந்தேன். எனது தொண்டையில் உள்ள புற்று நோய்க்கு சிகிச்சை அளிக்கும்படி டாக்டர் பாபு ராவ் அவர்களை அணுகினேன்.

அவர் 36 வாரங்களுக்கு மருந்து கொடுத்து என்னை சாப்பிடச் சொன்னார். முதல் 4 வாரங்களிலேயே மருந்து சாப்பிட்ட பின் குணம் தெரிந்தது. மேலும் 2 வாரங்களுக்கு மருந்து சாப்பிட்டபின் 100 கிராம் எடை உள்ள திட உணவுப் பொருள் பொறுக்கும்படியான வலியில் என்னால் சாப்பிட முடிந்தது. மேலும் தொடர்ந்து சிகிச்சை பெற்றுக் கொண்டதில் நோய் குணமாவது தெரிந்தது. நான் பூரண குணம் அடைந்து மிகவும் சந்தோஷமாக, ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். இதற்குப் பிறகு பரிசோதனைகள் செய்து எனக்கு புற்று நோய் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்று டாக்டர் சொன்னார்.

நான் இந்த விளம்பரம் கொடுப்பது இந்த நோயினால் கஷ்டப் படுவோர் டாக்டர் பாபு ராவிடம் சிகிச்சை பெற்று இந்த மரண நோயிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காகத்தான்.

டாக்டர பாபுராவ்

புற்று நோய்க்கு சிறந்த முறையில் சிகிச்சை செய்து அவர்களுக்கு மறு பிறவி கொடுக்கிறார்.

டி. நரசிம்ம மூர்த்தி
C/o. கன்னா பாபு
குமாஸ்தா, ஆந்திரா யுனிவர்சிட்டி,
விசாகப்பட்டிணம், ஆந்திர பிரதேஷ்.

கால அட்டவணை

விலாசம்	போன் நம்பர்	பார்க்கும் கிழமைகள்
டாக்டர் பாபுராவ் - வீடு கேன்ஸர் இன்பர்மரி 2-1610 செடம்ரோடு, மொமுலாகூடம் ஜெகதாம்பா பெட்ரோல் பங்க் அருகில் குல்பார்கா (கர்னாடகா)	21452	பிரதி திங்கள் செவ்வாய் மாத்திரம்
கேன்ஸர் இன்பர்மரி 1-1-271/3 சிக்கட்பள்ளி பஸ் ஸ்டாப் அருகில் ஹைதராபாத் - 500 020	64735	பிரதி வெள்ளி
C/o. ராம் இண்டர்நேஷனல் 114, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 034.	473350 473422	பிரதி சனி
C/o. ஹோட்டல் பிருந்தாவன் மஹாத்மா காந்தி ரோடு, பெங்களூர்.	544000	பிரதி ஞாயிறு
ஹோட்டல் மிட் டவுன் அன்டேரி (மேற்கு) ரயில்வே ஸ்டேஷன் எதிரில் பம்பாய்.	6288882 6286635	பிரதி புதன்

கூர்மை தாக்குகிறது.

அவள் வாசற்புறம் வந்து தெருவைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

வாழ்க்கைப் பயணத்தில் ஏதோ ஒரு புள்ளியில் தொலைந்து போய் விட்ட தேவகியை இப்போது எங்கே போய்த் தேடுவது? ஆனால் தேடிக் கண்டுபிடித்துத் தான் ஆக வேண்டும். தேவகியை இழந்து தேவகியால் வாழ முடியாது. நல்ல வேளையாய் இன்னும் நேரமிருக்கிறது. இப்போது 'மிடில் ஏஜ்'தான். இந்த நடுவயதுப் பருவத்தில் ஒரு வசதி உண்டு. இதில் இளம்பிராயத்தின் வெறும் உணர்ச்சிவச வேகங்களும் இல்லை. முது மையின் நோய் - தள்ளாமை போன்றவையும் இல்லை. இந்த வயது ஓரளவு வாழ்க்கை அனுபவத்தோடு மனப்பக்கு வமும் இணைந்து வரும் விவேகத்தைத் தருவது.

மிஸஸ் தேவகி, உன் ஈடுபாடுகள் என்ன?

என் மதிப்புகள் என்ன? எனக்கு என்ன வேண்டும்? என்னை நான் எதில் கண்டடை வேன்?

'கேட்'டைக் கடந்து விமலா பரசுராமன் சென்று கொண்டிருந்தாள். விரல் பிடியில், நைந்த நிக்கர் அணிந்த நாலைந்து வயதுச் சிறுவன். அவன் இடது முழங்கையில் கட்டுப் போட்டிருந்தது.

தேவகியைப் பார்த்ததும் விமலா நின்றாள்.

''ஹலோ தேவகி...! அந்தக் குடிசைப் பகுதிப் பையன்தான். முத்துன்னு பேரு. குண்டும் குழியுமான தெருவில் விளையாடறப்ப அங்கிருந்த பள்ளத்தில் விழுந்து அடிபட்டுக்கிட்டான். டாக்டர்கிட்ட அழைச்சுப் போய்ட்டு வரேன்.''

கையை ஆட்டி விட்டு விமலா மேலே நடந்தாள்.

இதிலா? இங்கேயா? இதில் நிறைவு கிடைக்குமா? குடும்பத்தைத் தாண்டி வெளி உலகைத் தீண்டல். பிறரின் பிரச்னைகளில் ஒன்றுகிற ஈடுபாடு. இதுபோன்ற ஒரு விரிவைத்தான் உள்ளம் விழைகிறதா?

தெரியவில்லை. ஆனால் முயன்று பார்க்கலாம். தன்னைத் தேடிச் செல்லும் பயணத்தில் முதல் படியாக இருக்கட்டுமே. மனம் பொருந்தவில்லையானால் விட்டு விட்டு அடுத்த முயற்சியில் தேடலைத் தொடர வேண்டியதுதான்...

பொழுது சாயும் நேரத்தில் ஆபீஸ் கார் வந்து நின்றது. சரவணன் உள்ளே வந்தார். ''நானும் விமலாவுடைய மக்கள் நலமன்றத்தில்....'' என்று தேவகி சொல்ல ஆரம்பிக்கும்போதே ''என் சூட்கேஸை 'பாக்' பண்ணிட்டியா?'' என்று கேட்டார்.

என்னருகில் நீ இருந்தால்

புவனேஸ்வரி தியேட்டரின் மதியக் காட்சி முடிந்து வெளிவந்த சிலரைக் குறுக்கிட்டு கிடைத்த பேட்டியின் அநியாயச் சுருக்கம் இது.



''கதை இல்லாமல் கதை பண்ணுவது சினிமாவின் ஒரு உத்தி. தைரியம் தேவைப்படும் உத்தி! நல்ல கலைஞர்கள், சிறந்த தொழில் நுட்பம், அழகான வசனம் இவைகளுடன் கூடவே உயிர்க் கருவின் ஒளி மையம் போல உருப்படியான கதை அமைந்திருப்பது முக்கியம். இவர்கள் ஏழு அடி விட்டமுள்ள கிணற்றில் நாலேகால் அடி தாண்டி இருக்கிறார்கள்.'' – மோகன் குமார்



''படத்துல ஈரோ யார்ரான்னா எளையராஜாதாம்பா. இன்னவோ சொல்லுவாங்களே 'ரீரிகார்டிங்'ன்னு... மனுஷன் கமகமக்கறார். வழக்கமா பாட்டுங்கன்னா தம்மடிக்க ஓடுவாங்க. இதில ஒன்னு ரெண்டு பேர்தான்...'' – சேக வடிவம்மாள்



''ஃபைட்டு இருக்குது. மயில்சாமி, சி. ஜெயந்த் காமெடி இருக்குது. பார்த்து நல்லா சிரிச்சேன் அங்கிள். ஹீரோயின் பிரியங்கா இன்னும் கொஞ்சம் அம்சமா, யங்கா இருந்திருக்கலாம். லவ் ஸீன் என்னவோ, ஸ்வீட் இல்லாத ஐஸ்க்ரீம் சாப்பிட்ட மாதிரி இருந்துச்சு...'' – வெங்கிட்டு




''என்னய்யா படம் எடுக்கிறாங்க? காலேஜ் பசங்கன்னா குடி, கும்மாளம், பொண்ணுங்களைத் துரத்தறதுன்னு சொல்லி மத்தவங்களையும் கெடுத்துருவாங்க போலிருக்கே! தண்டமா ஒரு கதை, அதையும் சரியா தீர்மானிக்காம, படம் நெடுக அதிகப் பிரசங்கித்தனம்தான் மிச்சம்.'' – எம். கே. அமிர்தலிங்கம்



''எடுத்துக்கிட்ட ஐடியா இறக்குமதி சரக்கு மாதிரி, எப்படியோ இருக்கு.. இசைக் குழு சகிதமாய் நாலு இளைஞர்கள், ஜிப்ஸி வேன், மலைக்கிராமப் பயணம், கார் பழுது, வழியில் யுவதி, கண்டதும் காதல், நிறைவேற முயற்சிகள், கிசுகிசு, சோகம், சுபம்! இதைப் படமாக்கறதுக்கு முன்னால உருப்படியா இன்னும் யோசிச்சிருக்கணும். பிரிச்ச கூடாரத்தை மறுபடியும் அடிக்கற இடைவேளை பீஸ் நல்லா இருக்கு. குரு 'லாங்ஷாட்ல' ரசிக்கத் தோன்றார். புது இடங்களைத் தேடிப் பிடித்த கேமிரா ரம்மியம். அர்ச்சகரின் காதல் அர்ச்சனை; மயில்சாமியின் குரங்கு சேஷ்டையும், மூக்கில் சொல்லும் அய்யய்யோவும்; நாலைந்து முறை ரிபீட் ஆனாலும் சின்னி ஜெயந்தின் 'ஜேக் அண்ட் ஜில்' எல்லாம் வற்றாத புன்னகை நதி. ஆனா, ஒட்டுமொத்தமா சொல்லணும்னா டைரக்டர் சார், பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்!'' – மிஸ். புவனா

– சுந்தர்ஜி

கார்ட்டூன் : அரஸ்



சாபக் காசு!

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. வானமே பிய்ந்து போனது போல மழை கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. கூடவே கண்ணைப் பறிக்கும் மின்னல்களும் நடுங்க வைக்கும் இடி முழக்கங்களும்!

தங்கம்மையின் தனிமை என்றுமில்லாத வண்ணம் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. தொட்டிலில் ஏதேதோ, அரற்றிக் கொண்டிருந்த குழந்தை ஓமனாவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அது அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. அவன் வர வேண்டிய நாள். அவள் வாந்தர் விளக்கை எடுத்துக் கொண்டு வாசல்புறம் வந்து பார்த்தாள். அவனைக் காணோம். அவளுக்குத் தெரியும். அவன் இப்போதெல்லாம் வர மாட்டான். விடியும் வேளையில்தான் வருவான். வாரக் கூலியாக அவன் வாங்கி வந்திருக்கும் காசு முழுதும் தோற்றுவிட்டால் ஒருவேளை சீக்கிரமாக வந்து விடலாம். அப்படியும் சில நாட்களில், உடன் ஆடுபவர்கள் கடன்கொடுத்துக் கூட அவனைத் தொடர்ந்து ஆட வைப்பதுண்டு! அடுத்த வாரம் கூலி கிடைத்ததும் திருப்பிக் கொடுத்தால் போதும் என்பார்கள். அப்படிப்பட்ட நாட்களில் விடிந்த பின்புதான் வருவான்.

அவள் ஒரு காதலியாய் அவனுடன் சுற்றித் திரிந்த நாட்களில், திருட்டுத்தனமாய் அவனுடன் கைகோத்து மகிழ்ந்த நாட்களில், ஏன் அவன் மனைவியாகி அவள் வயிற்றில் ஓமனா உண்டாகும் வரை கூட அவனுக்கு இந்தக் கெட்ட பழக்கம் இருப்பது அவளுக்குத் தெரியாது. தெரிந்ததும் அவள் அதிர்ச்சி அடைந்தாள். எனினும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவனிடம் அன்பாய்ப் பேசினாள். சூதாடிச் சீரழிந்தோர் பற்றி நயமாய் எடுத்துரைத்தாள். அவை எடுபடாமல் போகவே பேயாய்ச் சீறினாள். 'ஓ...' என்று கத்தி ரகளை செய்தாள். அதுவும் பயனளிக்காமல் போகவே, 'ஓமனா' பிறந்து விட்டால், அவன் திருந்தி விடுவான் என நம்பினாள். 'ஓமனா'வும் பிறந்தாள். அவளது பிஞ்சுக் கால்களும் கொஞ் சும் மழலையும் கூட அவனைத் திருத்த இயலாமல் போகவே அவள் மனமுடைந்து போனாள்.

அவள் தன் தந்தையிடம் முறையிடலானாள். அவரும் அவனுக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிப் பார்த்தார். எந்தப் பயனும் ஏற்படவில்லை. மாறாக, ஆரம்ப நாட்களில் முன்னிரவு முடியுமுன் வீடு திரும்பிக் கொண்டிருந்த அவன், அவருக்கும் அவளுக்கும் விவரம் தெரிந்த பின்பு, இரவு முழுதும் கூட அமர்ந்து ஆடத் தொடங்கினான்.

மகளின் அழுகையும் புலம்பலும் அதிகரிக்கவே, அவர் அவளிடம் கூறினார், "தோ பாரு தங்கா... நீ வருத்தப்படுறதிலே நியாயம் இருக்கு. ஆனா இப்படி ஆத்திரப்படுறதிலே அர்த்தம் இல்லே! உன் புருஷன் வயசில் உள்ள எத்தனை எத்தனை ஆண்கள் குடிச்சிட்டு அர்த்த ராத்திரியில் வந்து கதவைத் தட்டுறாங்க... மனைவியைக் கன்னாபின்னாவென்று கெட்ட வார்த்தை சொல்லித் திட்டுறாங்க....கண் மண் தெரியாம அடிச்சு இம்சிக்கிறாங்க? உன் புருஷன் இப்படி எல்லாமா செய்யறான்? அவன் ஒரு குடிகாரனாய் இருந்தான்னு வச்சுக்கோ... காசோடு சேர்த்துத் தன் குடலையும் வயிற்றையும் அல்லவா அழிச்சுக்குவான்? இப்ப என்ன... அவன் சீட்டாடுறான்... அவ்வளவுதானே? அவன் திருந்திடுவான்... இல்லேன்னாலும் திருத்திடலாம்! நீ கொஞ்சம் பொறுமையாய் இரு!"

"ஆமாப்பா... வாரம் ஆறு நாட்களும் மலைக் காட்டில் மரம் சுமந்து, லோடு ஏற்றி முதுகெலும்பு ஒடியப் பாடுபடும் புருஷனைக் காண ஞாயிற்றுக் கிழமை எப்போ வருமோன்னு நான் காத்திருப்பேன். இவர் வந்ததும் வராததுமாய் அந்தச் சீட்டாட்டக் கும்பலோடு போய் உட்கார்ந்து, சூதாடப் போயிடுவாரு! வாரக் கூலி முழுதும் அந்தப் பாவிகள்கிட்டே தாரை வார்த்துட்டு, விடியும் பொழுது பல்லைக் காட்டிக்கிட்டு என் எதிரில் வந்து நிற்பாரு. நான் இதை எல்லாம் பார்த்துக்கிட்டுப் பொறுமையாய் இருக்கணும்... அப்படித் தானே?"

"நமக்கு மேல் ஒருவன் இருக்கிறான் தங்கா... அவன் நிச்சயம் நம்மைக் கைவிட மாட்டான்!"


ஆண்ட்ரேஸ்

கடவுளை நம்பிக் கொண்டு சும்மா இருக்க அவளால் முடியவில்லை. எப்பாடு பட்டும் அவனைத் திருத்த வேண்டியது தன் கடமை என எண்ணினாள். கடைசி முயற்சியாக அவள் ஒரு நாள் அவன் சீட்டாடிக் கொண்டிருந்த இடத்துக்கே சென்றாள். அவனது நண்பர்களிடம் தன் கணவனை இப்படிச் சூதாடியாக்கித் தன் குடும்பத்தையே நாசமாக்குவது என்ன நியாயம் என அங்கலாய்த்தாள். அவ்வளவுதான். அவன் வெகுண்டெழுந்தான். ''தோ பார் தங்கா... இந்த விளையாட்டு என் உடலோடும் உயிரோடும் ஒட்டிப் போச்சு! நான் வேறே அது வேறே இல்லே! இதைப் பிரியறதை விட நான் உன்னையே பிரிஞ்சுடத் தயாரா இருக்கேன்! இனிமேல் இப்படி எல்லாம் வந்து கலாட்டா பண்ணினால், அதுதான் நடக்கும்... சத்தியமா!'' என்றான்.

அன்று முதல் அவள் விதியை நம்பினாள். அவன் விஷயத்தில் தலையிடுவதை விட்டு விட்டாள்.

மழையின் வேகம் சற்றும் குறைவதாக இல்லை. வெளியே அட்டைக் கரியாய் இருள் மண்டிக் கிடந்தது: குழந்தையின் காய்ச்சலோ அதிகரித்து வந்தது. அவளும் தனக்குத் தெரிந்த அத்தனை கை வைத்தியங்களையும் செய்து பார்த்து விட்டாள். எதுவும் பலனளிக்கவில்லை.

அது ஒரு சின்னஞ்சிறிய குக்கிராமம். வைத்திய வசதி வேண்டுமானால் பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். மூணார் போக வேண்டும்.



அடுத்த இதழ்:

கல்கி

மாணவர்
சிறப்பிதழாக
மலரும்



வண்ணப்படம்: உத்தா

அந்த இரவு நேரத்தில் கொட்டும் மழையில் எந்தவிதமான பயண வசதியும் இல்லாத நிலையில் என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை. அன்றைக்குப் பார்த்து அவள் அப்பா கூட ஏதோ வேலையாகப் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்று விட்டிருந்தார். கையிலோ சல்லிக் காசு கூட இல்லை!

சட்டென ஏதோ முடிவுக்கு வந்தவளாய், தூளியில் இருந்து குழந்தையை அள்ளி, மழை நீர் படாதவாறு மார்போடு அணைத்துக் கொண்டு வாசலை நெருங்கியவள், ''தங்கா...'' என்னும் குரல் கேட்டு எதிரே பார்த்தாள்.

லாந்தர் ஒளியில் அவன் அருகில் நிற்பது தெரிந்தது.

அவன் சட்டெனக் குழந்தையோடு சேர்த்து அவளை இறுகப் பற்றிக் கொண்டான். ''நான், சொன்னேனில்ல... விட்டதை எல்லாம் எடுக்காமல் விட மாட்டேன்னு...! தோ பாரு.. எவ்வளவு இருக்குன்னு... எல்லாம் உனக்குத்தான்... வச்சுக்கோ!'' என்றவாறே, ஐம்பது, பத்து, நூறு என்று சில நோட்டுக்களை அவள் கைகளில் திணித்தான்!

தங்கம்மை வெறி கொண்டவளாய் அவனை உதறித் தள்ளினாள். நோட்டுக்களைத் தூக்கி எறிந்தாள்!

''தங்கா.. நான் எவ்வளவு சிரமப்பட்டு ஆடி...''

தங்கம்மை அவனை முடிக்க விடவில்லை.

''பேசாதீங்க...'' என்று இரைந்தாள். ''என்னமோ ரொம்பத்தான் சிரமப்பட்டு இதைச் சம்பாதிச்சது போல பேசுறீங்களே...? நீங்க உழைச்சு சம்பாதிச்ச காசை அனுபவிக்கிற பாக்கியம் எனக்குக் கிடைக்கலே! இந்தக் கறை படிஞ்ச காசை என் கையில் திணிக்கிறீங்க! 'என் புருஷன் பாடுபட்டுத் தேடி வரும் பணத்தை எல்லாம் இந்த விளங்காத பாவிகள் பறிச்சிட்டுப் போயிடுறானுங்களே, இவனுங்க குடும்பம் உருப்படுமான்னு நான் எத்தனை முறை சாபம் கொடுத்திருக்கேன்... அது போல எத்தனை பெண்களின் சாபங்களை ஏற்ற காசோ இது...! இதை என் கையால தொட மாட்டேன். என்கிட்டே சல்லிக்காசு இல்லே. நம்ம குழந்தைக்கு வைத்தியம் பண்ண டாக்டர்கிட்டே கடன் சொல்லிட்டுத்தான் வரணும். ஆனாலும் இந்தக் காசை நான் தொட மாட்டேன்....''

அவள் குழந்தையுடன் கொட்டும் மழையில் வேகமாய் நடக்கலானாள். அவள் காலடியில் மிதிபட்ட நோட்டுக்கள் அவளைப் பார்த்துச் சிரித்தன.

ஒரு வினாடி தன்னை மறந்து நின்ற அவன், ''தங்கம்மை... நில்லு... நானும் வரேன்'' என்று அவள் பின்னே ஓடிச் சென்றான். குழந்தையை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு, மேல் துண்டால் போர்த்தி அணைத்தபடி அவளுடன் நடந்தான்.

மின்னல் கீற்றுகள் இருளைக் கிழித்துக் கொண்டு அவனுக்குப் பாதை காட்டின!

சுய விமர்சனம்-சுய தரிசனம்

வெற்றிபெற வேண்டும் என்று எல்லோரும் நினைக்கிறோம். வெற்றி என்பது இரண்டு வகைப்படும்.

ஒன்று - பிறரை வெல்வது. அல்லது பிறவற்றை வெல்வது. அதாவது, உலகத்தை வெல்வது. அல்லது உலகத்தில் சில விஷயங்களை வெல்வது.

இரண்டாவது வகை - தன்னை வெல்வது. தன்னில் உள்ள குற்றம் குறைகளைத் தன் அறிவின் துணையால் வெல்வது.

'இக-பர சௌபாக்யம்' என்ற வாசகம் இவ்விரண்டு வெற்றிகளையே குறிக்கும். மண்ணுலக இன்பம், மோட்ச இன்பம், ஆகிய இவ்விரண்டு வெற்றிகளைக் குறிப்பன.

முருகன், வள்ளி தெய்வயானையுடன் இருப்பதைப் பார்ப்பவர்கள், 'கடவுளுக்கே இரண்டு மனைவியர்!' என்று நீட்டி முழக்குவார்கள். இதுதவறு. வள்ளி மண்ணுலக இன்பங்களை விளக்கும் அருட்சக்தி. தெய்வானை விண்ணில் பிறந்து விண்ணில் வளர்ந்தவள். அவள் விண்ணுலக இன்பமாகிய மோட்சத்தை விளக்கும் அருட்சக்தி.

முருகன் உலக வாழ்வின் இன்பங்களையும், மோட்ச இன்பத்தையும் ஒருங்கே கொடுப்பவன் என்பதை விளக்கவே இரு சக்திகளையும் தேவியராகக் கொண்டு காட்சி தருகிறான். ஞானம் நடுவில் வேலாக விளங்குகிறது. அறிவை மையப் படுத்தியே இக பர இன்பங்கள் வழங்கப்படும்.

உலகை வெல்லவும், உன்னையே நீ வெல்லவும் சிறந்த வழிகள் இரண்டு. ஒன்று சுய விமர்சனம் - மற்றொன்று சுயதரிசனம். நம்முடைய செயல்கள், நடவடிக்கைகள் பற்றி மற்றவர் விமர்சனம் செய்தால் நமக்குப் பற்றிக் கொண்டு வருகிறது.

சுகி சிவம்





குடைக்கு கியூ!

பம்பாயில் மழைக்காலம் என்றால் வானைப் பிளந்து கொண்டு கொட்டும். கூட்டுறவு விற்பனை அங்காடிகளில் 1973-இல் முதன் முதலில் குடை விற்பனையைத் துவக்கிய போது, 80,000 ரூபாய்க்கு மட்டுமே வியாபாரம் ஆயிற்று! ஆனால் சென்ற ஆண்டு வியாபாரம் பத்து லட்சத்தை எட்டியது. வரும் ஆண்டு 12 லட்சத்தைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போதெல்லாம் 'ரெயின் கோட்டு'களின் விற்பனையும் பல டிசைன்களில், பல வண்ணங்களில் சக்கைப் போடு போடுகின்றன. மே, ஜூன் மாதங்களில் கூட்டுறவு விற்பனை அங்காடிகளில் குடைகள் வாங்க வேண்டுமானால் குறைந்தது இரண்டு மணியாவது காத்திருக்க வேண்டும். அப்படியொரு கூட்டம்!

குடைகளுக்கிணையாக ரப்பர் ஷூக்களுக்கும் இம் மாதங்களில் பெரும் டிமாண்ட்! இந்த மூன்று மாதங்களில் ஆண்களும், பெண்களும் ரப்பர் ஷூக்கள், சப்பல்கள், கம் பூட் இவற்றையே உபயோகிப்பர்.

தண்ணீர் ரயில்வே லைன்களையே மூடி விடும். இதனால் ஒவ்வொரு சீசனிலும் இரண்டு அல்லது மூன்று தினங்களாவது ரயில்கள் ஓடாமல் இருப்பது உண்டு. அப்போது பம்பாய்வாசிகளுக்கு மற்ற இந்தியர்களை விடக் கூடுதல் விடுமுறை!

- ராஜீவி நரசிம்மன்.

பெங்களூரில் சிலைகள் எல்லாம் பாலீஷ் செய்யப்பட்டு பளபளவென்று மின்னுகின்றன. சென்னை நகராட்சியால் அப்படி சிலைகளைப் பாதுகாக்க முடியவில்லை எனில், காந்தி சிலையைக் காதி கிராமோத்யோக் பவன், பாரதி சிலையை எழுத்தாளர் சங்கம், உழைப்பாளர் சிலையை ஏதாவது ஒரு தொழிற்சங்கம், காமராஜர் சிலையைக் காங்கிரஸ் கட்சி என்று பொறுப்பேற்றுக் கொண்டு பராமரிக்கச் செய்யலாமே!

- திருமதி. சோபா சப்தரிஷி.



எரிச்சலும் ஆத்திரமும் எரிமலைக் குழம்பாய் வெடிக்கிறது. இது தவறு.

பிறர் விமர்சனம் செய்வது பிடிக்கவில்லை என்றாலும் நம்மை நாமே விமர்சனம் செய்து கொள்வது நல்ல வழி. விழிப்புக்கும் தூக்கத்துக்கும் இடையில் நிகழ்த்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளை நிறுத்துப் பார்ப்பது நமது கடமை.

உடம்பை அடிக்கடி நிறுத்து எடை பார்ப்பது போல், ரத்த அழுத்தத்தை அடிக்கடி அளந்து பார்த்து மெடிகல் செக்கப் செய்வது போல் சுய சோதனை செய்வது அவசியம்.

திருவொற்றியூர் தேரடி தெருவில் ஒரு துறவி ஆடையின்றி நிர்வாணமாக உட்கார்ந்திருந்தார். அந்த வழியாகப் போவோர் வருவோரைக் கேலிசெய்வது அவர் வழக்கம்.

'அதோ நாய் போகிறது' என்பார். 'இதோ குரங்கு... குரங்கு' என்பார். இடுப்பில் ஆடையின்றி விலங்குபோல் கிடந்த கிழவர் பளபளக்கும் பட்டணிந்த பெரியவர்களை எல்லாம் பார்த்து நாய், நரி, என்றால் எப்படி இருக்கும்!

மனத்தில், நாயாகவும், நரியாகவும், புலியாகவும் சிங்கமாகவும் வாழும் வெளி வேஷக்காரர்களை வெளிப்படுத்தும் எக்ஸ்ரே கண்கள் அவருக்கு! அந்தத் துறவிக்கும் ஒரு சோதனை!

இரக்கமே வடிவான வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளார் அந்த வழியாகப் போயிருக்கிறார். பதறிப் போன அந்த நிர்வாணத் துறவி உடலைக் குறுக்கிக் கொண்டு அலறினார்!

''ஐயோ! முதன் முதலாக ஒரு மனிதன் இந்த வழியாகப் போகிறானே. மனிதனுக்கு முன்பு ஆடையின்றி இருப்பது அவமானமாக இருக்கிறதே! யாராவது ஆடை கொடுங்கள்!''

இராமலிங்க அடிகள் மேலாடையைக் கொடுத்து அவரை இடம் மாறச் செய்தார் என்று ஒரு செய்தி. இதில் மிகப் பெரிய உண்மை அடங்கி இருக்கிறது. மனிதன் இயல்பில் ஒரு விலங்குதான். கட்டுப்பாடுகளால்தான் மனிதன். பக்குவத்தால் தெய்வம். இப்போது நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்கிற சுயபரிசோதனை அடிக்கடி அவசியம். நமது செயல்பாடுகள் மீதான சுய விமர்சனம் மிகத் தேவை.

சுய விமர்சனம் விலங்கை மனித

னாக்கும். சுயதரிசனம் மனிதனைத் தெய்வமாக்கும். விலங்கில் இருந்து மனிதனாய் - மனிதனில் இருந்து தெய்வமாய் உயர்வை நோக்கிப் பயணப்படுவதால்தான் நாம் உயர்திணை. மற்றவை அஃறிணை.

இப்படியும் சொல்லலாம்.

ஆசை நம்மை விலங்காக்குகிறது.

அன்பு நம்மை மனிதனாக்குகிறது.

அருள் பழுத்தால் நாம் தெய்வமாகலாம்.

தெய்வ நிலையிலும் ஆசை வயப்பட்டு, சிலர் விலங்கானது உண்டு! நூறு அஸ்வமேத யாகம் செய்து பெருமை பெற்றவன் நகுஷன். இந்திர பதவி அவனைத் தேடி வந்தது. அகஸ்தியர் உட்பட பெருமை மிக்க ஏழு ரிஷிகள் அவனைக் காண வந்தனர்.

பணிந்து வரவேற்றுப் பண்பாட்டை வெளிப்படுத்தினான் நகுஷன். இந்திர பதவி பெற்று இந்திர உலகம் செல்லும் அவன் பல்லக்கைச் சுமந்து செல்ல ஏழு ரிஷிகளும் எண்ணினர். நகுஷன் நடுங்கினான். இத்தனை பெரிய மகரிஷிகள் தன் பல்லக்கைச் சுமக்கக் கூடாது என்று மன்றாடினான். மனிதப் பண்பும் தெய்வத் தகுதியும் அவன் புகழைப் பெருக்கின.

நூறு யாகம் செய்த அவன் பல்லக்கைச் சுமக்கும் பாக்யம் தங்களுக்கு வேண்டும் என்று ரிஷிகள் வாதிட்டனர். 'இப்படியொரு பேறு இனி எப்போது கிடைக்கும்?' என்றனர்.

ரிஷிகள் வேண்டுகோளைத் தட்ட மாட்டாது ஏற்றான். ரிஷிகள் பல்லக்கைச் சுமந்து நடந்தபோது அவர்கள் உடல் வருந்துமே என்று 'மெதுவாக, மெதுவாக' என்று வேண்டினான். பிறர் துயர் தன்துயராகப் புலம்பினான், அந்தப் பேரருளாளன். மனிதனாய், தெய்வமாய் மாறி மாறி ரிஷிகளுக்காக உருகினான் அந்த மாமனிதன்.

இந்திர உலகைப் பல்லக்கு நெருங்கியது. அழகே வடிவான இந்திராணியின் பேரழகு அவன் நெஞ்சை ஈர்த்தது. தொலைவில் தெரிந்த அவள் உருவை அருகில் பார்க்கும் ஆசை தலைக்கேறியது! வேகமாக முனிவர்கள் நடக்க வேண்டாம் என்று முன்னர் வேண்டிக் கொண்டவனுக்கு இப்போது எரிச்சல் வந்தது.

'பல்லக்கு ஏன் இவ்வளவு மெதுவாகப் போகிறது? வேகமாகப் போனால் என்ன?' என்று கோபம் உண்டாயிற்று. மெதுவாகப் போகும் காரணத்தை அறிவு ஆராய்ந்தது. மகரிஷிகள் எல்லோரும் பல்லக்கைச் சுமந்து கொண்டு நடக்கும் போது குட்டையான அகத்தியர் பாதம் தரையில் படாமல் பல்லக்கைப் பிடித்துத் தொங்குவது தெரிந்தது.

'ஆஹா! இவர் பாரத்தால் அல்லவா பல்லக்கு மெதுவாக அசைகிறது?' என்று ஆத்திரப்பட்டவன், பொற் பிரம்பை உருவி, அவரை அடித்தபடி 'சர்ப்ப சர்ப்ப' (வேகம் வேகம்) என்றான். அருளும் அன்பும் அழிந்து, ஆசை வெறி மேலோங்கியது.

அகத்தியர் நிமிர்ந்தார். 'மகரிஷிகள் மகிமை அறியாது 'சர்ப்ப சர்ப்ப' என்ற நீ, சர்ப்பமாகக் கடவது' என்றார். மனிதனில் இருந்து மாமனிதனாக உயர்ந்த நகுஷன், மலைப் பாம்பாகி மண்ணில் நெளிந்தான்.

நமது உத்தேசம் என்ன?

(இன்னும் சொல்வேன்)

ஃப்ரிஜ் பரிசு: கூப்பன் நெ. 10

கொஞ்சம் கவனமாகப் படித்தால் போதும். 'நேற்றுவரை நந்தவனம்' தொடர் கதையில் நாங்கள் இந்த வாரம் வேண்டுமென்றே செய்துள்ள தவறு என்ன என்பது 'பளிச்'சென்று புரிந்து போகும். இப்படியே ஒவ்வொரு வாரமும் செய்யப்படும் ஒரு தவறைக் கண்டு பிடித்து அந்தந்த வாரக் கூப்பனில் எழுதி, சேகரித்து வைத்துக் கொள்ளவும். தொடர் முடிகிற வாரத்தில் எல்லாக் கூப்பன்களுடன் கதை பற்றிய 5-10 வரி விமர்சனமும் எழுதி எங்களுக்கு அனுப்பவும். மிக அதிகமான அளவில் தவறுகளைக் கண்டு பிடித்துத் திருத்தியவருக்கு ஃப்ரிஜ் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு.

தவறு : ____________________

திருத்தம் : ____________________

சிரிக்க வையுங்கள் ;
சிங்கப்பூர் செல்லுங்கள் !

தோற்ற வேட்பாளர் வீடு வீடாகச் சென்று...?

''குடும்பத்துடன் பார்க்க வேண்டிய படம்'னு போட்டிருந்த விளம்பரத்தை அலட்சியப்படுத்திட்டுத் தனியாப் போனது ரொம்பத் தப்பாப் போச்சு!''

''என்னாச்சு?''

''பேச்சுத் துணைக்கு ஆளில்லாம ரொம்பவும் கஷ்டப்பட்டுட்டேன்!''

- கே. ரமேஷ்ராம், சென்னை - 52.

★ ★ ★ ★ ★



- ஆர். ரகோத்தமன், சென்னை - 33.

O போக்குவரத்துக் கழகத்தில் இரவில் வண்டியை நிறுத்தும் டிரைவர்கள் வண்டியில் என்ன ரிப்பேர் வேலை இருக்கிறது என்று எழுதி வைத்துவிட்டுச் செல்ல வேண்டும்.

ஒரு டிரைவர், 'வண்டி வேகத்தில் செல்லும் போது திடீரென பிரேக் போட்டால் வண்டி கொஞ்ச தூரத்தில் பேய் நிற்கிறது' என்று எழுதி விட்டார்.

போய் என்பதற்குப் பதில் பேய் என்று எழுதியிருப்பதைப் படித்த மெக்கானிக் பின் வருமாறு எழுதி வைத்தார்: 'வண்டியின் இரண்டு புறமும் வேப்பிலையைக் கட்டிக் கொண்டு ஓட்டவும்!'

- வி. ஜெயபால், கும்பகோணம். - 2.

★ ★ ★ ★ ★

O இளமைத் தோற்றத்துக்கு டி. வி. யில் பிரபலமான சோப் விளம்பரம்:

''எக்ஸ்க்யூஸ் மீ, நீங்க எந்த காலேஜ்லே படிக்கிறீங்க?''

''காலேஜா, நானா?''

உடனே எங்கள் சித்தியின் பெண், ''பிளஸ் டூவிலேயே இன்னும் நாலு பேப்பர் பாக்கி'' என்று சொல்லவும் எழுந்த குபீர்ச் சிரிப்பில் டி. வி.யே கிடுகிடுத்தது!

- ரா. பானுமதி, சென்னை - 64.





''தேர்தல்ல தோத்துப் போன வேட்பாளர், ஒவ்வொரு வீட்டுக்கும் போய் என்ன கேட்டுக்கிட்டு இருக்காரு?''

''அவருக்கு டெபாஸிட் போயிருச்சாம். அதனால, ஆரத்தி எடுக்கறப்போ தட்டுல போட்ட ரூபாயைத் தயவு பண்ணித் திருப்பிக் கொடுங்கன்னு கெஞ்சறார்.''

- என். உஷா தேவி, மதுரை - 9.

★ ★ ★ ★ ★

O ராமுவும் சோமுவும் ஓட்டலுக்குப் போனார்கள். ராமுவுக்கு ஆறு ரூபாய், சோமுவுக்கு ஏழு ரூபாய் பில் வந்தது. இருவரிடமும் பணம் இல்லை.

''நான் என்னாலானதைப் பார்க்கிறேன், நீ உன்னாலானதைப் பார்'' என்ற சோமு, பில்லை முதலாளியிடம் தர, அதை அவர் வாங்கி கைசியில் குத்தினார். அப்போது ராமு, ''நான் பத்து ரூபாய் கொடுத்திருக்கேன், மீதி நாலு ரூபாய் தர வேண்டும்'' என்றான். முதலாளி, ''நீ ஒன்னும் தரலை'' என்றார். ''தந்தேன்'' என்றான் ராமு. ''இல்லை'' என்றார் முதலாளி.

இவர்கள் இப்படி வாதாட, ''நீங்கள் போடுகிற சண்டையில் நான் கொடுத்த இருபது ரூபாயை மறந்துடாதீங்க'' என்றான் சோமு!

முதலாளிக்கு 'கிர்ர்ர்'!

- வி. ஆறுமுகம், சேலம் - 7.

★ ★ ★ ★ ★

''உங்க வீட்ல திருடினது பக்கிரிதான்னு எப்படி உறுதியாச் சொல்றீங்க?''

''திருடிட்டுப் போகும் போது கொஞ்சம் பணம் கொடுத்து, ' நீ புகார் கொடுக்கப் போகும் போது, இந்த மாமூலை எஸ். ஐ. ஐயாகிட்டக் கொடுத்து, பக்கிரி கொடுக்கச் சொன்னதாச் சொல்லு'ன்னு சொல்லிட்டுப் போனானே!''

- தஞ்சைத் தரணியன்,
முத்துப்பேட்டை.



- அ. முத்துக்குமார், உடுமலைப்பேட்டை.

ஆகாசத் தாமரை

24

இந்திரா பார்த்தசாரதி

சந்தியா தன் அலுவலக அறையில் உட்கார்ந்திருந்தாள். தலை கனத்தது. அந்த அறையைப் புழுக்கமான அறை என்று சொல்ல முடியாது. நல்ல காற்றோட்டம். தலை கனப்பதற்கு மனப் புழுக்கந்தான் காரணமாக இருக்க வேண்டும்.

எத்தனை போராட்டங்களுக்குப் பிறகு இந்த 'இலட்சிய' கிராமத்தை அவளால் உருவாக்க முடிந்தது! ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்ப்பு தடைகள். ஆனால், மனம் தளராமல், அவள் முனைந்ததின் காரணமாகத்தான் இந்த இலட்சிய கிராமம்....

ஆனால் இதுவா 'இலட்சிய' கிராமம்?

அவளுடைய 'திட்டத்தை' முறியடிப்பதற்கு இந்தச் சமுதாய அமைப்பு மிகக் கெட்டிக்காரத்தனமாக வேலை செய்திருக்கிறது.

அக் கிராமத்தைப் பற்றிப் பத்திரிகைகளும், இதர தொடர்புச் சாதனங்களும் காட்டிய அக்கறையே இதற்குக் காரணமென்று அவளுக்குத் தோன்றியது.

முதலில் அது அவளுக்குத் தேவை என்றுதான் பட்டது. புகைப்படங்கள், விமர்சனக் கட்டுரைகள், பேட்டிகள்.... இந்தியாவிலிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் பலர் அங்கு வரத் தொடங்கினார்கள். ஏதோ சுற்றுலா திட்டத்தின் ஓர் அம்சம் போல!

கைப் பொருள் செய்வினைத் திட்டத்தை விரிவாக்குவதற்கு அந்நிய நாட்டு உதவி கிடைத்தது.

அப்பொழுதுதான் அவள் விழித்துக் கொண்டாள். இதை அவள் எதிர்த்தாள்.

'உதவி செய்ய ஒருவர் முன்வரும்போது, அதை வேண்டாமென்று சொல்வதா?' என்று அவளைச் சேர்ந்தவர்களே முணுமுணுக்கத் தொடங்கினார்கள். எல்லாம் தன் இஷ்டப்படிதான் நடக்க வேண்டுமென்று அவள் விரும்புகிறாள் என்று திடீரென்று ஒரு குற்றச்சாட்டு... அவள் வேறு வழியின்றி, இந்த உதவியைப் பெற இசைந்தாள்.

அவ்வளவுதான், சுய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு நிம்மதியாக வாழ வேண்டிய கிராம மக்களுக்கு, ஏற்றுமதிப்



பெருக்கம் ஏற்பட்டு அந்நியச் செலாவணியைப் பெற்றதன் விளைவாக, வாழ்க்கைத் தேவைகள் அளவுக்கு மீறி அதிகரிக்கத் தொடங்கின. கூடவே செல்வப் பெருக்கத்தினால் உண்டாகும் பதவிப் போட்டிகள், மனப் புகைச்சல்கள்...

இதுவா 'இலட்சிய' கிராமம்?

சந்தியாவால் எதையும் கட்டுப்படுத்தி நிறுத்த முடியவில்லை. மனித சுபாவத்தை மாற்றுவதென்பது இயலாத காரியம். ஒரு சமயம் துருவ்வைப் பற்றித் தான் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. 'அவன் ஆகாசத் தாமரையைத் தேடி அலைகிறான்' என்றான். தன் நிலை என்ன?

சந்தியா தான் நடப்புலகத்தில் இருப்பதாக நம்பினாள். மனித சுபாவத்தை மாற்ற முடியுமென்று நம்பினாள். 'அந்த நம்பிக்கையும் ஒரு ஆகாசத் தாமரைதானோ? எல்லோரும் இன்புற்றிருப்பதேயன்றி வேறொன்று மறியேன்' என்று சொல்வது மிகச் சுலபமானது. 'இன்பம்' என்பதின் இலக்கணந்தான் என்ன? எல்லோரும் ஒரே சமயத்தில் இன்புற்றிருப்பதென்பது முடியாது என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். சிலருடைய இன்பம், பலருடைய துன்பத்தின் அடிப்படையில்தான் நிகழ்கின்றது. இதுதான் உலக நியதி.

அவள் இந்த அமைப்பை விட்டு ஓடிப் போய் விட வேண்டுமென்று பல சமயங்களில் நினைத்ததுண்டு. ஆனால் முடியவில்லை!

அவளுக்கு வேண்டியவர்களென்று இப்பொழுது யாருமில்லை. துருவ்வைக் கடைசி வரையில் பார்க்க முடியாமலேயே மஞ்சுளா போய் விட்டாள். அவள் போகும்



போது சந்தியாவிடம் சொன்னாள். ''என்னுடைய சொத்து முழுவதையும் உன் 'டிரஸ்டுக்கு' எழுதி வச்சுட்டேன். நீ நல்ல காரியம் செஞ்சுகண்டிருக்கே... உன் மாதிரி கொள்கைத் துணிவுடைய நாலு பொண்கள் இருந்தா போறும், நாடு உருப்பட்டுடும். இவ்வளவு சொத்து நான் சேர்த்து வச்சிருக்கேன், எதுக்காக? எனக்கே புரியலே. ஆனா ஒரு நல்ல காரியத்துக்குத் தரேங்கிற சந்தோஷம் எனக்கு... எனக்கென்னமோ துருவ் என்றாவது உன்னைப் பார்க்க வருவான்னுதான் தோணறது...''

சந்தியாவின் அப்பா திடீரென்று குடிப்பதை நிறுத்தி விட்டு அவளுடன் அக் கிராமத்திலிருந்தார். ஒரு மாதந்தான். உறக்கத்தில் போய் விட்டார்.

சாவ்லாவும் அவர் மனைவியும் ஒரே நாளில் இறந்ததுதான் மிகவும் ஆச்சர்யமான சம்பவம். எதற்கெடுத்தாலும் மற்றவர்களைச் சுட்டுத் தள்ளுகிறேன் என்று கோபித்த சாவ்லா, அவர் மனைவியின் 'கான்ஸர்' நோய் துன்பம் பொறுக்க முடியாமல், 'தற்கொலை ஒப்பந்தம்' செய்து கொண்டு 'ஆதர்ச தம்பதியாய்' இறந்தார்கள்.

நல்லவேளை, இக் கிராமத்தில் நிலவும் 'போட்டி மனப்பான்மை' பற்றியோ, அல்லது நகர வாழ்க்கையினின்றும் அது எந்தவிதத்திலும் வேறுபட்டிருக்கவில்லை என்பதோ சாவ்லாவுக்குத் தெரியாது. நல்ல காரியத்துக்காக உதவினோம் என்ற சந்தோஷத்துடனேயே அவர் இறந்தார்.

சந்தியா ஒரு கட்டத்தில் 'இயந்திரமா'னாள். அவளுக்குப் 'பேரும் புகழும்' வந்தன. அந்தக் கிராமத்துக்கு ஏதோ ஒரு உலகச் சமாதான நிறுவனம் பரிசு கூட அளித்தது! ஆனால்... அவளுக்குத்தான் மனச் சமாதானமில்லை. தான் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டிருப்பதாக நினைப்பதே முப்பது வயது மட்டுந்தான் என்று தோன்றியது. அவளையொத்த பெண்கள் சராசரித்தனமான கற்பனையுடன் பணம் தரும் இன்பங்களையே சொர்க்கமென்று நினைத்து வாழ்வதைப் பார்க்கும் போது அவளுக்கு எரிச்சல் ஏற்படத்தான் செய்தது. இதுவே அவளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியதென்பதை அவளால் நினைக்காமலிருக்க முடியவில்லை.

ஆனால்... இன்று... அவள் எப்படி இருக்கிறாள்? அவளைப் பற்றி வாழ்க்கைச் சரிதைகள் கூட பிரகரமாகி விட்டன. அவற்றில் ஒன்று, அவளுடைய முன்னுரையுடன்! அவளால் தவிர்க்க முடிந்ததா?

அவளுக்குத் தேசிய, சர்வதேசிய பட்டங்கள். அவளால் தவிர்க்க முடிந்ததா?

அவள் நடத்தும் 'இலட்சிய கிராமத்தை'ப் போல் பல இடங்களில் 'கிளைகள்' அவளால் தவிர்க்க முடிந்ததா?

எல்லாக் கௌரவங்களும், பட்டங்களும், தன்னுடைய திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவதற்காகத்தான் என்று அவள் தன்னைத்தானே தேற்றிக் கொண்டது எதற்காக?

அவளுடைய சரிதைகளில் பல கற்பனைச் சம்பவங்கள் இருந்தன என்றும் அவளுக்குத் தெரியும். துருவ் என்ற ஒரு பணக்காரப் பையனை நிராகரித்துச் சமூக நலத் தொண்டுக்காக அவள் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள் என்று ஒரு செய்தி. இது முழுவதும் உண்மையா? அவளால் இதை ஏன் மறுக்க முடியவில்லை?

ஏற்பட்டு விட்ட முகத்தை மறுத்தால், அது பொது மக்கள் அபிப்பிராயத்தை அவமானப்படுத்துவது போலாகும். மேலும் இதை மறுப்பதற்கான காரணமும் ஏதுமில்லை. துருவ் இருந்தால், அது ஒரு காரணமாக இருக்கலாம்.

துருவ் இல்லையா? அவளுக்கு எப்படி நிச்சயமாகத் தெரியும்? 'துருவ் என்றாவது உன்னைப் பார்க்க வருவான்' என்று மஞ்சுளா போகும் போது சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. அவனால் எப்படி சுவடின்றி மறைந்து போக முடிந்தது? எங்கே போயிருப்பான்? வீணையைக் கூட விட்டு விட்டு...? அவனைக் கோமளாவின் மரணம் அந்த அளவுக்கா பாதித்தது? கோமளாவைப் பற்றிய கடைசித் தகவல்தான் ஒரு வேளை, அந்த அளவுக்குப் பாதித்ததா? அவன் திடீரென்று யாருடைய 'பாவ மூட்டையையோ தன் முதுகில் சுமப்பதற்கு என்ன காரணம்?

அவளுடைய அந்தரங்கச் செயலர்

''காது வலிக்குன்னு நீங்க கொடுத்த மாத்திரையில் வலி சுத்தமா நின்னு போச்சு டாக்டர்!''

''அப்படியா... இப்ப எதுக்காக வந்திருக்கீங்க...?''

''என்ன டாக்டர் வாயை மட்டும் அசைக்கிறீங்க?''

- அப்துல் பரீது...



பத்ரா உள்ளே வந்தார்.

''குட் ஈவினிங் மேடம்.''

''குட் ஈவினிங்...''

''இப்பொழுதுதான் ராஷ்டிரபதி பவனிலிருந்து ஒப்புதல் வந்தது. நம்முடைய புது கட்டடத்தை ராஷ்டிரபதி திறந்து வைப்பது உறுதியாகி விட்டது. நாள் இன்னும் அதிகமில்லை. நாம் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்...''

''அப்புறம்...?''

''கலை நிகழ்ச்சிக் குழுவில் நான்கு 'குரூப்'புகள் இருக்கின்றன. எல்லாரையும் திருப்தி செய்ய ஏற்றவாறு நீங்கள்தான் நிகழ்ச்சி நிரல் தயாரிக்க வேண்டும்.''

''செய்கிறேன்; அப்புறம்?''

''கழிவுப் பொருள்களிலிருந்து நாம் தயாரிக்கும் எரிவாயுதான் சுற்றுப்புறச் சூழ்நிலைக்குப் பெரும் ஆபத்து என்று ஒரு பிரபல பத்திரிகையில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை வந்தது. அதை உங்கள் பார்வைக்காக உங்கள் மேஜையில் வைத்திருந்தேன். பார்த்தீர்களா?''

''பார்த்தேன்.''

''நாம் அதற்குப் பதில் எழுதியாக வேண்டும்.''

''சரி.''

''கானடாவில் 'வின்னிபெக்'கில் நடக்கவிருக்கும் 'மாதர் உரிமை மாநாட்டு'க்கு நீங்கள் போகப் போவதில்லை என்று சொன்னீர்களாம். அது சரியான முடிவில்லை. நீங்கள் பிரதிநிதிக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கா விட்டால், பல பிரச்னைகள் உருவாகும். யோசியுங்கள்.''

''யோசிக்கிறேன்.''

''இன்று ஏன் இப்படிச் சோர்ந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்?''

சந்தியா பதில் சொல்லவில்லை. சில வினாடிகளுக்குப் பிறகு, ''சரி.. நான் வரட்டுமா?'' என்றார் பத்ரா.

''தாங்க் யு.''

சந்தியா எழுந்து, அறையை விட்டு வெளியே வந்தாள். இன்னும் சூரியன் மறையவில்லை. குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. சௌக்கிதாரைக் கூப்பிட்டுத் தன் அறையைப் பூட்டச் சொன்னாள்.

முன்பு எந்த அறையுமே பூட்டப்படுவதில்லை. ஆனால் திடீரென்று திருட்டுப் போகத் தொடங்கியது. அவள் அறையிலிருந்த 'அந்தரங்க' ஃபைல்கள் காணாமல் போயின. அவ்வமைப்பிலிருந்த சிலருடைய 'திருவிளையாடல்கள்' பற்றிய 'அந்தரங்க ஃபைல்கள்'.



''எழுத்தாளர்கள் கண்டிப்பாகச் சாப்பிட வரக் கூடாது'ன்னு அந்த ஓட்டல்ல போர்டு வச்சிருக்காங்க...!''

''ஏன்...?''

''தோசை ஆர்டர் பண்ணிட்டு... சுட்டு வர்றதுக்குள்ள 'கதையே எழுதி முடிச்சேன்... நாவலே எழுதி முடிச்சேன்'னு வதந்தியைப் பரப்புறாங்களாம்!''

- அ. அப்துல் பரீது.

அப்பொழுதே அவள் வெளியேற வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் தன் தோல்வியை ஒப்புக் கொண்டது போலாகுமென்று அவளுக்குத் தோன்றிற்று. அவள் தோல்வியை ஒப்புக் கொள்வதற்கான துணிவு அவளுக்கில்லை. மனிதன் மீது நம்பிக்கை இல்லை என்பதை ஒப்புக் கொண்டது போலாகும்.

அவள் ஒரு குழு அமைத்து, 'திருட்டை' விசாரிக்க ஏற்பாடு செய்தாள். வெளியிலிருந்து வந்து யாரோ எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டுமென்று குழு அறிக்கை சமர்ப்பித்தது. அவளுக்கு நிச்சயமாகத் தெரியும், 'வெளியார்' யாருக்கும் இதில் அக்கறை இருக்க முடியாதென்று. ஆனால் குழு சமர்ப்பித்த அறிக்கையைக் காரிய கமிட்டி ஏற்றுக் கொண்டது. 'திருவிளையாடல்களில்' ஈடுபட்டவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவளோடு சந்தோஷமாகப் பேசுகிறார்கள். அவளும் சிரித்துக் கொண்டு அவர்களுடன் பேசுகிறாள்.

மனித சுபாவத்தை மாற்ற முடியாது. புத்தர் முயன்றார்; தோற்றார்.

ஏசு முயன்றார்; தோற்றார்.

காந்தி முயன்றார்; தோற்றார்.

அவர்கள் முன் அவள் எம்மாத்திரம்? அவர்களைத் தொடர்ந்து, அவர்கள் பெயர்களைச் சொல்லிக் கொண்டு ஸ்தாபனங்கள் பல உருவாகி, அவர்களுக்கும் ஸ்தாபனங்களுக்குமிடையே உள்ள இடைவெளியை இன்றும் பறைசாற்றி கொண்டிருக்கின்றன.

சந்தியா தன் வீட்டுக்குச் சென்ற போது, இருட்டி விட்டது. மரங்கள் பூதங்களாகி நிழலாடத் தொடங்கி விட்டன.

அவளுடைய பணிப் பெண் ஊர்மிளா ஏதோ ஒரு நாவலைச் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தாள். சந்தியாவைக் கண்டதும் அவள் படித்துக் கொண்டிருந்த பக்கத்தை ஓரத்தில் மடித்து விட்டுப் புத்தகத்தை மூடினாள். புன்னகை செய்தாள்.

''எனக்குச் சாப்பாடு வேண்டாம். பால் போதும்'' என்றாள் சந்தியா.

''ஏன், மேடம்?''

''சின்ன, சின்ன விஷயங்களைப் பற்றிக் கேள்வி கேட்காதே என்று எவ்வளவு தடவை உனக்குச் சொல்வது?''

அவள் சோபாவில் உட்கார்ந்தாள்.

''உங்களைத் தேடிக் கொண்டு ஒருவர் வந்தார், மேடம்...''

''யார்?''

''உயரமாக இருந்தார். பேரைக் கேட்டேன் சொல்லவில்லை... தோட்டத்தில் உட்கார்ந்திருக்கிறார்.''

சந்தியா எதிர்பார்ப்போடு உடனே எழுந்து சென்றாள். துருவ்தான்! புல் தரையில் உட்கார்ந்திருந்தான். தோற்றத்தில் துளிக் கூட மாறுதலில்லை. அவனால் எப்படி அன்று கண்டது போல் இன்றும் இருக்க முடிகிறது?

கைகளைப் பின்பக்கமாக ஊன்றிக் கொண்டு, ஆகாயத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். சந்தியா அவனருகில் போய் நின்றாள். அவன் ஏறிட்டு நோக்கினான். புன்னகை செய்தான்.

''நீங்க என்றாவது ஒருநாள் வருவீங்கன்னு உங்கம்மா சொன்னா...'' என்றாள் சந்தியா.

துருவ் பதில் சொல்லவில்லை.

''என்ன செஞ்சுண்டிருக்கீங்க, இப்போ?''

''மத்திய பிரதேசத்திலே ஒரு கிராமத்திலே வயல்லே வேலை செய்யறேன். என் உடம்பைப் பார்த்தா தெரியலியா?''

சந்தியா சுற்று முற்றும் பார்த்தாள். அவள் முன்னால் தெரிந்த எல்லாக் கட்டடங்களும் பாழடைந்தவையாய் அவளுக்குத் தோன்றின.

அவன் வெறும் குர்த்தாவும், பைஜாமாவும் அணிந்திருந்தான். உடம்பு உரமேறியிருந்தது.

''இப்போ செய்யறது உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்றாள் சந்தியா.

''உனக்கு நீ செய்யறது பிடிக்கிறதா?''

சந்தியா மௌனமாக நின்றாள்.

''எனக்கு இந்த மௌனத்துக்குத்தான் அர்த்தமிருக்கிறதாப் படறது,'' என்றான் துருவ்.

(முற்றும்)

தேவை: டென்னிஸ் அரசியல்

டென்னிஸ்ஸில் அதிக நாட்டம் இல்லாதவர்கள் கூட, ஃபிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டி இறுதி ஆட்டத்தை டீ.வி. யில் பார்த்து ரசித்திருக்க முடியும். காரணம், இரு ஆட்டக்காரர்களும் காட்டிய தீவிரம். கூரியர் நடுவரிடம் ஒரு தருணத்தில் சண்டை போட்டதும் அகஸ்ஸி அடிக்கடி எச்சில் துப்பியதும் கொஞ்சம் அருவருப்பை ஏற்படுத்தினாலும் இருவரும் ரோஷத்தோடு ஆடியது நமது பாராட்டைப் பெற்றது. ரோஷத்தோடு ஆடினாலும் டென்னிஸ் விதிகளைக் கடைப்பிடித்து ஆடினார்கள். மரபுகளை மீறாமல் செயல்பட்டார்கள்.

இருவரில் ஒருவர்தான் ஜெயிக்க முடியும். தெரிந்த கதை. எனவே, கூரியர் வென்றார் என்பதை விட வென்ற பிறகு என்ன சொன்னார் என்பது முக்கியம்: ''அகஸ்ஸி தோற்றது அவரது துரதிர்ஷ்டமே. என் அதிர்ஷ்டம் எனக்குச் சில பாயிண்டுகள் கூடுதலாகக் கிடைத்தன. அகஸ்ஸி ஆட்டத்தில் வல்லவர். அவருக்கும் ஒரு காலம் வரும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். மிக நன்றாக ஆடிய அவருடைய இப்போதைய மனநிலையை என்னால் உணர முடிகிறது. இன்று அவர் வென்றிருந்தால் நான் என்ன எண்ணுவேன்? அடுத்த முறை வெற்றி பெற இன்னும் தீவிர முயற்சியில் இறங்க வேண்டும் என்றுதான் நினைப்பேன். அதே போல்தான் இப்போது அவரும் நினைப்பார். என்னை விட அதிகத் தீவிரமாகப் பாடுபட உறுதி பூண்டிருப்பார். அவருக்கு என் வாழ்த்துக்கள்!''

எவ்வளவு பெருந்தன்மை! டென்னிஸ் ஆட்டத்தை ரசிக்க முடியாதவர்கள் கூட இந்த அருமையான வார்த்தைகளை நிச்சயம் ரசிப்பார்கள். தேர்தல் என்பதும் ஒரு டென்னிஸ் ஆட்டம் போன்றதே என்பதை நமது அரசியல் தலைவர்கள் புரிந்து கொண்டால் கூரியரைப் போலவே பெருந்தன்மையுடன் பேசுவார்கள்; நடந்து கொள்வார்கள். தோற்றவரை வென்றவர் வாழ்த்தி, ''பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்'' என்பார்கள். வெற்றியை விட அதை அடைவதற்கான முயற்சிதான் முக்கியம் என்பதை உணர்ந்து செயல்படுவார்கள். பார்க்கப் போனால் டென்னிஸ்ஸிலாவது தோல்வி என்பது உண்டு. ஜனநாயகத் தேர்தலில் தோல்வி என்பதே கிடையாது. தோற்றவருக்கு ஆட்சி அமைப்பதை விட அதிமுக்கியமான எதிர்ப்புப் பணி காத்திருக்கிறது. ஆக, இரு தரப்பினருமே கண்ணியமாக நடந்து கொண்டு, மக்களையும் கட்சி துவேஷத்திலிருந்து மீட்டு, நட்பு நிலைக்கு உயர்த்தலாம். வாய்ப்பிருக்கிறது.

ஆனால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாததுடன் வாயில் வந்தபடியெல்லாம் பேசியல்லவா நம்மையும் ஜனநாயகத்தையும் வதைக்கிறார்கள்! ''ராஜீவ் திரும்பிப் போவாரா பார்க்கலாம்'' என்று கோபாலசாமி பேசியதாக ஒரு குற்றச்சாட்டு எனில், ''எங்களுக்கு எதற்கு அனுதாப அலை? அனுதாப அலை தேவையெனில் நாங்களே ராஜீவைக் கொன்றிருப்போமே'' என்று நெடுஞ்செழியன் பேசியதாக இன்னொரு' குற்றச்சாட்டு! ''ராஜீவ் யார் அழைத்து ஸ்ரீபெரும்புதூர் வந்தார்?'' என்றால் ''நான் இல்லை''; ''நான் இல்லை''; ''நான் இல்லவே இல்லை!'' என்று ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் ஒதுங்குகிறார். ''யாருமே அழைக்காமல் வந்தாரா?'' என்றால் அதற்குப் பதிலே இல்லை!

தமிழகத்தில் இப்படி பலப்பல அநாகரிகங்கள் என்றால், ஆந்திராவிலோ, என்.டி. ஆரின் பாதுகாப்புக்குத் துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர் கை தவறுதலாகத் துப்பாக்கியை இயக்கி, அப்பாவி மக்கள் பலரைப் பலிவாங்கி விடுகிறார். ஏன் இந்தச் சோகம்? தேர்தல் என்றால் உயிர்ப் பலி கொடுத்துத்தான் ஆக வேண்டுமா? எங்கே போகிறோம் நாம்? தலைவர்களே கைதிகள் போல் இத்தனை பாதுகாப்புடன்தான் இருக்க வேண்டும் என்றால் ஜனநாயகம் என்பதன் அர்த்தம்தான் என்ன?

பஞ்சாபோ, அஸ்ஸாமோ, காஷ்மீரோ அல்லது ஈழமோ, அராஜகம் ஒழிய வேண்டும், வன்முறை நீங்க வேண்டும் என்றால் அதற்கு ஏந்த வேண்டிய ஒரே ஆயுதம் அன்பு. நமது உள்ளத்தில் அன்பு பெருகினால்தான் எதிராளியின் உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடியும். எதிராளியின் உள்ளத்தைப் புரிந்து கொள்பவன்தான் அவனை மெய்யாலும் வெற்றி கொள்ளவும் முடியும்.

கூரியரின் உள்ளத்தில் அன்பு இருந்ததால்தான் அகஸ்ஸி மனத்தைப் புரிந்து கொண்டு அத்தனை அழகாக ஆறுதல் கூறினார். அவர் வெற்றியும் அழகு பெற்றது.

அமிதாப்பச்சன் காங்கிரஸ் தலைவரானால்...?



◆ ஆயா. கயா அரசியல்



◆ ''ஸி. ஐ. ஏ. காரணம்''



◆ கண்ணிய அரசியல்

★ கே. பாலமுருகன், சித்தாத்தூர்.

? 'கட்சித் தாவல் தடுப்புச் சட்டம் அவசியமில்லாதது' என்கிறாரே, தேவிலால்?

! ஆயாராம், கயாராம் அரசியலின் பிதாமகர் நொந்து கொள்வதில் ஆச்சர்யம் இல்லை.

★ பி. சிவகுமார், குஞ்சரம் ★

? சந்திரசேகர், வி. பி. சிங் ஆகியோர் காங்கிரசின் பரம்பரைத் தலைமை பிடிக்காமல் பிரிந்தவர்கள்தானே? அவர்கள் அனைவரும் இணைந்து ஏன் பி. ஜே. பி.யை எதிர்க்கக் கூடாது?

! எதிர்காலத்தில் இப்படித்தான் நடக்கப் போகிறது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் எதிர்க்கட்சியாக விளங்கினால் இந்த இணைப்பு துரிதப்பட வாய்ப்பு அதிகம். ஆளும் கட்சியானால் பதவிப் போட்டி பலமாக இருக்குமாதலால் இவர்களை உள்ளே விடப் பயப்படுவார்கள். இணைப்பு தாமதப்படும்.

★ க. இராஜரத்தினம், இராமநாதபுரம்.

? 'இலங்கை அகதிகளை ஒட்டுமொத்தமாகத் திருப்பி அனுப்புவது மனிதாபிமானம் அல்ல' என்று தலையங்கம் குறிப்பிடுகிறது. சரி, ஆனால் அவர்களில் பயங்கரவாதிகளை அடையாளம் கண்டுகொள்வது எப்படி?

! இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. முதலாவது, வருகின்ற அகதிகளைக் கண்காணித்து, பயங்கரவாதிகளை இனம் கண்டு தனிமைப் படுத்துவது. இதற்குத்தான் போலீஸ், துப்பறியும் துறை முதலியன உள்ளன. இந்த அமைப்புக்களுக்குத் திறமை போதவில்லை எனில் திறமையை அதிகப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இரண்டாவது, என்னதான் திறமையான போலீஸ் - நிர்வாகம் இருந்தாலும் பயங்கரவாதிகளை - பசுத்தோல் போர்த்திய புலிகளை - முற்றிலும் வெற்றி காண்பது இயலாது. எனவே இதற்கு முந்தைய தலையங்கத்தில் எடுத்துக் காட்டியது போல, தீர்வு ஏ. கே. 47 அல்ல; அரசியல் தீர்வுதான் ஏற்றது. பயங்கரவாதத்துக்கே அவசியம் இல்லாத சூழலை, அகதிகள் திரும்பிப் போக ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும். ஆனால் நம் தலைவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் 'கொலைகாரன், சதிகாரன்' என்று அபத்தமாகவும் தரக்குறைவாகவும் குற்றம்சாட்டிக் கொண்டிருந்தால், அண்டை நாட்டில் அரசியல் தீர்வு ஏற்படுத்த தார்மீக பலத்தை எப்படிப் பெற முடியும்?

★ க. தியாகராஜன், நெய்வேலி.

? அண்ணா அறிவாலயத்தில் பிரசார வேனுக்குத் தி. மு. க. காரர்களே தீ வைத்துக் கொண்டதாக ஜெயலலிதா கூறுகிறாரே?

! இதை மட்டுமா சொல்கிறார்? 'ராஜீவ் கொலைக்கு ஸி. ஐ. ஏ. காரணம்; அமெரிக்க ஆதரவாளரை விசாரியுங்கள்' என்கிறார். 'தேர்தல் நடக்காதிருக்க வன்முறை சதி' என்கிறார். அவரோடு போட்டி போட்டுக் கொண்டு ப. சியும் தம் பங்குக்கு, 'மு. க. - புலிகள் ரகசிய சந்திப்பு' என வதந்தி பரப்புகிறார். ஆனால் யாருமே வாழப்பாடியாரை இவ் விஷயத்தில் வெல்ல முடியாது! லேட்டஸ்ட்: 'மை அடையாளத்தை அழிக்க மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது!' ஆக மொத்தம், நம் தலைவர்கள் எல்லோருக்குமே கொள்கைகள், திட்டங்கள் அடிப்படையில் மக்களைக் கவர முடியும் என்ற நம்பிக்கை போய் விட்டது. தேர்தல் பிரசாரம்

வெறும் அபத்தப் பிரசாரமாகி விட்டது.

★ கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? மூப்பனாரைப் பற்றிச் சில வரிகள்?

! எந்தச் சூழ்நிலையிலும் நிதானம் தவறாதவர். பரபரப்புக்காக அறிக்கைகள் விடாதவர். கண்ணியமான அரசியல் என்றால் என்ன என்று அறிந்தவர்.

★ அ. பரக்கத் அலி, மாப்பிள்ளை குப்பம்.

? அமிதாப்பச்சன் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்?

! 'உயர்ந்த' தலைவராக இருப்பார்!

★ கா. ராமச்சந்திரன், திருத்துறைப்பூண்டி.

? 'தமிழனுக்குச் சதியில் தொடர்பு இருக்கிறது என்றால் ஒட்டுமொத்தமாகத் தமிழர் மீது வெறுப்பு அனைத்திந்திய யாவிலும் ஏற்படும்' என்று தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. தமிழன் சம்பந்தப்பட்டி ருந்தால் மூடி மறைத்து விட வேண்டுமா?

! அதற்கு முந்தைய வரிகளையும் படியுங்கள், ஸார்! 'குற்றவாளி யாராயிருந்தாலும் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டியதுதான்' என்று தெளிவாகவே எழுதப்பட்டிருக்கிறதே! ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை ஒருவர் மீது ஒருவர் வீசி, தமிழன் தரத்தைத் தாழ்த்தி நாட்டின் பிற பகுதிகளில் உள்ளோருக்கு நம் மீது வெறுப்பு வளரச் செய்ய வேண்டாம் என்பதே வேண்டுகோள்.

★ அ. க. கிருஷ்ணன், சென்னை.

? ராஜீவின் படுகொலை பற்றித் துப்புத் துலக்க நாங்கள் வேண்டுமானால் உதவி புரியத் தயார்' என்று கிட்டு கூறுகிறாரே?

! வேலிக்கு ஓணான் சாட்சி என்பது ஒருபுறமிருக்க, புலிகளின் லண்டன் தலைமைதானே பேசுகிறது; ஈழத் தலைமை என்ன சொல்கிறது என்றே தெரியவில்லையே!

★ என். குப்புசாமி, கோவை.

? 'ஒரு தமிழனுக்குச் சதியில் தொடர்பு என்றால் அனைவருக்கும் தலைகுனிவு' என்கிறீர்கள் தலையங்கத்தில். தனிமனிதன் ஆட்டோ சங்கர் செய்த குற்றம் தமிழர் அனைவருக்கும் பொருந்துமா?

! மனித உயிர் என்பது எல்லோருக்கும் ஒன்றுதான் என்றாலும் ராஜீவ் காந்தியும் ஆட்டோ சங்கரால் கொல்லப்பட்டவர்களும் ஒன்றாகி விட மாட்டார்கள். இந்திரா காந்தி கொல்லப்பட்ட போது தில்லியில் சீக்கியருக்கு நேர்ந்தது, இன்று தமிழனுக்கு அங்கு நேரவில்லை என்றால் காரணம் என்ன? யோசியுங்கள்!

★ கே. ஏ. காளிமுத்து, இராணிப்பேட்டை.

? 'தி. மு. க. அரசை நீக்கியது சரிதான் என்று ராஜீவ் காந்தி கொலை நிரூபித்து விட்டது' என்று சந்திரசேகர் கூறியிருப்பது குறித்து?

! தமது தவறான ஒரு செயலை நியாயப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் அவர் வேறு எப்படிப் பேசுவார்? 'எங்கள் ஆட்சியில் எட்டு முறை ராஜீவ் தமிழ் நாட்டுக்கு வந்து, எந்த ஆபத்துமின்றித் திரும்பிச் சென்றார்' என்று கருணாநிதி சொல்லியதற்குத் தாற்காலிகப் பிரதமர் பதில் கூறட்டும்!

★ எஸ். ராம்கோபால், சென்னை.

? கருணாநிதி ஆட்சி செய்யும் போதும்தான் கோடம்பாக்கம் படுகொலைகள், ஆட்டோ சங்கர் தப்பித்தது எல்லாம் நடந்தது. அப்போது அவர் பதவி விலக வேண்டும் என்று கூறாத நீங்கள், இப்போது கவர்னர் ஆட்சியில் ராஜினாமா பிரச்னையை எழுப்புகிறீர்களே?

! கருணாநிதி ஆட்சியில் நடந்த இதுபோன்ற சம்பவங்களுக்கு அந்த அந்த சந்தர்ப்பங்களில் கண்டனங்களைக் கல்கி தெரிவித்துத்தான் இருக்கிறது. தவறுகள் நடக்காத ஆட்சியே இருக்க முடியாது. அதற்காகப் பெரும்பான்மை பலமுள்ள ஆட்சியை டிஸ்மிஸ் செய்வது நியாயம் என்றால், அப்படிச் செய்தவர்கள் இப்போது நடந்துள்ள இமாலயக் குற்றத்துக்கு என்ன பதில் கூறப் போகிறார்கள்? யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்? யார் யாரை டிஸ்மிஸ் செய்வது? என்பதே கேள்விகள். பதில் கூற யாருமே முன்வரவில்லையே!



◆ காங்கிரஸ் தலைவரானால்



◆ நிர்ப்பந்தப் பேச்சு

★ ரூ. 20 பரிசு பெறுபவர்:

பி. வேகுமார்,
குஞ்சரம் 607 201
தெ. ஆ.
மாவட்டம்.



சினிமா சான்ஸ் கிடைத்ததாம்; மறுநாளே ஷூட்டிங்காம்!

விசு

• கோடம்பாக்கம் சினிமா உலகம் என்பது தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய வியாபாரச் சந்தை.

அங்கே பணத்தை வைத்துக் கொண்டு திறமையை வாங்க அலைபவர்கள் ஏராளம்.

அதே போல திறமையை வைத்துக் கொண்டு பணம் இருப்பவர்களைத் தேடி அலைபவர்களும் ஏராளம்.

ஆனால் பரிதாபம்!

பல சமயங்களில் பணமும் திறமையும் சந்திப்பதே கிடையாது. அப்படிச் சந்திப்பது மகாமஹம் - குறிஞ்சி மலர். ஆக, கோடம்பாக்கம் மிகப் பெரிய வியாபாரச் சந்தையாக இருந்தாலும் அங்கே பெரும்பாலான வியாபாரம் தப்பான வியாபாரமாகத்தான் முடிகிறது.

ஆனாலும் வருடத்துக்கு ஒரு படம், சூப்பர் ஹிட்டாக அமைந்து விடுவதால் வேகமும், மோகமும், தாகமும் எல்லோருக்கும் அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது.

அந்தச் சந்தைக்குள் 1969 இல் உள்ளே நுழைய ஆசைப்பட்டவன் நான், வியாபாரப் பொருளாக. ஆனால் என்னைப் பொறுக்கியவர் 1981 இல்தான் ''பரவாயில்லையே! இந்தச் சரக்குக் கூடச் சுமாராக இருக்கும் போல இருக்கிறதே'' என்று கையில் எடுத்தார். அந்தப் பன்னிரண்டு வருடங்கள் என் பளபளப்பை, மினுமினுப்பைப் போற்றிக் காக்க நான் பட்ட கஷ்டம்? அம்மம்மா!

கதாசிரியனாக, நடிகனாக, இயக்குனராக இடைப்பட்ட பன்னிரண்டு ஆண்டுகளில் மூவாயிரம் மேடைகள் கண்டிருந்தாலும், நாமாக யாரையும் அணுகக் கூடாது என்ற வைராக்கியத்துக்கு ஒரு வலுவான காரணம் இருந்தது.

ஒருநாள் இரவு எனது நண்பன் ஒருவன் ஓடோடி வந்தான். அவன் ஒரு தயாரிப்பாளரின் உறவினன். என் குழுவில் நடிகன். அந்தத் தயாரிப்பாளரை ஓயாமல் வேடத்துக்காகத் தொந்தரவு செய்திருப்பான் போலும்.

அவரும் கடைசியாக மனமுவந்து அவனுக்கு மட்டுமல்ல, அவனையும் சேர்த்து நான்கு நண்பர்களுக்கு வேடம் தர ஒப்புக் கொண்டிருக்கிறார். மறுநாளே ஷூட்டிங்காம். முக்கியமான கண்டிஷன்: நாங்களே டிரஸ்ஸோடு வந்துவிட வேண்டும்.

''நான்தான் - நான்தான்'' என்று சண்டை போடும் குழு அல்ல எங்கள் குழு. ''நீ போ - நீ போ'' என்று விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டது.

இரவு 12.15 க்கு யார் அந்த நான்கு பேர் என்று முடிவாகியது. அவர்களில் ஒருவன் நான். மற்ற மூன்று பேர் பெயரையும் எழுதி, அவர்கள் மானத்தையும் வாங்க விரும்பவில்லை.

நள்ளிரவில் உடைகள் தேடும் படலம்! காலையில் ஷூட்டிங் அல்லவா? எங்கள் உடைகள் எங்களுக்கே திருப்தி அளிக்காத நிலையில் மோட்டார் சைக்கிள்கள் நண்பர்கள் வீடுகளுக்கு நாலாபுறமும் பறந்தன.

அதிகாலை மூன்று மணிக்குப் படுத்தாலும் தூக்கம் வரவில்லை. காலை ஆறு மணிக்குப் பனகல் பார்க்கில் ஷூட்டிங் என்று இயக்குனர் சொல்லி இருக்கிறாரே. ஒரு வேளை பார்க்குக்குள் பாட்டு, நடனம் என்று சொல்லி விடுவார்களா? நமக்கு டான்ஸ் ஆட வராதே என்பது போன்ற பயங்கள் அச்சுறுத்திக் கொண்டிருந்தன.

காலையில் குளித்து, ஜக்காக டிரஸ் செய்து கொண்டு, செண்ட் இல்லாத காரணத்தால் யூடிகொலோன் பாட்டிலைச் சட்டையில் கவிழ்த்துக் கொண்டு மோட்டார் சைக்கிளை உதைக்கும் போது மணி 5.10.

பனகல் பார்க்கை அடையும் போது மணி 5.40. என்ன ஆச்சர்யம், மற்ற மூன்று நண்பர்களும் எனக்கு முன்னமேயே அங்கு வந்து விட்டார்கள்! 'குட் மார்னிங்' என்று சொல்வதற்குப் பதிலாக 'நான் வேட்டா? நான் வேட்டா?' என்று பதறிக் கொண்டே

மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். அது அர்த்தமற்ற கவலை என்று சீக்கிரமே தெரிந்தது. ஏனெனில் யூனிட்டைச் சேர்ந்த ஒரு ஈ காக்கை கூட இன்னும் வரவில்லை!

மணி ஏழாகி விட்டது. பொறுக்க முடியாமல், நண்பனை வற்புறுத்தி, புரொடக்ஷன் ஆபீஸுக்கு டெலிபோன் செய்யச் சொன்னோம். எதிர்ப் பக்கத்தில் இருந்து ஒருவர் சொல்லி இருக்கிறார்: ''வந்து விட்டீர்களா? வெரிகுட். அங்கேயே இருங்கள். யூனிட் வந்து கொண்டிருக்கிறது.''

''ஆகா யூனிட் வருகிறது! கதாசிரியர் வரப் போகிறார்; கதையைச் சொல்லப் போகிறார்! இயக்குனர் வரப் போகிறார்; எப்படிக் கதாபாத்திரத்தை அணுக வேண்டும் என்று சொல்லப் போகிறார்! காமிரா மேன் வரப் போகிறார்; காமிரா ஓடப் போகிறது! படம் வரப் போகிறது; ஜன சமுத்திரம் அந்தப் படத்தைப் பார்க்கப் போகிறது! நாம் பேரும் புகழும் அடையப் போகிறோம்! கதாநாயகி ஜெயலலிதாவா? கே. ஆர். விஜயாவா...?

எட்டரை மணிக்கு டிபன் வண்டி வந்த போது கற்பனை தடைப்பட்டது. நட்ட நடுரோடில் எங்களுக்கு டிபன் பொட்டலம் நீட்டப்பட்டது. புது அனுபவம். ''வேணாம் சார். நாங்க ஓட்டல்லே சாப்பிட்டாச்சு!'' அண்டப் புளுகு. அசட்டுக் கௌரவம்.

அவுட்டோர் யூனிட் வேன் வந்தது. லைட், டிராக், டிராலி, ரிப்ளக்டர்ஸ் போன்ற சினிமா சாதனங்கள் நடுரோட்டில் இறக்கப்பட்டன. போவோர் வருவோர் நின்று, எங்களை அணுகி, ''என்ன சார் ஷூட்டிங்கா?'' என்றார்கள். 'ஆமாம்' என்றோம் பெருமையாக. ''என்ன படம்?'' என்றார்கள். எங்களுக்குப் பெயர் தெரியவில்லை. விழித்தோம். ''யார் ஹீரோயின்?'' என்றார்கள். குழம்பினோம். ''யாரெல்லாம் நடிக்கறாங்க?'' என்றார்கள். மௌனமாக இருந்தோம். அடுத்த கேள்வி எங்களைத் தூக்கிவாரிப் போடச் செய்தது: ''ஓஹோ, நீங்களும் எங்களை மாதிரி ஷூட்டிங்கை வேடிக்கை பார்க்க வந்திருக்கீங்களா?'' க்ளீன் போல்டு!

8.45 மணிக்கு உதவி இயக்குனர்களும் மற்ற சில தொழில்நுட்பக் கலைஞர்களும் வர, டென்ஷன் அதிகமாகியது. கிட்டத்தட்ட ஒன்பது மணிக்குக் கதாசிரியர், காமிராமேன், இயக்குனர் மூவரும் ஒரே காரில் வர, சிலிர்த்து நின்றோம். நாவில் நீர் வரள, தொண்டைக் குழிக்குள் யாரோ கோலி ஆடினார்கள்!

கதாநாயகி வீதியில் காரில் வந்து இறங்குவாளாம். அவளைக் கதாநாயகன்



'அந்தக் கடைக்குள் நுழையாதீர்கள்' எனத் தடுப்பானாம். இதுதான் காட்சியாம். அப்படி என்றால் நாங்கள் நால்வரும் யார்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்? தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒரு உதவி இயக்குனரை அணுகி, நாங்கள் தயாரிப்பாளரின் சிபாரிசில் வந்தவர்கள் என்பதைச் சொல்லி, ''நாங்கள் யார்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்க, ''கதாநாயகி கடைக்குள்ளே போவதை இந்த ஆளு ஏன் தடுக்கறார்'னு யோசித்தபடி நீங்க வேடிக்கை பார்க்கணும்'' என்று பதில் சொன்னவர், ''ஏம்பா குறைஞ்சது இருபது

✦ அகாலி

டென்னிஸ் சிப்ஸ்



OO முப்பதேழு ஆண்டுகளுக்குப் பிறகு பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் இரு அமெரிக்க டென்னிஸ் வீரர்களே மோதிக் கொண்டார்கள்.

OO கூரியர், ஆகாஸி இரண்டு பேருமே ஃப்ளோரிடாவில் இருக்கும் நிக் போலெட்டரி டென்னிஸ் அகாடமியின் தயாரிப்புக்கள். இங்கே உருவான இன்னொரு டென்னிஸ் ஸ்டார் மோனிகா செலஸ்!

OO நீண்ட முடி, தலைப்பட்டை, காதில் தொங்கட்டான், கழுத்தில் தங்கச் செயின் என்று, பார்ப்பதற்கு ஹிப்பி போன்ற தோற்றம் உடையவர் ஆகாஸி. இந்த ஆண்டு விம்பிள்டனில் ஆடப்போவதாய்க் கூறியுள்ளார் ஆகாஸி. விம்பிள்டனின் கடுமையான வெள்ளை உடை விதி பற்றி நினைவூட்டினால், ''பொறுத்திருந்து பாருங்கள்'' என்கிறார்.

OO ஜிம் கூரியரின் டென்னிஸுக்கு அஸ்திவாரம் அவர் சிறு வயதில் ஆடிய பேஸ் பால் தான். பேஸ் பால் ஆட்டக்காரராகவே நீடித்திருந்தால் இப்போதை விட மிக அதிகமாகச் சம்பாதித்திருப்பார். ஆனால் பேஸ் பால் ஆடுவதற்கு டாட்டா காட்டி விட்டு, பதின்மூன் றாம் வயதில் டென்னிஸ் ஆட ஆரம்பித்தவர், ''அதற்காக நான் வருந்தவில்லை'' என்கிறார்.

OO மார்டினா, மோனிகா செலஸ் உட்பட பல டாப் டென்னிஸ் வீராங்கனைகள், 'டென்னிஸில் பரிசுத் தொகையை, ஆண்களுக்கு இணையாய்ப் பெண்களுக்கும் உயர்த்த வேண்டும்' என்று குரலெழுப்பி வருகிறார்கள். ஆனால் ஸ்டெஃபி கிராப், 'இதை ஒரு பெரிய பிரச்னையாய் ஆக்கவேண்டிய அவசியமில்லை' என்கிறார்.

OO ஆட்டத்தின் போது பந்தை அடிக்கும் சமயம் ஆ.... ஊ.... என்று உச்ச ஸ்தாயியில் குரலெழுப்புவது மோனிகா செலஸின் 'மேனரிஸம்'!

OO மோனிகாவிடம் தோற்று விட்ட அரண்ட்ஸா சாந்செஸுக்கு டென்னிஸ் ரசிகர்கள் சூட்டியுள்ள செல்லப் பெயர் ''குள்ள வாத்து''! ஆடும் போது, இரண்டாவது பந்தைத் தம் முதுகுப்புறம் ஸ்கர்ட்டில் செருகி வைத்துக் கொள்வது இவர் பழக்கம்!

தொகுப்பு : ஜூலி

பேராவது வேடிக்கை பார்க்கிற கும்பல்லே நிக்கணும்னு டைரக்டர் சொல்லிட்டாரு. தயாரிப்பாளர் நாலு ஆர்வக் கோளாறுகளைப் பிடிச்சிட்டார். மீதி பதினாறு பேரைப் பிடியுங்கப்பா'' என்று கட்டளை பிறப்பித்தார்.

அவ்வளவுதான், பேப்பர் வாங்க வந்தவன், டீ குடிக்க வந்தவன், காய்கறி வாங்க வந்தவன் என்று ஆட்களைப் பிடித்து ஒரே நிமிஷத்தில் இருபது, முப்பது பேரை எங்களுடன் சேர்த்து நிற்க வைத்து விட்டார்கள். அவர்கள் காமிராவில் தங்கள் முகம் வந்தாக வேண்டும் என்ற வெறியில் அரை நொடியில் எங்களைப் பின்னுக்குத் தள்ளி முன்னுக்குச் சென்று இடம் பிடித்து விட்டார்கள்!

கூலிங் கிளாஸ் போட்ட கதாநாயகி காரில் வந்து இறங்கினார். ஆனால் அது யார் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் எங்களுக்கு இல்லை. தயாரிப்பாளர் வருவதற்குள், ஹீரோ வருவதற்குள், அந்தக் கூட்டத்திலிருந்து யாருக்கும் தெரியாமல் நைஸாக விலகி, எதிர்த் திசையில் நடக்க ஆரம்பித்து, மோட்டார் சைக்கிள்களை உதைத்தோம்...

ஒன்று மட்டும் நிச்சயம்.

அன்று எல்லோருக்கும் முன்னால் சென்று நாங்கள் காத்திருந்த போது இருந்த ஆர்வம், இன்று அனைவரும் காத்திருக்கும் போது நான் சென்றாலும், இல்லை. ஏனெனில் அது நிஜமான ஆர்வம். இன்று நிழலான ஆர்வம்.

இன்று பல லட்சங்கள் முதலீடு செய்து, நான் எடுத்த ஒரு படம் தோல்வி அடையும் போது ஏற்படும் ஏமாற்றம், அன்று நாங்கள் 'வெறும் வேடிக்கை பார்க்க வரும் கூட்டமாகத்தான் கருதப்பட்டோம்' என்று உணர்ந்த போது ஏற்பட்ட ஏமாற்றத்தை விட அதிகமில்லை. ஏனெனில் அது நிஜமான ஏமாற்றம். இது நிழலான ஏமாற்றம்.

(நிழல்கள் தொடரும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: பீரஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
அரை மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.

செரிலாக்


நாள் முழுவதும் அருந்திட சமநிலைச் சத்துணவு

மெனு

உங்கள் குழந்தைக்கு எப்போதும் செரிலாக் வீட் உணவின் நற்பலன்களை அளித்து வருகிறீர்கள். ஆனால் இப்போது உங்கள் குழந்தைக்கு 6 மாதங்களாகிவிட்டதால், குழந்தை உணவில் புதிய சுவைகளை அறிமுகப்படுத்த இதுவே ஏற்ற பருவம். ருசிமிகுந்த, ஊட்டச் சத்துக்கள் சமனிலையிலுள்ள செரிலாக் உணவு வகைகளான-செரிலாக் வீட்-ஆரஞ்சு, செரிலாக் வீட்-வெஜிடபிள், செரிலாக் வீட்-ஆப்பிள் –ஒவ்வொன்றும் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய முக்கிய ஊட்டச் சத்துக்களும், தாதுப் பொருட்களும், வைட்டமின்களும் சரியான சமனிலையில் கலந்த முழுமையான உணவு. உங்கள் குழந்தைக்கு பரவசமூட்டும் சுவைகளை வகைவகையாக அளிக்கும் ஏற்றதொரு மெனு. இரண்டு வயது வரையிலும், அதற்கு அப்புறமும் தொடர்ந்து தரக்கூடிய மெனு.

உதயவேளை உற்சாகத்திற்கு

காலைச் சிற்றுண்டிக்கு, செரிலாக் வீட்-ஆரஞ்சின் பழச் சுவை நற்பலன்களை உங்கள் குழந்தைக்கு கொடுக்கலாம். பொறுக்கி எடுக்கப்பட்ட ஆரஞ்சுச் சுவைகளை, கோதுமை மற்றும் பாலுடன் கலந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்டது. உங்கள் குழந்தையின் நாள் சுறுசுறுப்பாகத் தொடங்கிட உதவும் முழுமையான உணவு.



மதிய உணவின் மனநிறைவு

மதிய உணவின்போது மற்ற எல்லாரையும் போல, உங்கள் குழந்தைக்கும் காய்கறிகள் தேவை. பசுமையான கேரட்டுகள் மற்றும் தக்காளியின் நற்பலன்களை கோதுமை மற்றும் பாலுடன் கலந்த செரிலாக் வீட்- வெஜிடபிள். உங்கள் குழந்தைக்குக் கிடைப்பதோ திருப்தியான மதிய உணவு.



அந்திவேளை ஆனந்தம்

நாள்முழுக்க விளையாடிக் களைத்த குழந்தைக்கு அந்தி வேளையும் அருமையான விருந்து தேவை. சற்றே வித்தியாசமான உணவு கிடைத்தால் குழந்தைக்குப் பரவசமாகும். இருக்கவே இருக்கிறது செரிலாக் வீட்-ஆப்பிள். ஆப்பிள் பழங்கள், பால் மற்றும் கோதுமையுடன் கலந்த அற்புதச் சுவை. உங்கள் குழந்தைக்கு வித்தியாசமான விருந்து.



பேக்குகளின் மீதுள்ள குறிப்புகளைப் பின்பற்றுக.
நெஸ்லேயின் தரமான தயாரிப்புகள்



உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம் - ஒவ்வொரு வேளை உணவிலும்

Registered as Newspaper in Srilanka

